கலைமன்றம்

ஆசிரியர் : பால்வண்ணன்



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 JUN 1955
MADRAS

S

மே 14 1955 4 அணா

கலைமன்றம்

ஆசிரியர் : பால்வண்ணன்

இதனுள்

கார்ட்டூன்		2
பாராட்டுகிறோம்	(தலையங்கம்)	3
குறளின்பம்		5
பேசும் பிணம்		9
ஏன்......?		15
அழகு எரிந்தது		17
ஏடு நாடு வோருக்கு		25
முத்து		29
மராட்டிய குல மகிபன்		33
புகைப் படக் கலைப்பகுதி		47
இன்பக் கண்ணீர்		49
ராமுவும் முத்துவும்		54
பித்தம் தெளிய மருந்து		57
காதல் உள்ளம்		65
மலர்க்காடு		71
திரை அரங்கம்		73
உலக அரங்கம்		75
கழகச் செய்திகள்		76
கேளுங்கள்		79

மலர் 2 — மே 14 — இதழ் 20

கதை, கவிதை, நாடகம் கற்பனை.

திராவிடர் முற்போக்கு வார இதழ்

அமெரிக்க உதவி வேண்டாம் என ஆச்சாரியார் பேசுகிறார்.
அதே சமயம் மத்திய சர்க்கார் 7,20,000 டாலர் வாங்கியிருக்கிறது.

7 - AUG 1956

கலை மன்றம்

ஆசிரியர் : பால்வண்ணன்

சென்னை | 14—5—55 | சனி

பாராட்டுகிறோம்

மே முதல் நாள் சென்னைக் கடற்கரை கண்டிராத கூட்டம் கூடிப் புதுச் செயலாளரைப் புதிய ஆர்வத்துடன் பொங்கி எழும் கடலின் ஆரவாரத்தைத் தோற்கடிக்கும் வகையில் குரலாரவாரத்தை எழுப்பிக் காட்டினர் சென்னைத் தோழர்கள்!

புதிய பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களைப் பாராட்டி எல்லாக் கிளைக் கழகங்களும், மரியாதை செய்து வர வேற்றன. இந்தக் கடற்கரை வரவேற்பில் 'மவுண்ரோட் பிளாட் பாரம்' வியாபாரிகள் சார்பாகவும், ரிக்ஷா இழுக்கும் தொழிலாளர் சார்பாகவும் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன. இந்த அதிசய நிகழ்ச்சி நமக்கு எதைப் போதிக்கிறது? நாம் எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறோம் என்ற உண்மையை நம்மைப் புரியாத எதிர்க்கட்சியாளருக்கும் போதிக்கிறது.

தி. மு. கழகம் ரிக்ஷா தொழிலாளியின் கவனத்தையும்—பிளாட்பாரம் வியாபாரிகளின் எண்ணத்தையும் கவர்ந்துகொள்ளும் அளவுக்கு வளர்ந்துவிட்டது. அதுவும் உலகத் தொழிலாளர் தினமாகிய மே முதல் நாள் அன்று! இது நமது வளர்ச்சியின் வேகத்தை அதிகப்படுத்தி இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறபோது மிகவும் மகிழ்கிறோம். புதிய பொதுச் செயலாளர் பொறுப்பேற்றவுடன் நெல்லை, மதுரை முதலிய மாவட்டக்களில் உள்ள சில குறைகளை நீக்க ஏற்பாடு செய்திருக்கிறார். அத்துடன் வடஆற்காடு மாவட்டத்தின் தேர்தல் தகராரைப்பற்றிப் பொதுச் செயலாளரே தீர்த்துவைக்க இசைந்துள்ளார். இதுபோலவே எல்லாச் சில்லரைத் தகராறுகளையும் தீர்த்து இயக்கத்தை மேன்மேலும் வளர்க்க ஆவன செய்யவேண்டும் என்று பொதுச் செய

லாளரை நாம் கேட்டுக்கொள்கிறோம். தி. மு. கழகம் உங்கள் தலைமையில் பணியாற்றும் போது சரித்திரப் பிரசித்தி பெற்ற பல ஆக்கவேலைகள் செய்துகாட்டுவீர் என்றும் நம்புகிறோம்!

மகிழ்ச்சி நமக்கு

"இந்தி கட்டாயமாகப் படித்துத் தீரவேண்டும்" என்று வட நாடு ஒரே மும்முரமாக வேலைசெய்து வருகிறது. இந்தப் போக்கை ஆதிமுதல் இன்றுவரையில் வன்மையாகத் தென்னாட்டு அறிவியக்கம் கண்டித்து வந்திருக்கிறது என்பது வரலாறு கண்ட உண்மை.

இந்தி இங்கே இழிகுணம் படைத்தவர்களால் புகுத்தப்பட்ட போது திராவிடர் இயக்கம் அறப்போராட்டம் துவங்கி அல்லல் பட்டது. அதைப் பார்த்துப் பரிகாசம் செய்தவர்கள்கூட இன்று இந்தி இங்கே நுழையக்கூடாது கட்டாயமாக என்று தைரியமாகப் பேசுமளவுக்கு அறிவிலே தெளிவு அடைந்துவிட்டனர். இந்த இனிப்பான செய்தி, திராவிடர் இயக்கம் அன்று செய்த சேவையை மக்களுக்கு நினைவூட்டி அதன் மதிப்பை வளர்க்க உதவுகிறது.

இதனை மட்டும் கண்டு நாம் வியக்கவில்லை. எந்த இந்தியை இங்கு கட்டாயமாகப் புகுத்தவேண்டும் என்று அன்று அதிகார பீடத்தி லிருந்த முதல்வர் கூறினாரோ அவரே இன்று எதிர்க்கிறார். இந்தச் செய்தி வியப்புக்குரியது மட்டுமல்ல, விந்தையானதும் கூட!

குள்ள நரிக்கு மான் கன்று மீது கருணை பிறந்த காரணம் என்ன? கிளிக் குஞ்சின் மீது பருந்துக்குப் பரிதாபம் ஏற்பட வேண்டிய அவசியமென்ன? என்று கேள்விகளுடன் அன்பர் ஆச்சாரியாருக்குத் தமிழ்மீது எப்படி அக்கரை பிறந்தது? என்ற கேள்வியையும் இணைத்துப் பார்த்தால் உண்மை விளங்கும்.

"இந்தி வேண்டும்; அதற்காக எத்தனைபேரை வேண்டுமானு லும் சிறையில் அடைப்பேன்" என்று "இந்தி ஒழிக தமிழ் வாழ்க" என்று உரிமைக்குரலை எழுப்பியவர்களைச் சிறையிலடைத் தவர் இன்று இந்தி வேண்டாம் என்கிறார் என்றால் இதில் சூது இல் லாமல் இருக்குமா? சுய இன நலம் கருதி, இன்று ஆச்சாரியார் கூப்பாடு போடுகிறார் இந்தி வேண்டாம் என்று. இந்த இரகசியத்தை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். அப்படியன்றி இந்தியை அன்பர் ஆச்சாரியார் வெறுக்கிறார், என்று எவரும் கருதி விடவேண்டாம்.

உண்மையிலேயே இந்தியை ஒழிக்கப் பாடுபடும் திறமை அறி வியக்கம் ஒன்றுக்குத்தான் உண்டு—என்றாலும் ஆச்சாரியார் இந்தியை எதிர்ப்பது குறித்து நாம் திருப்தி அடைகின்றோம். சுயநலத் தோடு அவர் செய்தாலும், அதிலே அவருக்கும் தெரியாமல் பொது நலமும் இருக்கிறது என்ற மகிழ்ச்சி நமக்கு!

குறளின்பம்

விகரு. இராமநாதன்

4

காதலன் காதலியைப் பிரிந்து விடுகிறான். அதனால் தினமும் அவனையே நினைந்து நினைந்து உருகும் காதலியின் அழகும் வாடி விடுகிறது. பொலிவிழந்து விடுகிறாள். முன்னைய அழகினில் முப்பதில் ஒரு பங்குகூட இல்லாது போய் விடுகிறாள். பருத்து விம்மி அவளின் அழகுக்கு அழகு செய்து கொண்டிருந்த தோள்கள் வாடி, மெலிந்து உருவமற்றுப் போய் விடுகின்றன—அதாவது தோள்களின் வாட்டத்தின் அளவு பெருகி விடுகிறது. மணிக்கட்டை முட்டி மோதிக் கொண்டு நிற்கும் வளையல்கள் கழலக் கூடிய அளவுக்கு அவ்வளவு மெலிந்து விடுகின்றனவாம் அந்தத் தோள்கள். இந்தக் கூறுகளெல்லாம் காதலனைப் பிரிந்த காதலியிடம் காணப்படுமாம். ஒருவள் தன் காதலனைப் பிரிந்திருக்கிறாள் என்பதை இவ்வறிகுறிகளால் கண்டு கொள்ளலாம் என்கிறார் பெருந்தகையார்.

இப்படிப் பலர் குறிப்பின் மூலமே அவளின் மோசமான நிலையை அறியக்கூடிய அளவுக்கு அவள் வாட்டமுற்ற போதிலும் அவள் தன் காதலனை யாராவது இகழ்வதைக் கேட்டால் தாள மாட்டாளாம்—நொந்து படுவாளாம். என்ன பற்று பாருங்கள். தன்னைக் காதலித்த அவன் தன்னை விட்டு எங்கோ போய்விட்டான். தான் அவனிடம் பெற்றிருப்பதோ அரைகுறை இன்பம்—பெற வேண்டியதோ அளவிடற்கரியது. இருந்தும் அவனின் மேல் அவ்வளவு பாசம்—பற்று.

காதலித்தவன் கடந்து விட்டால் கண்டவனைக் கை பிடிக்கும் காரிகையர் வாழ்கின்ற இக் காலத்தில், வாழும் நமக்கு வள்ளுவர் தருகின்ற இக் கருத்தைச் சிந்தித்தால் சிரிப்பும் ஆச்சரியமும்தான் வருகிறது.

ஆனால் அப்படிப்பட்ட பெண்களும் அக்காலத்தில் இருந்திருக்கிறார்கள் என்பது மட்டும் பெருந்தகையாரின் குறள் மூலம் புலனாகிறது. இதோ அக்குறள்.

"தொடியொடு தோள்நெகிழ
நோவல் அவரைக்
கொடியர் எனக்கூறல் நொந்து."

* * *

சில பெண்கள் எப்பொழுதும் காதலனோடு இருக்கவே விரும்புகிறார்கள். ஆனால் அது எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. சிலர் பொருள் தேட வேண்டி கடல் கடக்கிறார்கள். அப்படி ஒரு சந்தர்ப்பமும் சூழ்நிலையும் ஏற்படும்

போது அப்படிப்பட்டவர்களின் காதலியர் தன் காதலர்களோடு மடலின் மூலம் தொடர்பு வைத்துக் கொண்டு ஆறுதலடைகிறார்கள்—இன்னும் சிலர் தன் காதலனுடைய உருவப் படங்களைக் கொண்டு ஆறுதலடைகிறார்கள்—இன்னும் சிலர் தன் காதலரை மனக் கண்முன் நிறுத்தி வைத்துப் பேசுவதின் மூலம் தேறுதல் அடைகிறார்கள்—மற்றும் சிலர் முடிந்தவரை கனவிற்குக் காதலனை இழுத்து வைத்து இன்பமடைகிறார்கள்—மேலும் சிலர் அவனைப் பற்றி நினைத்து, மனதைத் தூது அனுப்புவதிலே ஆறுதல் பெறுகிறார்கள். இங்கே பெருந்தகையார் காட்டும் காதலியும் அவ்வாறே மனதைத் தூது அனுப்புகிறாள் அப்படி இருந்தும் அவளுக்குச் சரியான ஆறுதல் இல்லை. அவள் கூறுகிறாள்.

"கண்ணும் கொளச்சேறி
நெஞ்சே இவையென்னைத்
தின்னும் அவர்க்காணலுற்று"

நெஞ்சே! நீ அவரைக் காணச் செல்கின்றபோது என். கண்களையும் உடன் கொண்டு செல். நான் இவைகளுக்குப் பதில் சொல்ல முடியவில்லை. இந்தக் கண்கள் என்னை நச்சரிக்கின்றன. சதா தொந்தரவு கொடுக்கின்றன. என்னால் தொல்லை தாங்க முடியவில்லை என்று மனதால் நினைத்தால் மட்டும் போதாது. தானும் நேரில் காணவேண்டும்—கண்டு இன்பம் பெறவேண்டும் என்ற பொருள் படக் கூறுகிறாள். பாருங்கள் காதலனைக் காண்பதிலும் கண்டு இன்பம் பெறுவதிலும்தான் எத்துணை வகைகள்.

அடுத்து ஒரு பெண்ணுக்குக் காமம் மட்டுமோ அல்லது நாணம் மட்டுமோதான் இருக்க வேண்டும் இரண்டுமே சேர்ந்து இருக்கக் கூடாது என்று கண்டிப்பாகவும் கடுமையாகவும் கூறுகிறார். அவருடைய குறளிலே கடுமை காணப்படுகிறதா இல்லையா என்று நீங்களே பாருங்கள்.

"காமம் விடுஒன்றோ நாண்விடு
நன்னெஞ்சே
யானோ பொறேனிவ்
விரண்டும்."

தானே அக் கருத்தைச் சொன்னால் இவன் ஆண்தானே எதையறிவான் என்று நினைத்து விடுவார்களோ என்று அந்தக் கடுமையை ஒரு பெண் கூறுவதாக அவள் மூலமாகச் செலுத்துகிறார்.

எனக்குச் சில சமயம் காமம் மேம்படும். காமம் வீண்பட்டுப் போகக் கூடாதே என்று அதைச் செயல்படுத்த அலைந்து காதலனைத் தேடுவேன். காலம், இடம், சூழ்நிலை, சுற்றுப்புறம் எல்லாம் அமையும். செயல்பட எண்ணி இருவரும் கூடுவோம். ஆனால் பாழாய்ப்போன நாணம் வந்து தடுத்து விடும். பெறவேண்டிய இன்பம் பாழ்பட்டு விடும். மீண்டும் கூட முயற்சிப்போம். மீண்டும் அதே நாணம் தலைகாட்டும் அய்யோ இப்படியே பன்முறை தோல்வியுற்றோம். இது வன்னியில் காமம் ஏற்படாச் சமயம் நாணம் அதிகப்பட்டு விடுகிறது. நாணத்தால் காதலனைப் பார்க்கவும் முடியாதபடி தடையாகி விடுகிறது. அதனால் காமமே ஏற்பட வழியற்றுப் போகிறது. இந்த இரண்டும் இருப்பதால் என் வாழ்க்கை பாழாகி விடுகிறது. ஆகவே ஏ! காமமே நீ மட்டும் என்னோடு இரு அல்லது நீ அழிந்து விடு. நாணம் மட்டும் என்

டாயாம் வாங்கிக்கொடுத்தாரு, ரொம்ப பெரிசா இருக்கும்மா! கையிலே பிடிச்சுக்க குச்சிகூட இருக்குது; விலை ரெண்டணாவாம்! எனக்கு ஒண்ணு வாங்கிக் குடும்மா!"

"அம்மா! லீலாவுக்கு ஜுரம் ஜாஸ்தியாயிடுச்சு; உடம்பு கொதிக்குது! ஓயாமே அழுவுறா! நீயும் வந்து...ஏம்மா நீ அழுவுறே? சொல்லும்மா!"...

"அவ எதுக்கடி சொல்லணும்? நீயும் கூடச்சேர்ந்து அழுது தொலைக்கிறதுதானே! வீட்டிலே சங்கீதக்கச்சேரி வெச்சாப் போலவாவது இருக்கும்! சே, சே, சே, சே...வர வர இது எழவு வீடாதான் போயிடுச்சு! தண்டச் சாப்பிட்றதில்லாம எப்பப் பார்த்தாலும் அழுத கண்ணும், சிந்திய மூக்குமா இருந்துக்கிட்டு வீட்டை நாசமாக்குதுங்களே, தரித்திரம் பிடித்த மூதேவிங்க! ஏய், சொர்ணம்!... இந்தக் கழுதைங்களை அடக்காமே நீயும் சேர்ந்துக்கிட்டு என்னடி கண்லே நீலித் தண்ணீர் வடிக்கிறே? அழுது அழுது எங்க குடும்பத்தையே குட்டிச்சுவராக்கிடுவே போலிருக்கே!..."

"கோவிச்சுக்காதிங்க அத்தை!... சின்னப் பிள்ளைங்க இரண்டும் பசி பசின்னு துடிக்குதுங்க; குழந்தை லீலாவுக்கு ஜுரம்னு சொல்லி பெரிய பொண்ணு அழுவுது! இதையெல்லாம் பார்த்து நெஞ்சு வெடிச்சுப்போய் நானும் அழுதிட்டேன்! அவரு ஒழுங்கா வேலையைச் செய்து வந்திருந்தா வேலையிலிருந்து நிறுத்தியிருப்பாங்களா? எங்க நிலைமைதான் இப்படி ஆயிருக்குமா? ஏதோ பொல்லாத காலம்; எங்க வாழ்வே பாழடைந்துப் போச்சு! அவரும் இந்தக் கவலையொன்றும் இல்லாமே ஊரைச்சுத்தியே காலத்தைக் கழிக்கிறார்! நீங்களும் கைவிட்டுட்டா எங்களுக்கு வேறே கதியில்லை அத்தை!..."

"கதியில்லேன்னு எங்கேயாவது குளத்திலே, கிணத்திலே விழுந்து சாவறது,...எங்கக் காலைச் சுத்திச் சுத்தி வந்துகிட்டு கழுத்தறுக்கலாம்னு பார்க்கிறீயா? என் பெரிய மகன் இராவும், பகலும் இரத்தத்தை வியர்வையாக் கொட்டிக் கொண்டு வர்ர சம்பளம் உங்க எழவுக்கே சரியாப்போயிடுது! அப்புறம் அவன் பெண்டாட்டி பிள்ளைங்க எப்படிப் பிழைக்கிறது? கட்டிய புருஷனைக் கட்டுப்பாட்டுக்குள்ளே வெச்சிக்கத் தெரியாதவ நீ ஒரு பெண்ணு! இதோ பார் நல்ல மாட்டுக்கு ஒரு சூடுபோதும். புத்தியிருந்தா இதைத் தன்னாலே புரிஞ்சுக்க!"...

என் வாழ்க்கையின் ஒருநாள் நாடகம்தான் மேலே கண்ட நிகழ்ச்சி!...நாங்களும் மனிதர்கள்தான் என்பதை மறந்து மூர்க்கமாகப் பேசிவிட்டார்கள் என் மாமி

நடிக்கவும் படிக்கவு மேற்ற நாடகங்கள்

		ரூ.	அ
வாழ்க்கை வாழ்வதற்கே	...	0	12
தூக்குமேடை	...	1	8
நச்சுக் கோப்பை	...	0	12
புரட்சிப்புலவன் அம்பிகாபதி		1	0
ஜூலியஸ் ஸீஸர்	...	1	0

ஸ்ரீமகள் கம்பெனி
சென்னை-1.

யார்! ஆனால் என் கணவரோ மனிதப் பண்பை மறந்ததோடு மட்டுமல்ல, ஏறக்குறைய ஒரு மிருகமாகவே மாறிவிட்டார்! வெறுத்துப்பேசும் தாயிடமிருந்து மனைவி மக்களைப்பிரித்து தனியாகச்சென்று வாழ்க்கைநடத்தத் திறமையில்லை; ஆனால், எலும்பும் நரம்புமாய் நான் ஆனபின்னும், இன்பவெறி கொண்டு என்னை நெருங்குகிறார்!... வேதனை வெடித்துக் குமுறும் வேளையில் வீணையைமீட்டி விளையாடுகிறார்!

கொடுமை செய்யும் மாமியார் கடமை மறந்த கணவன், மடமை உலகைப் புரிந்துக்கொள்ளாத சிறுவர்கள்!... இவர்களிடையே நான்படும் அவதி! பெண்ணாகிய நான் என்ன செய்யமுடியும்? செய்வதற்கு என்ன வழி வகுத்திருக்கிறது இந்த சமுதாயம்? ஆண் சம்பாதிக்கவேண்டும், பெண் சமையல் செய்யவேண்டுமென்ற ஒரே ஒரு வழி—கட்டுப்பாடுதானே இருக்கிறது!...அவர் எங்கேயாவது வேலைசெய்து ஏதாவது கொண்டு வந்தால்தானே என் மக்களோடு நான் வயிறு வளர்க்கமுடியும்?

என் மாமியார் தன் மகனுக்கு மட்டுந்தான் படைப்பார்கள்!... எங்களையும் வைத்துக்கொண்டு எத்தனை நாளைக்குச் சமாளிப்பார்கள்? அவர்களுக்குமட்டுமென்ன ஏதாவது சொத்துசுகம் இருக்கிறதா? பெரியமகன் சம்பாதித்துக் கொடுப்பதில்தானே குடும்பமே நடக்கிறது...அவருக்கும் மனைவி, மக்கள் இருக்கிறார்கள்! அவரவர் தத்தம் சுயநலத்தில்தானே கண்ணும் கருத்துமாயிருப்பார்கள். என் கணவரைப் போலவா?...ஒரு கவலையுமில்லாமல் தன்மானமும் இழந்து, ஒண்டிய வீட்டிலேயே அண்டி வாழ்ந்திருக்க விரும்புகிறாரே! கிடைத்த வேலையைத்தான் ஒழுங்காகச் செய்யாமல் இழந்தார்! வேறு வேலை கூடவா தேடக் கூடாது? வேலையற்ற சோம்பேறிகளோடு சேர்ந்து சுற்றிக்கொண்டு சதா கேளிக்கையும் கூத்துமாக இருந்தால்?...

நானும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். அன்றுகூட மாமியாரின் மூர்க்கமான பேச்சை எடுத்துச் சொன்னேன். ஆனால் அந்த விசித்திர மனிதர் நடந்துகொண்ட முறை?......அதுதான் என்னை இந்த விபரீத நிலைக்குக்கொண்டு வந்தது...

"அத்தான்!......பெற்ற மகன் என்ற பாசம் கொஞ்சங்கூட இல்லாமெ உங்களைப் பழிக்கிறாங்களே இதைக்கூடவா நீங்க புரிஞ்சுக்கலே பசியாலே துவண்டு மூலையிலே முடங்கிக் கிடக்குதே அந்த நான்கு மாணிக்கங்கள், அந்தப்பால் வடியும் பரிதாப முகங்களைப் பார்த்துங் கூடவா உங்களுக்குப் பாசம் வரவில்லை? எங்களை உயிரோடு கொல்லாதீங்க, அத்தான்!...ஒரு முடிவுக்கு வாங்க!"...

"என்ன முடிவு இருக்குது புதுசா, என் கழுத்தறுக்கிறமுடிவு! வர வர உன் தொந்தரவே எனக்குப் பெரிசாபோச்சு! இன்றைக்கு மட்டுமா அம்மா அப்படிப் பேசினாங்க?... என்றைக்கும் சொல்றதைத்தானே சொன்னாங்க"

"இருந்தாலும் இன்றைக்கு அளவுக்கு அதிகமாகப் போயிட்டாங்க; எங்கேயாவதுபோய் சாகச் சொல்றாங்க!..."

"அழாதே சொர்ணம்! பொழுது விடிஞ்சா எல்லாம் மறந்திடும்! வா

நிம்மதியாகத் தூங்கலாம்!...எங்கே உன் சொர்ண முகத்தைக் கொஞ்சங்காட்டு!...நம்ம இரண்டுபேரும் ஆனந்தமாயிருந்து ரொம்ப நாளாவுதில்லே?..."

"ஆ!...ஆனந்தமா? வேண்டாம் அத்தான்! என்னால் முடியாது! இப்பொழுது இருப்பதே போதும் ஆ!...வேண்டாம், வேண்டாம் அத்தா...!"

பிறகு கிளர்ந்தெழுந்த ஆயாசத்தினால் படுக்கையில் சாய்ந்து அலுப்புத்தீர உறங்கினார். எனக்கு மட்டும் தூக்கம் வரவில்லை. துக்கம் தான் நெஞ்சை அடைத்தது!... அதன் துடிப்புச் சத்தம் "தூக்கு போட்டுக்கொண்டாவது செத்துப் போ!"...என்று சொல்லி என்னைத் தேற்றுவதுபோல் இருந்தது!

உறங்கிக் கொண்டிருந்த அவரை வெறித்துப் பார்த்தேன். உலகத்தையே வெறுத்துவிட்ட அந்த நேரத்தில் அவர்மீது எனக்கு ஒரு வித பாசமும் உண்டாகவில்லை. "தூ, இதயமற்ற மனிதர்!...பெற்ற மக்களைப் பரிந்துகாக்க வகைதெரியவில்லை. மிருக இச்சையில் மூர்க்கமாய் நடந்துகொள்ளமட்டும் தெரிந்துக்கொண்டார்!" என்று சபித்தது என் வாய்! துணிந்த மனத்தில் கனிந்தது மரண எண்ணம்! தூக்கிலே தொங்கினேன் மறுகணம்!...

அப்பப்பா!...இந்த இளம் வயதில் எனக்கு எத்தனை இன்னல்கள்? என்றும் துன்பத்தை யல்லாது வேறென்ன இன்பங்கண்டேன்? சுகத்தின் மடியையாவது நான் பாத்ததுண்டா? சோகத்தின் பிடியிலல்லவா சிக்கிச்சுழன்றேன்! மாடாக உழைத்து, ஓடாகத்தேய்ந்தேன். கேடுகெட்டவள் என்ற பட்டம்தான் எனக்கு மிஞ்சிற்று! மழலை பேசும் மாணிக்கங்களை மறக்கமுடியவில்லை. அதற்குள் "மடிந்துபோ" என்று மரண வோலை நீட்டிவிட்டார் மாமியார்.

சூனிய உலகம், சலிப்பான வாழ்க்கை!...சே சே இதைவிட சாவேமேல்! அதில் சஞ்சலமும், சங்கடமும் கிடையாது! அதுசலன மற்ற நிலை, சலியாத நிம்மதி!...ஆம் ஒரே நிம்மதி! ஒப்பற்ற நிம்மதி!... இந்த நிம்மதிக்காக நித்தம் நித்தம் எத்தனை நங்கையர்கள் தவம் செய்கிறார்களோ!...என்னைப் பாருங்கள் இனி பயமேயில்லை. மரண மாதாவின் மடியில் மண்ணாகிவிட்டேன். இதோ என் மாங்கல்யத்தின் மஞ்சள் நிறங்கூட அப்படியே மாறாமல் இருக்கிறது!...

* * *

கதை பேசியது பிணம்!...ஆம்! கதைதான். அவள் பிணமாக அல்ல மணம் வீசும் புனித மலராக இயற்கையன்னையை அலங்கரிக்கிறாள்.

பைத்தியக்கார உல்கம்!...அதில் அவன் ஒரு முழுப்பைத்தியம் மட்டுமல்ல, சர்வ முட்டாளுங்கூட தன் மனைவி உயிரோடிருந்தபோது அவள் உயர்வைப்புரிந்துகொள்ளத் தவறிவிட்டான்; இறந்த பின்போ எண்ணியெண்ணி அழுகிறான்!... "எழிலுருவே!...இன்பக்கனியே!". என்று ஏங்கியேங்கித் துடிக்கிறான். பேசும் பிணத்தினருகில் அந்த நடைப்பிணம் புலம்பாமல் புலம்பிக் கொண்டிருக்கிறான்.

அன்பு மனத் தொல்லை

கவிஞர். த. கோவேந்தன்

சொல்லைப் பாலாக்கியவன்
சொன்ன மறைவிதுவாம்;
"நல்லவளே காதலியே—வாழி—நின்
நாணவிழி உயர்த்தென்ருன் தோழி!"

நானவனைக் கோபமுடன்
"நல்லதில்லை போபோ என்றேன்
ஆனல் அவன் போகவில்லை நின்ருன்—எனை
ஆசைவிழிப் பார்வையிலே தின்ருன்!

முகத்தொடு முகம் தொட
மோகமுடன் வந்து நின்ருன்
அகத்தினில் மகிழ்வோட பார்த்தேன்—உடன்
"ஐயோ வெட்கம்" எனச்சொல்லி வேர்த்தேன்!

கனிச்சுவை முத்தமொன்றைக்
கன்னத்திலே வைத்துவிட்டான்
"துணிவுடன் மீறிவிட்டாய்" என்றேன்—அவன்
தோளுயர்த்தி. என்முனமே நின்ருன்!

மயலூட்டும் கூந்தலிலே
மலர்ச்செண்டு வைத்துநின்ருன்
பயனில்லை எனச்சொல்லி நடந்தேன்—அவன்
பாசமுடன் என்நடையைத் தொடர்ந்தான்!

கழுத்திருந்த மாலையினை
கழற்றிக் கொண்டோடி விட்டான்
அழுகையுடன் "ஏன் அவன் வரவில்லை"—என்றே
அன்புமனம் கேட்பதுவே தொல்லை!

வரிசை எண்: 2

செவ்வாய்க்கிரகம் செல்லும் மார்க்கம், விஞ்ஞானத்துறையிலே மிக மிகப் பின் தங்கிய தமிழகத்து மக்களாலேயே கண்டுபிடிக்கப்பட்டதென்றும், முதன் முதலாக வான வெளியைத் தாண்டிச் செவ்வாய் உலகம் சென்றவர்கள் தமிழர்கள்தான் என்றும் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

தமிழ் மக்கள் தங்களின் பிரதிநிதிகளாக விஞ்ஞானி, சிற்பி, நடிகன், முற்போக்குஅரசியல்வாதி, எழுத்தாளன் ஆகிய ஐந்து அறிவுலக மேதைகளை அனுப்பி வைக்கிறார்கள், செவ்வாய்க் கிரகத்திற்கு.

அவர்களும் அங்கு போய்ச் சேருகிறார்கள். முதன் முதலில் அவர்கள் அங்கே கண்டது செவ்வாய் உலகத்தில் வாழும் பெண்ணொருத்தியை.

அவள் தமிழ்மொழியைக் கற்றுணர்ந்தவளாக யிருக்கிறாள். அவளிடம் நமது பிரதிநிதிகள் தங்கள் கருத்தை வெளியிடுகிறார்கள். முதன் முதலில் அவளிடம் என்னென்ன பேசவேண்டும், யார் யாரைப்பற்றி பேசவேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்? ஏன்? இதற்கு விடை எழுதி (புல்ஸ்கேப் அளவு தாளில் ஒரு பக்கத்திற்கு மேற்போகாமல்) அனுப்புங்கள்.

தகுதியான விடை அனுப்புவோருக்கு பரிசு ரூ 10

பரிசு பெறாத விடைகள் சிறப்பாக யிருப்பின் பிரசுரிக்கப்படும். முடிவு தேதி 25—6—55. விடைகளைப் பின் பக்கத்திலுள்ள நுழைவுச் சீட்டுடன் அனுப்புதல் வேண்டும். "ஏன்? பகுதி, கலைமன்றம், சென்னை-1." என்ற முகவரிக்கே விடைகளை அனுப்புங்கள்.

ஏன்? முடிவு தேதி 25-6-55

(நுழைவுச் சீட்டு)

....

....

...யிற்சி...

...வரி...

....

நாள்...............1955 கையெழுத்து

வாசகர்கள் பார்வைக்கு

மே தின சிறு கதைப் போட்டி சம்பந்தமான முக்கிய அறிவிப்பொன்று 21—5—55 - ம் தேதி இதழில் இடம்பெறுகிறது.

கசந்த கரும்பு

திரைப்பட மூலம் பார்த்து மகிழ்ந்த "**பராசக்தி**" கதையின் பிற்பகுதி. பலரின் பாராட்டுதலைப் பெற்ற கதை. 'பராசக்தி' கல்யாணியின் வாழ்வின் பிற்பகுதி எவ்விதம் **கசந்த கரும்பாகிய** தென்பதை ஆசிரியர் தம் அழகு தமிழில் தருகிறார். அற்புதமான கருத் தோவியம்.

விலை ரூ. **1—8—0**

கலைமன்றம், சென்னை—1.

அழகு எரிந்தது

T.A. துரைராஜன்

2

அம்மா:

எப்படிச்சொன்னேன்! கண்ணே மணியே என்று சொன்ன அதே வாயால்தான் சொன்னேன்! என் கலி தீர்க்க வந்த களஞ்சியமே என்று கணக்கற்ற தடவை ஆசையோடு சொல்லி அணைத்திருக்கிறேன் என் அழகு பொம்மையை! அதே வாயால்தான் என் கலி தீர்க்க வந்த களங்கமே என்று சொல்லவேண்டிய நிலை வந்துவிட்டது!

பசுவின் கன்றுக்காக தன் ஒரே மகன் மீது தேரை ஓட்டி நீதியை நிலை நாட்டிய மனு நீதிச் சோழன் கதையை, எத்தனை ஆர்வத்தோடு பள்ளியிலே பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்லியிருப்பேன்! மகனைக் கொன்றான் மன்னன் நீதியின் பொருட்டு! எந்த நீதிக்காக என் மகளை உயிரோடு கொல்லப்போகிறேன் நான்! கொல்லுவதாவது; அப்படிக் கொன்று விட்டால்தான் ஒரேயடியாகத் தீர்ந்து போகுமே பிரச்னை! அணு அணுவாகச் சித்ரவதையல்லவா செய்யப் போகிறாள் சீராட்டி வளர்த்த தாய்!

ரஜபுதனத்து அழகு ரோஜா கிருஷ்ணகுமாரி! சுற்றியுள்ள சிற்றரசர்களின் சிந்தனையிலே சிங்காரப் புயலை எழுப்பி விட்ட இன்ப ரோஜா. அந்தப் பனி ரோஜாவின் பார்வைக்காகப் பறந்தனர் பார் வேந்தர்கள் பலர். ரஜபுதனம் போட்டி மேடையாகி விட்டது— மலர் ஒன்று! மதுவேண்டிப் பறந்த வண்டுகள் அநேகம்! முடிவுகாண முடியாமல் தவித்தான் தோட்டக்காரன்! முடிவில் அந்த அழகு ரோஜா பறித்தெறியப்பட்டது தோட்டக்காரன கையாலேயே! ஆமாம் தான் பெற்ற மகளைத் தங்

தையே விஷமிட்டுக் கொன்ருன்! அந்தத் தந்தையின் துணிவு மட்டும் எனக்கிருந்தால்?

கண்ணகியின் கதையை எத்தனை முறை பள்ளியிலே சொல்லியிருப்பேன்! அந்த வாயால் என் மகளை மாதவியாக வாழு என்று சொல்லுகிறேன் மனக் கிலேசமின்றி!

விபச்சாரம் போயாவது மகளைக் காப்பாற்றியிருக்க வேண்டாமா? என்று ஆத்திரத்துடன் கேட்கிருர் ஒரு நாவலாசிரியர். அதைப் படித்தபோது அந்த ஆசிரியர் மீது எனக்கு அளவு கடந்த ஆத்திரம் ஏற்பட்டது. ஆனல் இன்ருே? நான் அந்த வயதைத் தாண்டி விட்டேன்! ஆகவே தயார் பண்ண வேண்டியது!......சொல்லக் கூட கூசுகிறது!

தற்கொலை செய்து கொள்வது பாபமல்ல, சட்ட விரோதங்கூட அல்ல என்ற நிலை வரட்டும் இந்த நாட்டில்! அப்போது தீர்ந்து போகும் எங்கள் தீராத பிரச்னை!

என் மகள் சௌந்தர்ய லக்ஷ்மியாக மட்டுமல்ல, தனலக்ஷ்மியாகவும் மாறி தனம் தனமாகக் கொண்டு வந்து குவிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன்!

தாமரைக் குளத்திலே நீந்தி விளையாட அன்னத்தைத்தான் எதிர் நோக்கியிருந்தேன்! ஆனல் குளத்தில் இறங்கியதோ அழகு அன்னமல்ல அடங்காத எருமை!

என் மகளைக் கொண்டு பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இல்லாமலில்லை! அதற்காக, அவளது வாழ்வைக் கரியாக்கிக் கிடைக்கும் காசா எனககு வேண்டும்?

மலர்த் தோட்டத்திலே, சிரித்த ரோஜா தென்றலிலே உல்லாசமாக அசைந்தாடிக் கொண்டிருந்தால், புயல் காற்று உதிர்த்து விடும் அந்த உல்லாச வாழ்வை என்று ரோஜாவைப் பறித்து, பாதுகாப்பதாகச் சொல்லி சேற்றிலே புதைக்க வந்து விட்டான் புண்ணியவாளன்!

கசாப்புக் கடைக்காரன் காருண்யத்தைப் பற்றிக் கருத்துரை வழங்குவது போலல்லவா, இவள் நேர்மையைப் பற்றிப் பேசுகிருள் என்று என் வாழ்வை மேலெழுந்த வாரியாக உணர்ந்தவர்கள் பேசுவர்கள்! என் வாழ்க்கைப் புத்தகத்தை ஏடேடாகப் புரட்டி வைக்கிறேன்! நிதானமாகப் புரட்டிப் பாருங்கள். நல்ல தீர்ப்பை நீங்களே வழங்குங்கள்.

மருதமலை—கோவை ஜில்லாவிலே உள்ள சின்னஞ் சிறிய கிராமம்! பூகோளப் படத்தில் பூதக் கண்ணுடி கொண்டு பார்த்தால் கூட அந்த ஊரை கண்டுபிடிக்க முடியாது! அத்தனை பெரிய கிராமம்!

பிறக்கும்போது நல்ல அற்புதமான புகழோடுதான் பிறந்தேன்! என் அதிர்ஷ்டத்தைப் பற்றிப் பேசாதவர்கள் பாவம் செய்தவர்கள்! அப்பா அம்மா இரண்டு பேரையும் பிறந்த சில மாதங்களுக்குள்ளேயே விழுங்கி விட்டேனும்! நான் என்ன புராணத்திலே வரும் அரக்கனு ஆளை விழுங்க! அவரவர்கள் காலம் முடிந்தால் அதற்கு நானு பொறுப்பாளி!

எனக்கு விபரம் தெரிந்தது முதல் எனக்கு அப்பா, அம்மாவாக இருந்தது என் தாத்தாதான்! என்மீது தன் உயிரையே வைத்திருந்தார்! கிராமத்தில் இரண்டு ஏக்



கர் நிலமுண்டு! அதிலிருந்து கிடைக்கும் வருவாயில் தாத்தாவும் பேத்தியும் எந்தக் கவலையுமின்றி காலம் கடத்தி வந்தோம்!

இயற்கையாகவே எனக்கு நல்ல சூட்சம அறிவு. எதையும் ஒரு முறை பார்த்தால்போதும்! அப்படியே அதைச் செய்து விடுவேன்! படிப்பிலும் நான் குறைந்தவளில்லை!

உஷ்ணம் ஏற ஏற தர்மா மீட்டரில் பாதரசம் ஏறுவதுபோல் நாட்கள் ஓட ஓட என் உடலில் யௌவனத்தின் மெருகு ஓட ஆரம்பித்தது!

முல்லை அரும்பு விட ஆரம்பித்து விட்டது! கட்டிக் காக்கக் காவலன் தேவை! கிடைத்த காவலனே காலனின் வருகையை நோக்கிக்காலத்தைக் கடத்தி வரும் வயதான தாத்தா!

வெற்றிலை போட்டு மென்று கொண்டிருக்கும்போது பாக்கு நெஞ்சையடைத்துக் கொள்வது

போல், எனது அமைதியான வாழ்க்கையில் தாத்தாவின் சாவு என்ற இடி விழுந்தது!

தாத்தா உயிரோடு இருக்கும் வரை எட்டிப் பார்க்கக்கூட தைரிய மற்றவர்களெல்லாம் ஒவ்வொருவராக வந்து குவிந்தனர்! தாத்தாவின் இரண்டு ஏக்கர் ஆஸ்திக்கு வாரீசாக—உயில் ஒன்றும் எழுதி வைக்காத காரணத்தால் அவர் ஊட்டி வளர்த்த என்னை ஊர்ச் சந்தியிலே நிற்க வைத்து விட்டார்கள் அந்தப் புது உறவுக் காரர்கள்.

படரச் சரியான கொம்பு கிடைக்காவிட்டால் முல்லைக் கொடியில் மலரரும்பு மலராமலா போய் விடுகிறது! தரையிலே படர்ந்தாவது பூத்துக் குலுங்கித்தானே ஆக வேண்டும்! இல்லாவிட்டால் தேரை ஈய்வதற்கு என்ன பாரி மன்னனுயிருக்கிருன்!

படித்த படிப்புப் பயன்பட்டது! பள்ளிக்கூடத்தில் வாத்தியாரம்மாவாக வாழ வழி தேடினேன்!

நாற்பது ரூபாய் சம்பளத்தில் நாணயமாகத்தான் நடந்து வந்தேன்! பள்ளிக்கூட வாத்தியாரம்மாவாக, அதிலும் சற்று மூக்கும் விழியுமாகச் சுத்தமாக உள்ளவளாயிருந்து விட்டால் அவ்வளவு தான்! எத்தனை உபத்திரவங்களுக்கு ஆளாகவேண்டி வரும் தெரியுமா?

சீர்திருத்த எழுத்தாளர்கள் சினிமாக்காரிகளின் வாழ்வு மட்டுந் தான் சீரழிந்து கிடப்பதாகவும், அதைச் சீர்திருத்தப் பூமியிலே பேனவுடன் அவதாரம் செய்திருப்பதாக எண்ணிக்கொண்டு எழுதித் தள்ளிவிடுகிருர்கள்! அந்தக் கலர் கண்ணுடியைக் கழற்றி விட்டு பார்த்தால் தெரியும் உண்மை! நலிந்த வாழ்வு நடத்தும் நர்சுகள், வழுக்கி வீழ்ந்த வாத்தியாரம்மாக்கள்! சமூகத்தின் சாக்கடையாக மாறிப் போன சமூக சேவகிகள்; இவர்களுடைய எண்ணிக்கை என்றும் குறையவில்லை, குறையப் போவதுமில்லை!

பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர் வந்து பல்லையிளிப்பார்! அதற்குப் பல்லையிளிக்க வேண்டும்! ஜில்லாப் போர்டு தலைவர் வந்து பல்லை இளிப்பார்! செவி சாய்க்க வேண்டும் அவருக்கு! மறுத்தால் உண்ணும் உணவில் மண்ணையள்ளிப் போட்டு விடுவார்கள் அந்த மகானுபாவர்கள்.

என்னுடன் வேலை செய்தாள் ஒரு பெண்! மணமாகி மணவாளனும் ஆசிரியராக அவளுடனேயே வேலை பார்த்து வந்தான்! ஜில்லாப் போர்டு தலைவரின் விருப்பத்திற்கு இணங்க மறுத்தாளாம் அந்தப் பெண்! அவ்வளவுதான் புருஷனை வேறு பள்ளிக்கூடத்துக்கு மாற்றி விட்டான் அந்தப் புண்ணியவாளன்! அந்த மனிதன் ஜில்லாப் போர்டுத் தலைவராக இருக்கும் வரை அந்த ஜோடியைச் சேர முடியாமலேயே அடித்தான்!

காம ரூபர்களின் கண் பார்வை என் மீது படுவதற்கு முன்னமேயே சரியான கட்டுக் காவல் ஏற்படுத்திக் கொண்டேன் எவருடன் ஒரே தலையணையில் தலை சாய்ந்து படுக்கச் சம்மதித்தேனே, அந்த அவர் நான் வேலை பார்த்து வந்த பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியர்!

பள்ளிக்கூட ஆண்டு விழாவில் நாடகம் தயார் செய்யும் பொறுப்பு என்னிடம் விடப்பட்டது! விழா

சம்பந்தமாகத் தலைமை ஆசிரியருடன் கலந்து பேசும்படியான சந்தர்ப்பங்கள் அநேகம் ஏற்பட்டன! விழாவுக்காகப் பேச ஆரம்பித்தவர்கள் கடைசியில் வாழ்க்கைக்காகப் பேச ஆரம்பித்து விட்டோம்!

பள்ளிக்கூட ஆண்டு விழா முடிந்த கையுடனேயே எங்கள் மண விழாவும் நடந்தேறியது! எங்கள் பள்ளிக்கூடத் தமிழாசிரியர் தலைமையில் திருமணம் நடந்தது!

ராணி எங்கள் முதல் வருஷத்தின் இன்ப வாழ்வின் பயனாகப் பிறந்தாள்! இருவரும் போட்டி போட்டுக்கொண்டு கொஞ்சி வளர்த்தோம் எங்கள் குலக் கொழுந்தை!

தாழம்புதர் ஓரத்திலே செல்லும்போது, அதன் மணத்தில் மனதைப் பறி கொடுத்து விடுகிறான் மனிதன்! அருகில் சென்று பார்த்தால்தானே தெரியும் உள்ளே நெளியும் நாகம்! அப்படித்தான் என் இன்ப வாழ்வும் ஆரம்பமாகி விட்டது. என் கணவருக்கு எப்படியோ அந்தக் குடிப்பழக்கம் ஏற்பட்டிருந்தது! கல்யாணமான புதிதில் என் கணவரிடமுள்ள அந்தக் கொடிய பழக்கம் எனக்குத் தெரியாது. நாளடைவில் கண்ணைப் பறிக்கும் வண்ணச் சேலை சாயம் வெளுப்பதுபோல், அவருடைய அந்த இழிவான வாழ்க்கை எனக்குப் புலனாகி விட்டது.

காலையிலே, பள்ளியிலே பிள்ளைகளுக்கு மதுவின் கெடுதியைப் பற்றிச் சொல்மாரி பொழியும் ஆசிரியர் அர்த்த ராத்திரியிலே அளவுக்கு மீறிக் குடித்து அட்டகாசம் செய்கிறார்.

மது விருப்பை வெறுப்பாக்கிறது. வெறுப்பை விருப்பாக்கிறது. வீரனைக் கோழையாக்குகிறது. கோழையை வீரனாக்குகிறது! பகலில் "அடி" என்றுகூடக் கூப்பிடக் கூசும் அவரை எடுத்துக்கூட எழுத முடியாத வார்த்தைகளை வாய்க்கு வந்தபடி கொட்டச் செய்கிறது.

பட்டதெல்லாம் போதும் பட முடியாதினித் துயரம் என்று கதறியழவேண்டும் போல் தோன்றி விட்டது. ராணி பிறந்த மூன்று வருடத்திற்குப் பின் குமுதா பிறந்தாள். குமுதா பிறந்ததற்குப் பிறகு என் கணவரின் போக்கு மிகவும்

போலீஸ் காரரிடம்

ஜேப்படி!

திருடர்களைக் கண்டு பிடித்துக் கொடுக்கும் போலீஸ் கான்ஸ்டேபிள் கூட ஜேப்படிக்கு விலக்கல்ல என்பது இங்கு நிருபணமாகி விட்டது.

ஏரவாடவில் உர்ஸ் பண்டிகையையொட்டி நடந்த சந்தையில் பந்தோபஸ்து வேலை பார்த்த ஒரு போலீஸ் கான்ஸ்டேபிள் தம் கோட்டின் மேல் பையிலிருந்த பர்ஸை பறிகொடுத்தார். குறித்த காலத்தில் ஜேப்படி செய்தவன் தப்பித்துக் கொண்டதால் திருடனை கான்ஸ்டேபிள் கண்டு பிடிக்க முயவில்லை.

மாறி விட்டது. போதையிலே அவர் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் எழுதக்கூட முடியாது. எண்ணி எண்ணி மனம் குன்றித்தான் சாகவேண்டும்.

ராணிக்கு ஐந்து வயதாகியது. அறிவறிந்த பெண்ணுகி விட்டாள்! அப்பாவின் அவமானச் செய்கையை அவள் அறிந்துவிடக்கூடாது என்பதற்காக அவளைக் கோயமுத்தூரிலுள்ள கான்வெண்ட் ஒன்றில் சேர்த்தேன்!

குமுதாவுக்கு மூன்று வயதானது. அந்த மூன்று வருஷங்கள் நான் பட்ட அவஸ்தை அப்பப்பா! அந்தப் புண்ணியவானை விட்டே எங்காவது ஓடி விடலாம்போல் தோன்றி விட்டது.

தனித்து வாழமுடியும் என்ற தணித் துணிச்சல் உண்டு என்னிடத்தில்! ஆகவே பிரிந்து விடுவது என்று தீர்மானத்திற்கு வந்தேன்! சாவித்திரி, சீதை போன்ற கற்புக்கரசியர் பிறந்த நாட்டிலே கணவனைக் கை விட்டோட எண்ணும் காதகி எப்படிப் பிறந்தாள் என்று ஆத்திரப்படுவார்கள்! சாவித்திரிக்கு சத்யவான் கிடைத்தார்! எனக்குக்கிடைத்தவர்சத்தியவான்போலிருந்திருந்தால், சாவித்ரி என்ன, அவளைவிட ஒருபடி மேலாகவே நடந்து காட்ட முடியும் என்னுல்!

ஒரு நாள் நடந்த சம்பவம் என்னைக் குமுதாவுடன் அவரை விட்டே ஓடச் செய்து விட்டது! நல்ல குடி போதையுடன் பள்ளிக்கூடத் தோட்டத்தைப் பெருக்குபவளைப் பிடித்திழுத்து மிகவும் கீழ்த்தரமாக நடந்து கொண்டார்! அவள் போட்ட சப்தம் என் சப்த நாடியையும் ஒடுங்க வைத்து விட்டது! அன்றிரவு வீட்டை விட்டுப் புறப்பட்டவள்தான் எங்கெங்கோ சுற்றிக் கடைசியில் நம்பியூரிலே பள்ளிக்கூட வாத்தியாரம்மாளாக வேலை பார்த்தேன்.

காலம் ஓடிக் கொண்டிருந்தது! பள்ளிக்கூட வாசலிலே உள்ள நாகலிங்கமரம் எத்தனையோ முறை இலை உதிர்ந்துத் தழைத்தது!

பள்ளிக்கூட வாத்தியாரம்மா. நாற்பது ரூபாய் சம்பளம். அவள் மகள் படிக்கிறுள். பணக்காரர்களே மட்டும் நுழைய முடியும் கான்வெண்டில், என்று எத்தனையோ பேர்கள் ஏளனமாகப் பேச ஆரம்பித்து விட்டார்கள்!

தவறு செய்யவில்லை என்று நான் தர்க்கம் செய்யவில்லை! என்னுல் என் செலவுக்கு ஈடு செய்ய முடியவில்லை! என்னிடமுள்ளது வாட்டமடையாத வாலிபம்! வரண்டு போகாத உடல்!

பணமுள்ளவன் பணத்தை முதலீடாக வைத்துப் பிழைக்கிறுன். அறிவாளி அறிவைக் கொண்டு பிழைக்கிறுன் என்னிடம் எஞ்சியுள்ளது சத்துவிடாத சதை!

எத்தனை நாளைக்குத்தான் திரை போட்டு மறைக்க முடியும் எனது சீரழிந்த வாழ்வை? பிள்ளைகளை எதிர்கால வாழ்விற்குத் தயார் செய்யும் வாத்தியார்ம்மா வழுக்கி வீழ்ந்த வனிதையாக வாழ்கிறுள் என்ற வதந்தி நிரூபிக்கப்பட்டு விட்டது! வாத்தியாரம்மாளின் வாழ்வுக்கு வாழ்த்துப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டு விட்டது!

கான்வெண்டிலிருந்து ராணியை அழைத்து வந்தேன். நாங்கள் மூவரும் கோயமுத்தூரை அடுத்த ராமனுதபுரத்தில் குடி ஏறினேம்!

ராணிக்கு இயற்கையிலேயே நல்ல இசைஞானம். அந்தப் பட்டைத் தீட்டாத வைரத்திற்குப் பட்டை தீட்டிப் பள பளக்க வைக்க சாணைக்கல்லாக உதவமுன் வந்தான் சிவராஜ்.

வெள்ளத்தில் அடித்துச் செல்பவன் கையிலே எது கிடைத்தாலும்—மரக் கட்டையானாலும் சரி, மனிதப் பிரேதமானாலும் சரி, விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டு கரையேறினால் போதும் என்றுதானே எண்ணுகிறான். அப்படித்தான் தேவைப் பட்டது சிவராஜின் உதவி.

நடன வாத்தியார் வந்தார்! ராணியை நடன மேடைக்கு ஏற்றும் நிலைக்குக் கொண்டு வந்து விட்டார்! நாட்கள் ஓட ஓட ராணியின் உடலிலே நளினமும் புது நடை போட ஆரம்பித்தது. என் கண்ணே பட்டுவிடும்போல் அத்தனை அழகியாக இருந்தாள் என் மகள்.

பக்கத்து வீட்டிலே குடியிருந்தவர்கள் பழக்கம் ஏற்பட்டது. அடுத்த வீட்டுப் பெண்ணைப் போல் என் மகளையும் அந்தக் கலையுலகத்தில் சேர்த்து விட்டால் ஓடி விடும் எங்கள் வறுமை என்று எண்ணினேன்! அந்த வான் கோழிக்கு அத்தனை மதிப்பு இருக்கும்போது என் மகள்—தோகை விரித்தாடும் மயில்—என்ன குறைந்து விடவா போகிறாள் என்ற அசட்டுத் தைரியம் என் ஆர்வத்தை அதிகரிக்கச் செய்தது!

சரியான சந்தர்ப்பத்தில் உதவினான் சிவராஜ்! பணக்காரனானகையால் படவுலகில் பரிச்சயம் அதிகமிருந்தது! ஸ்டுடியோ ஒன்றிலே மாதச் சம்பளத்திற்கு ராணியை ஏற்பாடு செய்து விட்டான்.

பருவ கால மழைபோல் பட உலக சம்பந்தம் எங்களுக்கு உதவியது! மழை நடுவே இடியோசை கேட்பது இயற்கைதானே. இடித்த இடி எங்கோ விழுந்து விடவில்லை. எங்கள் தலை மீதே தவறாமல் விழுந்து விட்டது!

அந்த நாள் மறக்க முடியாத நாள்! எங்கள் வாழ்க்கையிலே புதிய அத்தியாயம் தொடர்ந்திட்ட நாள்!

சிவராஜ் என்னைக் கூப்பிட்டு அனுப்பினான்! துணிக் கடை மாடியில் உள்ள அறையில் அவனைச் சந்தித்தேன்.

வளர்ந்து வரும்
திராவிட இலக்கியத்தின்
விடிவெள்ளி நூல்கள்

		ரூ.	அ.
மகாகவி பாரதியார்	...	0	8
தீ பரவட்டும்	...	1	0
தேன் துளிகள்	...	1	0
புராண மதங்கள்	...	1	0
மறுமலர்ச்சி	...	1	0
இதன் விலை 3000	...	0	12
தேவலீலைகள்	...	0	8
நமது முழக்கம்	...	0	8
களஞ்சியம்	...	0	8
கொலைக்களம்	...	0	8
பெருமூச்சு	...	1	0
சிந்தனை ஆழி	...	1	0
களத்தில் கருணாநிதி	...	1	0
இரத்தச் சுவடு	...	1	0
புராண போதை	...	1	0
பலிபீடம் நோக்கி	...	1	0
இனமுழக்கம்	...	1	0
உணர்ச்சி மாலை	...	0	8
தனி அரசு ஏன்?	...	1	0
முல்லைக் காடு	...	0	12

ஸ்ரீமகள் கம்பெனி,
சென்னை-1.

வெகு நேரம்வரை இருவரும் பேசவேயில்லை! அறையிலே அசாதாரணமான அமைதி குடிகொண்டிருந்தது! எனக்கு இருப்புக் கொள்ளவில்லை.

"என்ன விஷயம் சிவராஜ்! ராணி வீட்டிலே தனியா இருப்பா! சீக்கிரமா சொல்லேன்" என்றேன்.

"சுருக்கமாகச் சொல்வதற்குச் சாதாரண விஷயமல்லவே" என்று சொல்லிக் கொண்டே எதிரே இருந்த மேஜை அருகில் போய், மேஜையின் விளிம்பைப் பிடித்துக் கொண்டே கீழ் நோக்கியவாறே சிறிது நேரமிருந்தான் சிவராஜ்.

என்னவோ ஒரு தீர்மானத்திற்கு வந்தவன்போல் தலை நிமிர்ந்தான்! பிறகு மெல்லிய குரலில், "ஸ்டுடியோவில் என்னையும் ராணியையும் சேர்த்துப் பேசுகிறார்கள்" என்றான்.

என் எதிரேயிருந்த மேஜை சுழல்றது. மாட்டியிருந்த படங்கள் சுழன்றன. கடைசியில் என் மூளையே சுழன்றது. மெதுவாகச் சமாளித்துக் கொண்டு, "நரம்பில்லாத நாக்கு எது வேண்டுமானாலும் பேசும்" என்றேன்.

"அந்தப் பேச்சு ஏச்சாக மாறக் கூடாதே."

"அதற்காக" என்று சொல்லி அவன் வாயிலிருந்து என்ன வரப் போகிறது என்று பட படத்த நெஞ்சுடன் காத்துக் கொண்டிருந்தேன்.

"வம்பர்கள் வார்த்தையிலே பேசுவதை வாழ்க்கையிலே நடத்திக் காட்டலாம் என்று எண்ணுகிறேன்."

"சிவராஜ்? நீ மணமானவன்" என்றேன் ஆத்திரத்துடன்.

"இருதார மணத் தடைச் சட்டம் இருப்பதும் தெரியும் அதனால் தான்" என்று தயங்கினான்.

"அபிமான ஸ்திரீயாக வைத்துக் கொள்ளுகிறேன் ராணியை என்கிறாயா சிவராஜ்" என்று பட படத்தேன்.

சிறிது நேரம்வரை ஒன்றும் பேசாமல் இருந்தான்! பிறகு நிதானமாக,—"அனுபவம் உள்ள உங்களுக்கு அதிகம் சொல்ல வேண்டாம். சினிமா உலகம் எப்படிப் பட்டது என்று ஓரளவுக்குப் புரிந்து கொண்டிருப்பீர்கள்! எதையுமே மலிவாக எண்ணுபவர்கள் தான் அங்குள்ளவர்கள்! அந்த மனிதர்களின் பிடியில் ராணி சிக்கி, சீரழியாமல் இருக்க வேண்டுமானால் நான் சொல்வதைக் கேட்டுத் தான் ஆக வேண்டும்" என்றான்.

நேரம் போவதுகூடத் தெரியாமல் யோசித்துக் கொண்டேயிருந்தேன். அவன் காட்டிய முடிவு தான் தென்பட்டது. பல யோசனைகள் செய்தேன். ஆனால் பலன் என்னவோ அதே முடிவுதான். அடுத்த வீட்டில் மணிக்கொரு மனிதன் வந்து போகும் காட்சி என் கண்முன் தோன்றியது. சிவராஜ் எங்கள் குடும்பத்திற்குச் செய்த உதவிகள் எத்தனை? வாத்தியாரம்மாவாக வாழ்ந்து, வழுக்கி விழுந்தவள் என்று பட்டம் பெற்றவளின் மகளை எந்த நேர்மையானவன் வந்து மணப்பான்? பணமிருந்தால் அதைக் கண்டு பல்லையிளிக்கவாவது பலர் வருவார்கள். அதுகூட இல்லையே!

பாடுபட்டவன் பலன் கேட்கும் போது மறுப்பு எப்படிக் கூறுவது. என் மகளின் புதிய வாழ்வுக்குப் புண்ணிய தினமும் குறித்துக் கொடுத்து விட்டுத் திருப்பினேன்!

—வளரும்

ஏடு நாடுவோருக்கு

ஏக. நாராயணராசன்

அன்று மலையைக் குடைந்து வாழ்ந்த மகன் இன்று அணுவைக் குடைந்து வாழ்கிறான். அன்று கற்களை ஒன்றுடன் ஒன்றுராய்த்துத் தன் குகைக்குச் சிற்றொளி உண்டாக்கினவன் இன்று சிறு குமிழை அழுத்திப் பேரொளி பரக்கச் செய்கிறான். அன்று சித்திரங்கள் வரைந்து தன் கருத்தைப் பிறருக்கு அறிவிக்க முயன்றவன் இன்று இலக்கியச் சுவை சொட்டும் தீந்தமிழ் எழுதுகிறான். முடி மக்கள் வரலாற்றினையே கேட்டு வந்த மக்கள் இன்று குடி மக்கள் வரலாறு கேடக விரும்புகின்றனர்—படிக்க அவாவுகின்றனர். அறிஞர்கள் மட்டுமே அறிந்துகொள்ளும் வகையில் அமைந்த நூல்களைப் படிக்க விழையாமல், பாமரரும் புரிந்து கொள்ளும் வகையில், உள்ளதை உள்ளவாறு சித்தரித்துக் காட்டுகின்ற நூல்களே பெரும்பாலும் விரும்பப்படுகின்றன. வியத்தகு முறையில் முன்னேறியுள்ள மக்கள் உள்ளத்தைக் குழப்பத்திலாழ்த்தும் பற்பல ஏடுகள் இன்று திருவிடத்தில் திருஉலா புரிகின்றன! எத்தகைய ஏடுகளை நாம் வரவேற்க வேண்டும்? எந்த முறையில் நாம் அவற்றைப் படித்தல் வேண்டும்? என்பனவற்றை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளுதல் அவசியம். பகுத்தறிவுக்கு முற்றிலும் பொருந்தாத ஏடுகள் பல உலவும் இவ்வேளையில் எத்தகைய ஏடுகள் ஏற்றவை என்பதை அறிந்துக் கொள்வது அவசியம் மட்டுமல்ல; கட்டாயமும் கூட.

உலகில் மனிதன் தோற்றுவித்த புதுமைகளுள் புத்தகங்கள் போன்ற புதுமை எதுவும் கிடையாது. முன்னாளைய ஆங்கில அரசர்களில் ஆல்பிரட் பெரியார், முதல் வில்லியம் ஆகியோர் கல்வியில் அக்கரை காட்டினார்கள். ஆனால் அவர்கள்கூட அச்சடித்த புத்தகம் எதனையும் படித்ததில்லை. உலகில் அச்சுத் தோன்றியதே அவர்களுக்கு அறு நூறாண்டுகளுக்குப் பின்னர்தான்! அன்று மன்னர்களுக்குக் கிட்டாத செல்வம் இன்று ஏழை வீட்டிலும் வந்து காத்திருக்கிறது!

ஏட்டின் பக்கம் நாட்டம் செலுத்தாமல் அவப்பொழுது போக்குபவர் நம்மில் எண்ணிலர். ஏட்டில் நாட்டம் செலுத்தா அவர்கள்

குறுக்கெழுத்துப் போட்டி போன்ற குறுக்கு வழிகளில் பொழுது போக்கவே பெரிதும் அவாவுகின்றனர். ஏட்டுக் காதல ருள் தலைசிறந்த ஒருவர் ஜான் ரஸ் கின். அவர் ஒரு சிறுமிக்கு எழு திய கடிதம் ஒன்றில் குறித்த வாச கம், அத்தகையோர்க்கு ஒரு நல்ல தூண்டுதலாகும். **"மன்னருடன் மன் னராகப் பேசவல்ல மாபெருங் கவிஞர் ஷேக்ஸ்பியர் போன்றவர்கள் உன் னிடம் வந்து பேசக் காத்திருக்கும் போது, நீ சிறு திறத்தாருடன் சேர்ந்து சிற்றுரையாட்டில் காலங் கழிக்கலாமா?"** என்பதே அவ்வாச கம்.

இதிலிருந்து, நமக்குக் கிடைக் கும் நேரம் சிறிதாயினும் அதை அவப் பொழுதாக்காமல் அறிவு வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண் டுமென்ற விழுமிய நெறி புலனுகிற தன்றோ?

காலத்தைப் பொன்னுக்கவல்ல எந்த ஒரு நல்ல புத்தகத்தையும் விளையாட்டாகக் கையாடாமல், ஆழ்ந்து உள்ளார்வத்துடன் படிக்க வேண்டும். ஏனெனில் புத்தகத் தின் தாளும் மையும் அவை தோன்றிய காடுகளின் வாழ்வு கடந்து, புத்துருப் பெற்று, அறி ஞர்களின் அனுபவங்களையும், கலை ஞர்களின் கருத்தோவியங்களையும், கவிஞர்களின் கற்பனைக் காவியங் களையும் அள்ளி வைத்துக் கொண் டுள்ளன.

நம் கைக்கு ஒரு புத்தகம் வந்த தென்றால் இயற்கையின் மறை புதையல்களைத் திறந்து காட்டும் திறவு கோல்களுள் ஒன்று நம்மி டம் வந்து சிக்கியுள்ளது என்று பொருள். திறவு கோலைத் திறமை யுடன் பயன்படுத்தினுல் அப்புதை யலின் பெரும் பங்கு நமக்கே. பங்கு பெற இயலாவிட்டால் பங்கு பெறுபவர்க்கு உதவி செய்து மகிழ்ச்சி பெறலாம். அதை எறி வதுபோன்ற அறியாச் செயல் வேறில்லை. தொடர் வண்டியின் இலவசப் பயணச் சீட்டு ஒன்று கிடைத்தது எனக் கொள்வோம். அதைக் கொண்டு உலகெலாம் சுற்றிப் பார்க்கலாம் எனத் தெரிந்திருந்தும் அதனை எறிந்து விடுவோமா? நம்மால் பயன் படுத்த முடியா விட்டாலுங்கூட, அதனை வீணுக்காமல் யாருக்கா வது பயன்படும்படி கொடுக்கவோ பாதுகாத்து வைக்கவோ செய்வோ மன்றோ? நூல்களும் அப்படித் தான்!

நூல்களைப் படியாது அவப் பொழுது போக்குவது எங்ஙனம் தவறோ, அங்ஙனமே நல்ல நூல் களை விடுத்துப் பொழுது போக்கு மட்டும் தருகின்ற தற்காலிக ஏடு களையோ, கொச்சைச் சொற்கள் நிறைந்து, பயனில் இன்பம் தந்து, உள ஆற்றல் தளர்விக்கும் சிற் றேடுகளைப் படித்தலும் தவறே யாகும். படித்தலின் பயன் அறி வூட்டி, அறிவார்த்தைத் தூண்டு வது மட்டுமல்ல. இன்பூட்டிச் சிந் தனை யார்வத்தையும், புனைவாற் றலையும் பெருக்குவதும் அதன் குறிக்கோள்களாகும். இக் குறிக் கோள்களுள் ஒன்றேனும் காணப் படாத நூல்களைப் படிப்பதினும் படியாதிருப்பதே சிறந்தது. அத ஞல் நேரமும் உழைப்பூக்கமும் மிச்சம்! குறிக்கோளற்ற—பய னற்ற—நூலில் ஆர்வம் ஏற்பட்டு விட்டால், பின் அது மாறி, நல் லார்வம் ஏற்படல் அரிது.

இவற்றைக்கொண்டு புனைகதைகள், மயிர்க் கூச்செறியும் அரு நிகழ்ச்சிக் கட்டுரைகள், கற்பனைக் கவிதைகள் ஆகியவற்றைப் படிக்க வேண்டாம்; வரலாறும், வேதாந்தமும் மட்டுமே படிக்கவேண்டும் என்று கருதிவிடக் கூடாது. உண்மையில் ஆங்கில அரசனான எட்டாம் ஹென்றி ஏழு மனைவியரை மணந்தான்; மார்ல் பரோக் கோமகன் பிளென்ஹீம் வெற்றி பெற்றான், என்ற இறந்தகாலச் செய்திகளினும், சிறப்பாகப் புனைகதைகள் நம் எதிர்கால வாழ்க்கைச் செய்திகள்பற்றி நல்ல தூண்டுதல் தருபவையே. வாழ்க்கைத் தொடர்பற்ற போலி வேதாந்தங்களினும், வாழ்க்கை நிலத்துக்கப்பால் முகில் கிழித்து மேலும், கடலாழம் அகழ்ந்து கீழும் செல்லும் புனை இலக்கியங்கள் எத்தனையோ மடங்கு வளம் தருபவையே. ஆனால் செய்தியும்சரி, கற்பனையும் சரி இரண்டின் பயனும் அவை நம் ஆர்வத்தை வாழ்க்கையின் முன்னேற்றம் நோக்கி, அதற்கான நற்றகுதி நோக்கித் தூண்டும் அளவுக்குத்தான்!

நல்லேடுகள் செல்லும் வழியே நல்ல நாடும் செல்லும். புல்லேடுகளோ குற்றச் சிறைக் கூடுகள். அவை பொல்லாங்கு மேடுகளுக்கு இழுத்துச் செல்லும். எனவே தோழர்களைத் தேர்ந்தெடுப்பது போல நல்ல நூல்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். நற்பண்புகளமைந்த காதல் துணைவியைத் தேர்ந்தெடுப்பதுபோல், நற்கருத்துக்கள் நிரம்பிய நூல்களைத் தேர்ந்தெடுத்து குறிக்கோளை வளர்த்து வரவேண்டும். நல்லவற்றைத் தேர்ந்தெடுத்தல் என்பது தீயவற்றை ஒதுக்குதலேயாகும். இது வெளிப்பார்

வெளிவந்துவிட்டது!

மாணவர்களின் ஆங்கில
தமிழ் பொக்கிஷம்!
சிறந்ததொருபடைப்பு!

ஸ்ரீமகள் பாக்கெட்
இங்கிலீஷ்-தமிழ் அகராதி

English-English
Tamil Dictionary

20000 க்கு மேற்பட்ட ஆங்கில வார்த்தைகளுக்கு விளக்கம் நிறைந்த ஆங்கிலப் பதங்களும்—அதற் கேற்ற தமிழ்ப் பொருளும் இதில் சேர்க்கப் பெற்றிருக்கின்றன. இது உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படும் வகையில் தொகுக்கப் பெற்ற ஆங்கில அகராதியாகும்.

விலை ரூ. 2—8—0

ஸ்ரீமகள் கம்பெனி
த. பெ. எண்—275
சென்னை—1

வைக்குத் தோற்றுவதுபோல அவ்வளவு எளிதல்ல. ஏனெனில் எல்லா ஏடுகளும் நல்லவை என்ற கருத்துடன்தான் எழுதப்படுகின்றன, அச்சிடப்படுகின்றன, வெளியீட்டங்களில் விற்கப்படுகின்றன. அவற்றிடையே தேறும் தேர்வு பொதுத் தேர்வாய் இருக்க முடியாது—அவரவர் தேர்வாய் இருக்க வேண்டும்.

நல்ல நூல்களைத் தேர்வதில் நேரம் செல்கின்றதே; படைப்போர் நல்லவை அல்லாத நூல்களை ஏன் படைக்கவேண்டும் என்று நாம் வினு எழுப்பலாம். ஆனுல் நல்லது கெட்டது என்பது சூழ் நிலைகளைப் பொறுத்ததே, தேர்ந்தெடுத்ததின் பயனுகவே ஒன்று நல்லதாகும். ஒருவர் கெட்டது என்பதையே மற்ருெருவர் நல்லது என்று தேரக்கூடும். எனவே நல்லது கெட்டது என்பது பொருளின் தன்மையைச் சார்ந்ததன்று. அதை நுகர்பவன் தன்மையைச் சார்ந்தது.

எனவே, நல்ல புத்தகங்களைக் கண்டு தேர வழி யாதெனில் பயன் தரும் புத்தகங்களைப் பொறுக்கி எடுத்து அவற்றில் நமக்குப் பிடித்தவற்றைப் படிக்க வேண்டுமென்பதேயாகும். பயனிருக்கக்கூடும் என்று எண்ணும் நூல்களில் மிகு விருப்பமில்லாவிட்டால், முதலில் விட்டு விட்டு மேலீடாகப் படிக்க வேண்டும். அறிவு பெருகப் பெருக ஆர்வம் பெருகக்கூடும். ஆனுல் விரும்பாத எதையும் ஊன்றிப் படித்து 'வெறுப்புடன் வாசிக்கும் பழக்கத்தை மேற்கொண்டு விடக்கூடாது. வெறுப்பிலிருந்து வளர்ச்சி ஏற்படாது. வேண்டா வெறுப்பு அறிவை மரத்துப் போகச் செய்யும்.

இதுகாறும் கூறிவந்த சில குறிப்புக்களை மேற்கொண்டு நூல் நுகர்வோர் ஏடுகளைத் தேர்ந்தெடுத்துப் படிக்கும் முறையைக்கையாண்டால் நல்ல நூல்களின் படைப்பை விரைவு படுத்தவும், குறிக்கோளற்ற—அறிவைப் பாழாக்குகின்ற—சிந்தனைப் பறவையின் சிறகொடிக்கின்ற—நூல்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும்—ஏன்? அவற்றின் வாழ்வுக்கே முற்றுப் புள்ளி வைக்கவும் முடியும். அப்போதுதான் வெளியீட்டகங்கள் சாரமற்ற ஏடுகளை உருவாக்கும் உலைக்கூடமாக அமையாமல் வளம் பெற்ற நூல்களின் விளை நிலமாக அமையும். அப்போது நமக்கு வேண்டிய சாறு கிடைக்கும்—சக்கையல்ல! ஒளியில் வாழ்வோம்—இருளிலல்ல!

கல்கத்தாவில் அணு மழை

10-4-55-நேற்று கல்கத்தாவில் நடந்ததொரு கூட்டத்தில் கல்கத்தா சித்திரஞ்சன் புற்றுநோய் ஆஸ்பத்திரி டைரக்டர் டாக்டர் சுபோத மித்ரா பேசுகையில் கூறியதாவது: மார்ச்26, 27 ஏப்ரல் 3-ந் தேதிகளில் கல்கத்தாவில் அணுக்கதிர் இயக்கத் துகள் கலந்த மழை பெய்தது. ஆனுல், இத் துகள் மிகக் குறைவாக இருந்ததால், அதனுல் மிருகங்களின் உயிருக்கோ அன்றி தாவரங்களின் உயிருக்கோ எவ்வித அபாயமும் ஏற்படாது. பன்முறை அளந்து பார்த்ததில், அந்த 3 தினங்களிலும் நகரின் வழியாக வீசிய வடமேற்குப் பருவக் காற்று மழையில் அணுக்கதிர்த் துகள் கலந்திருப்பது தெரியவந்தது.



முத்து

"கிரீன் லாம்ப்"

முத்து நவரத்தினங்களில் ஒன்று...முத்தழகி எனக் காதலர்கள் தங்களின் காதலியை வர்ணிப்பதிலிருந்து முத்து எவ்வளவு அழகாக இருக்கும் என்பதை முத்தைப் பாராதவர்கள்கூட யூகித்துக் கொள்ளலாம். முத்து கடலில் வசிக்கும் சிப்பி என்ற ஒருவகைப் பூச்சியின் வயிற்றில் உற்பத்தியாகின்றது. இச் சிப்பியின் உடல் இரண்டு ஓடுகளால் இணைந்து அமைந்திருக்கினறது. அவ்வோடுகள் திறக்கவும், மூடவும் வல்லது. அவ்வோட்டின் மேல்புறம் சொரசொரப்பாகவும், உட்புறம் வழவழப்பாகவும், ஒளி உள்ளதாகவும் அமைந்திருக்கின்றது. அதனுள் அமைந்துள்ள சதையில்தான் முத்துக்கள் உற்பத்தியாகின்றன.

மழை பெய்யும்பொழுது முத்துச் சிப்பிகள் நீர்மட்டத்திற்கு வந்து தன் அகட்டைத் திறந்து நிற்கும்பொழுது, ஒருதுளி மழைநீர் அதனுள் விழுகின்றது. இதுவே நாளாக ஆக முத்தாக மாறுகின்றது என்று சிலர் கூறுகின்றார்கள். ஆனால், முத்துச் சிப்பிகளை ஆராய்ந்த பலரோ வேறுவிதமாகக் கூறுகின்றனர். அதாவது சிப்பிகளுக்குள், கடலுக்கு வெளியேயுள்ள தூசிகளோ, அல்லது கடலிலுள்ள பொடி மணல்களோ புகுந்துவிடுகின்றன. இதனால் அந்தச்சிப்பிக்கு அரிப்பு ஏற்படுகின்றது. அப்போது அச்சிப்பியின் சதைப் பாகத்திலிருந்து ஒருவிதமான கெட்டித் திராவகம் உற்பத்தியாகி அந்தத் தூசியையோ, மணலையோ சுற்றிச் சூழ்ந்துகொள்கின்றது. இதுவே வரவர இறுகி முத்தாகி விடுகின்றது. இதில் எது உண்மையோ நாமறியோம்.

பெரும்பாலும் நாம் வெள்ளை முத்துக்களை அதிகமாகப் பார்ப்பதால், வெள்ளை முத்துக்கள் மட்டுமே உண்டுபோலும் என எண்ண இடமுண்டு. ஆனால் சிப்பி வசிக்கும் பிரதேசம், கடல் நிறம், சிப்பியின் வகை இவற்றை அனுசரித்து முத்தின் வர்ணம் அமைவதால் மஞ்சள், ரோஜா, நீலம் ஆகிய வர்ண முத்துக்களும் உண்டு. அவற்றை நாம் அதிகம் காணமுடியாது. இவைகள் கிடைப்பது அபூர்வம். வர்ண முத்துக்களில் ஒரு மாலைசெய்யத் தேவையான முத்துக்கள் கிடைக்க அறுபது வருடங்களானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அம்முத்துக்களின் விலையும் மிக அதிகமாக இருக்கும்.

தோடு உயிருக்கே ஆபத்தும் ஏற்படுவதுண்டாம்.

முத்துக்குளித்தல் ஓர் அபாயகரமான தொழில் என்றே சொல்லலாம். விரைவாகத் தூக்குவதால் உயிருக்கு ஆபத்து. மேலும் கடலில் வாழும் கடல் பாம்புகள், கடல் குளவி, ஜெல்லி என்ற ஒரு வகை மீன், சுறு மீன் இவைகளால் கடலில் மூழ்குபவர்களுக்கு ஆபத்து உண்டு. சில கடல் பிராணிகள் கடித்தால், மேல்மட்டத்திற்கு வருவதற்குள் உயிர்போய்விடும். மூத்துக் குளிப்போரிடம் கேட்டாலோ, இது அபாயமற்ற தொழில் என்பார்கள். நவீனச் சாதனங்கள் பல உபயோகித்தும் இவ்வளவு அபாயங்கள் இருக்கும் போது அதிகமாக நவீனச் சாதனங்கள் உபயோகப் படுத்தாமல் சுமார் 90 அடி ஆழம் வரையிலும் சென்று இன்னும் முத்தெடுத்து வரும் தமிழனுக்கும், மற்றோருக்கும் எவ்வளவு அபாயங்கள் இருக்கும் என்று சொல்லவேண்டியதில்லை.

கடலுக் கடியிலிருந்து கொண்டு வந்த முத்துச் சிப்பிகளை உலர வைத்து, அதனுள்ளிருந்து முத்துக்களை எடுத்து ரசாயனதிரவங்கள் ஊற்றிச் சுத்தம் செய்து பளபளப்பு வரும்படியாக பாலிஷ் செய்கின்றனர். அதன்பின் முத்துக்களைச் சல்லடையில் போட்டுத் தரம் வாரியாகப் பிரித்தெடுக்கின்றனர். (தற்காலத்தில் போலி முத்துக்கள் நிறைந்துவிட்டதால் முத்துக்களுடன் போலி முத்துக்களைக் கலந்துள்ளனரா என்று பார்க்கும் பொருட்டு யந்திரம் ஒன்று கண்டு பிடித்துள்ளனர். முத்துக்களை அவ்வியந்திரத்தில் போடவேண்டும்; போலி முத்துக்கள் கலந்திருப்பின் யந்திரம் தானே நின்றுவிடும்) பிரிக்கப்பட்ட முத்துக்களை மாலையாகக் கோர்ப்பதற்காகத் துளை இடுகின்றனர். (துளை பெரிதாகிவிட்டால் அம்முத்தின் மதிப்புக் குறைந்துவிடும்.) அதன்பின்னரே முத்து விற்பனைக்குச்செல்கின்றது. முத்து மிகவும் மெல்லியதாகையால் கீழே விழுந்ததும் உடைந்து விடும். இரும்புப் பெட்டியில் இருப்பதாலும், காற்றிலும், வெயிலிலும் வெகுநாட்கள் இருந்தாலும் முத்தின் பளபளப்புக் குன்றிவிடும். இதற்காக சுமார் ஐந்து மாதங்களுக்கொருமுறையாவது உப்புத் தண்ணீரில் ஆறு எழு மணி நேரங்கள் முத்தை ஊறவைப்பார்கள். அல்லது 'ஹைட்ரஜன் பராக்ஸைடு' என்ற திரவத்தில் முத்தைக் கழுவுவார்கள், தீயினால் முத்துக் கருகிவிட்டால், கருகிய மேல்பாகத்தை மட்டும் உறித்து எடுத்தால் முத்து மீண்டும் பளபளப்பாயிருக்கும். முத்தை பஸ்பமாக்கி வைத்திய முறையில் மருந்துக்கும் உபயோகப் படுத்துகின்றனர். எவ்வளவோ கஷ்டங்களுக்கிடையே கடலுக்கடியிலிருந்து கொண்டுவரும் முத்தை நாமும் கொஞ்சம் கஷ்டப்பட்டு ஜாக்கிரதையுடன் பாதுகாத்தால் அதன் பளபளப்பு என்றும் குன்றாமலிருக்கும்.

என்றுமே மறக்க முடியாத இணையற்ற நாவல்கள்

வடுவூரார் வழங்கியவை

		ரூ.	அ.
கலியாணசுந்தரம்	...	2	0
சோமசுந்தரம்	...	2	0
தங்கம்மாள்	...	2	0
பச்சைக்காளி	...	2	0
மருங்காபுரி மாயக்கொலை	...	2	0
வஸந்தகோகிலம்	...	2	0
நீலலோசனி	...	2	0
நங்கைமடவன்னம்	...	2	0
சிங்கார சூர்யோதயம்	...	2	0
சொக்கன் செட்டி	...	2	0
சிவராமகிருஷ்ணன்	...	2	0
பிச்சுமுத்துக் கோனன்	...	2	0
நவநீதம்	...	2	0
துரைராஜா	...	2	0
இராஜேந்திர மோகன	...	2	0
சமயசஞ்சீவி	...	2	0
பாவடைச் சாமியார்	...	2	0
மிஸ்டர் பூச்சாண்டி எம்மே	...	2	0
முத்துலட்சுமி	...	2	0
டாக்டர் சோணசலம்	...	2	0
பூஞ்சோலையம்மாள்	...	2	0

விபரங்கட்கு:

ஸ்ரீமகள் கம்பெனி, சென்னை 1.

மராட்டியகுல மகிபன்

கி. மா. பக்தவத்சலன்.

காட்சி—1

காலம்: மாலை

இடம்: சிவாஜி வீட்டின் முன் புறம்.

இருப்போர்: சிவாஜி, ஜிஜிபாய்.

[சிவாஜி ஒரு மரக் குதிரை மேலேறி அமர்ந்து, ஆடிப்பாடிக் கொண்டிருககும் நேரத்தில் அவனுடைய தாயார் ஜிஜிபாய் வருகிறாள்...]

ஜிஜி: சிவாஜி! இன்னும் நீ சிறுவனல்ல. பொம்மைக் குதிரைமீதமர்ந்து ஆடிப்பாடிப் பொழுது போக்குவதென்பது இனியும் உனக்குப் பொருந்தாது! மகனே! மராட்டியத்தைப் பார்! அன்னியர்க்கு அடிமைப்பட் டிருக்கிறது. ஆயிரம் நன்மைகள் வந்தாலும் அடிமை வாழ்வது நரகமெந் நாளும் அல்லவா? பள்ளிக்குப் போவதும் திரும்ப வந்ததும் துள்ளித் திரிவதுமாய் இளஞ் சிங்கங்கள் இருப்பதனாலல்லவோ அன்னியர் நம்மை ஆள்பவராய் இருக்கின்றனர்......

சிவாஜி: மா! என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?

ஜிஜி: மராட்டியத்தின் மானம் இன்றைய இளைஞர்கள் கையிலிருக்கிறது மகனே! அதைக் காக்க அவர்கள் ஏதாவது செய்தாக வேண்டும். மாவீரர்கள் மலிந்த மராட்டியம் தில்லித்துருக்கர் ஆட்சிக்கு மண்டியிட்டுக் கிடப்பது ஏன்? எண்ணிப் பார்க்வேண்டும். வரி கொடுப்பது மராட்டியம். வாங்கிக் குவிப்பதோ தில்லி! மக்கள் வறுமையால் இங்கே வாடுகிறார். அங்கே ஆளவந்தார் மகிழ்ச்சியால் ஆடுகிறார். உண்மையை எடுத்துச் சொல்ல விரும்புவோரை ஒடுக்க நினைக்கின்றனர்



கி. மா. பக்தவத்சலன்

அந்த உலுத்தர்கள். சிலர் தேசப் பற்று சிறிதும் இல்லாமல் எச்சிற் பழத்திற்கு இச்சைப்பட்டுப் பணத்திற்கும் பதவிக்கும் பல்லிளித்துத் தில்லிப் பாதுஷாவின் பாதந் தாங்கிகளாக இருப்பதே இன்பமெனக் கொண்டிருக்கிறார்கள் — துரோகிகள்; துரோகிகள் பட்டியலில் சேர்ந்தவருள் ஒருவர் தான் உன் தந்தை!......

சிவாஜி: (கோபமாக) மா! தந்தையைத் துரோகியென ஏச உங்களுக்கு எப்படியம்மா மனம் வந்தது?

ஜிஜி: கொண்டவர் என்பதற்காக அவர் கொடுங் குணத்தைக் கூறுதிருப்பதா? குளிப்பாட்டி, கொம்புக்கு வர்ணம் பூசி, வயிறுரத் தீனி கொடுத்துக் காப்பாற்றிய நமது காளை நம்மைக் குத்த வந்தால் கொல்லட்டுமே என்று இருந்தா விடுகிறோம்? "மா! பிதா

எங்கே?" என்று, நீ எத்தனை தரம் கேட்டிருக்கிறாய் என்னை. மகனே! மராட்டியத்தை அடிமைப் பிடியில் மாளவிட்டு, தில்லியில் சுல்தான்களோடுச் சுகித்திருக்கும் சுரணையற்ற திருக்கூட்டத்தைச் சேர்ந்தவராகிவிட்டார் உன் தந்தை, என்பதைச் சொல்ல எவ்வளவு வேதனைப்படுகிறதென் நெஞ்சு தெரியுமா?......

சிவாஜி: மா! என்னை மன்னியுங்கள். விளையாட்டை இன்று முதல் நான் விட்டொழிக்கிறேன்.

ஜிஜி: மகனே! பெற்றபொழுதினும் பெரிதும் பூரிக்கிறேன்— எழுச்சிபெற்ற உன் தலைமையில் மராட்டியம் மீட்சிபெறும் என்ற நல்லதோர் நம்பிக்கை எனக்கு ஏற்படுவதால்!

(கூர்வாளொன்றைக் கொண்டு வந்து சிவாஜியிடம் கொடுத்து)

நம் நாட்டைப் பெற, மராட்டியம் நல்லாட்சி பெற, இந்தப் போர்வாள் உற்ற துணையாக என்றும் உன்னிடமே இருக்கட்டும்......

சிவாஜி: (மண்டியிட்டு வணங்கி, வாளைப் பெற்றுக்கொண்டு— எழுந்து)

மாத்ருபூமி வாழ்க!

மராட்டியம் வாழ்க!

ஜிஜி: பவானி அருள் பாலிப்பாள்.

[சிவாஜியின் நெற்றியில் திலகமிடுகிறாள்]

:திரை விழுகிறது.

காட்சி—2

காலம்: காலை.

இடம்: மலைச்சாரல்

இருப்போர்: சிவாஜி, வீரர்கள்.

[சிவாஜி சொற்பொழிவாற்றுகிறான்...]

சிவாஜி: மாவாலிகளே! மராட்டியம் பெற்ற மாணிக்கங்களே! கொடிய வாழ்வை இனிமையாக்கும் கொள்கைகொண்ட தோழர்களே! ஒன்று பட்டுவிட்டோம். நம்மை ஒடுக்க இனி ஒருவராலும் முடியாது. கொங்கணத்தை நம தாக்கிக்கொண்டோம்; நமது கொள்கை வளருகிறது என்பதற்கு இஃதோர் நற்சான்று. அப்சல்கான் உதட்டில் சமாதானத்தையும் உள்ளத்தில் சமரையும் தாங்கித் தனிமையில் என்னைச் சந்திக்கப் போட்ட திட்டமும் முடிவில் அவனே பொடிப் பொடியாகிப் போனதையும் நாம் அறிவோம்; நமது வீரத்தின் தரம் விரிவடைகிறது என்பதற்கு இஃதோர் எடுத்துக்காட்டு நமக்கு. நமதார்வத்தை—நாட்டுப்பற்றை நசுக்கிவிட நாசகாலர் ஔரங்கசீப், பெரும் படையோடு ஷெயிஷ்டகான் என்னும் தளகர்த்தரை அனுப்பியிருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரத்திலிருந்து செய்திகள் வந்திருக்கின்றன நமக்கு; இதுகாறும் நாம் கொண்டிருக்கும் இலட்சியத்திலிருந்தும் வழுவாது வைரமுடை நெஞ்சினராய் மூர்க்கத்தனமாக நம்மைத் தாக்கவரும் முகலாயர்களை முறியடிக்க வேண்டியது நமது பெரும் பொறுப்பாய் இன்னும் இருந்து வருகின்றது என்பதை இது நினைவூட்டுகிறது. தோழர்களே! பெரும் பயணத்தை நாம் தொடங்கியிருக்கிறோம். விடுதலைக்குப் போராடுகிறோம். விடுதலையைப் பேணிப் பாதுகாக்கவே நாம் விரும்புகிறோம். விடுதலை பெற்றவர்களாக வாழவே

நாம் விழைகிறோம். தில்லித் துருக்கர் துச்சமாக மதித்து நம்மைத் தூறு செய்தபோதிலும் அஞ்சவேண்டாம். இறுதி வெற்றி நமக்கே. ஜே பவானி!

வீரர்கள்: மாத்ருபூமி வாழ்க! மராட்டியம் வாழ்க! மாவீரர் சிவாஜி வாழ்க!

(திரை விழுகிறது)

காட்சி—3

காலம்: இரவு

இடம்: தில்லி — ஔரங்கசீப் அரண்மனை மண்டபம்.

இருப்போர்: ஔரங்கசீப், ஜெயசிங், காவலாளி...

[ஔரங்கசீப் ஆலோசிக்கிறான்.]

ஔரங்கசீப்: (தனிமையில்) எலியென எண்ணி ஏளனமாயிருந்தோம்; புலியாகிவிட்டான் அந்தப் பொல்லாதவன்!...ஷெயிஷ்டகானை—தில்லியின் தலைசிறந்த முகலாய தளகர்த்தனைத் திடீரென்று தாக்கி விரல்களுள் ஒன்றைத் துண்டித்துத் தூரத்தியிருக்கிறான். அவமானம், அவமானம்! பேரரசன் ஔரங்கசீபுக்கு இது பெரும் அவமானம்! (பற்களைக் கடித்து) சிவாஜி, நீ என்னிடம் சிக்கினால்... சிறையில் தள்ளுவேன்; சித்ரவதை செய்வேன்...(ஆத்திரம் அடங்கப் பெற்று) அவனை எப்படி அடக்குவது?.........முள்ளை முள்ளைக் கொண்டுதான் எடுக்கவேண்டும். வைரத்தை வைரத்தால்தான் அறுக்கவேண்டும்......... (உலாவி

தயாராகி விட்டது! அரிய படைப்பு!!

மகா கவி

பாரதியார் கவிதைகள்

தமிழுக்கு மறுமலர்ச்சியைத் தந்த
சுப்பிரமணிய பாரதியின் கவிதைத் தொகுப்பு

தேசீய கீதங்கள், தெய்வப் பாடல்கள், பல்வகைப் பாடல்கள், முப்பெரும் பாடல்கள்

ஆகிய நான்கு பாகங்களும் அடங்கிய

ஒரே புத்தகம்

விலை ரூபாய் ஆறு

தபால் செலவு தனி

அழகிய மூவர்ண முகப்பு; கலிகோ பைண்ட்

வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு உண்டு.

விபரங்களுக்கு:

ஸ்ரீமகள் கம்பெனி

சென்னை—1

நின்று) ஆம். அதுவே சரியான வழி.

[மணியடிக்கக் காவலாளி வருகிறான்]

காவலாளி: ஸலாம், ஸாஹேம் பனு!

ஔரங்கசீப்: ராஜபுத்ர தளகர்த்தர் ராஜா ஜெயசிங்கை அழைத்துவா!... அவசரம்.

காவலாளி: ஜி

[போகிறான்]

[சிறிது நேரத்திற்குள் ஜெயசிங் வருகிறான்]

ஔரங்கசீப்: ஜெயசிங்! சிவாஜி —சிறுவன்! முகலாயப் பேரரசின் மேல் மோதிக்கொள்கின்றான்— விளைவு என்னவாகும் என்பதை அறியாத முட்டாள்! மனம் வைத்தால் மராட்டியம் தரைமட்டமாகி விடும். வக்ரபுத்தி கொண்டவொருவனுக்காக மராட்டியமே வருந்தும்படி யாகிவிடும். அது வல்ல; நம் ஆசை. பொடியனைப் பிடித்துவந்து புத்தி புகட்டினால் போதும். அமைச்சரே! சிவாஜியைச் சிறைபிடித்துவர உங்களை அனுப்புகிறேன்...

ஜெயசிங்: மன்னவா, மிக்க மகிழ்ச்சி! அடுத்த வெள்ளிக் கிழமைக்குள் சிவாஜி — மராட்டியத்தின் மலைஎலி தங்கள் தாளடியில்!

ஔரங்கசீப்: அச்சா! ஜெயசிங்! காலவிரயம் கூடாது; நாளைக் காலையிலேயே புறப்படுங்கள்...

ஜெய்சிங்: உத்தரவு

[வணங்கிவிட்டுப் போகிறான்]

[திரை விழுகிறது]

காட்சி—4

காலம்: காலை

இடம்: மலைச்சாரல்

இருப்போர்: சிவாஜி! சந்திரமோகன், வீரர்கள்...

[சிவாஜி மிகவும் சோர்வாகக் காணப்படுகிறான். அருகில் சந்திரமோகனும் சில வீரர்களும் நின்றுகொண்டிருக்கிறார்கள் அமைதியிழந்து...]

சந்திரமோகன்: சிவாஜி! புதிராக வல்லவோ இருக்கிறது உன் போக்கு? என்ன உன் எண்ணம்? முகலாயர் படை ராஜகிரியை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது. நெருக்கடியான நேரம்! நீயோ — வழக்கத்திற்கு மாறாக வாளாவிருக்கிறாய்!... அதோ பார்! மாவாலிகள் அணிவகுத்திருக்கிறார்கள்... உன்னைத்தான் — விடுதலைப் போராட்டத்தின் உயிரோட்டமாகிய உன்னைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்...

சிவாஜி: சந்திரமோகன்! வீரர்களைக் கோட்டைக்குள் செல்லுமாறு உத்திரவிடு.

எல்லோரும்: (ஆச்சரியமாக) என்ன?

சிவாஜி: ஜெய்சிங்கை எதிர்ப்பதாக என் எண்ணமில்லை.

சந்திரமோகன்: என்ன!...... மாவீரா, ஏனிந்த மாற்றம்?

சிவாஜி: மராட்டியம் பெற்றுவரும் ஒற்றுமையைக் குலைக்க ஔரங்கசீப் சதி நாடகமாடுகிறான். முகலாயத் தளகர்த்தர்களை மட்டுமே நம்மை முறியடிக்க அனுப்பி வந்த ஔரங்கசீப் திடீரென்று தன் முடிவை மாற்றிக்கொண்டிருக்கிறான். ஏன் தெரியுமா? — ஜெய்சிங்கை நாம் எதிர்ப்போமென்று! ஜெய்சிங் யார் தெரியுமா?......ராஜபுத்திரன்...

வீரன்: அப்படியென்றால்?...

சிவாஜி: நம் இனம்! நம்மை நம்மோடு மோதவிட்டு

நமக்கு நாமே நாசத்தைத் தேடிக் கொள்ள ஔரங்கசீப் தேர்ந்தெடுத்திருக்கிறன் இப புதிய திட்டத்தை, நப்பாசையால்! ஜெய்சிங்கை நாம் தோற்கடிப்போமானல் ராஜபுத்திரர்கள் இன வுணர்ச்சி பெற்றுத் திரண்டெழுவர். ஒருபுறம் துருக்கர்களோடும் மற்ருேர்புறம் தோழர்களோடும் நாம் போராட வேண்டியவர்களாகிவிடுவோம். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒற்றுமையுடனே எருதுகள் நான்கும் ஓரிடந்தனில் மேய்ந்திருக்கக் கண்ட புலியொன்று அவற்றைப் புசிக்க முயன்றும் முடியாமல்போகவே தந்திரமாக நரிதனை அனுப்பி, அவைகள் கொண்டிருந்த ஒற்றுமையைக் குலைத்துப் பின் ஒவ்வொன்ருகக் கொன்று தின்ற கதை நம் நினைவில் இருக்கவேண்டும்.

வீரன்: உண்மைதான்.

சந்திரமோகன்: அதற்காக, முன்னேறிவரும் மொகலாயப் படையை நாம் தடுக்காமல் இருப்பதா?

சிவாஜி: வெள்ளம் வருமென்ருல் அணைபோடத்தானே வேண்டும்? மோகன்! அதற்காகத்தான் உன்னை இப்போது ஜெய்சிங்கிடம் அனுப்பி வைக்கப்போகிறேன்.

சந்திரமோகன்: என்ன!

சிவாஜி: ஜெய்சிங்கிடம் செல். எய்தவனிருக்க அம்பை நோகும் எண்ணம் எனக்கில்லை என்பதை எடுத்துச் சொல். எதற்கும் இந்தக் கடிதத்தை எடுத்துச் செல்...

[அமர்ந்து எழுத ஆரம்பிக்கிருன்]

[திரை விழுகிறது]

காட்சி—5

காலம்: மாலை

இடம்: பாசறை

இருப்போர்: ஜெய்சிங், சந்திரமோகன், காவலாளிகள்.

[ஜெய்சிங் கடிதமொன்றைப் படித்துக்கொண்டிருக்கிருன். மற்ருெர் புறத்தில் சந்திரமோகன் உட்கார்ந்திருக்கிருன்.]

உடல் பருமனுன பெண்கள்

அமெரிக்காவில் மிகக் குறைவாம்!

அமெரிக்காவில் பெண்களில் உடல் பருமனுக இருப்போர் மிகக் குறைவான அளவே உள்ளனர் என்று ஜெனரல் பிராங்கோவின் மகள் அண்மையில் அங்கு சென்று திரும்பிய பிறகு கூறியதாக மாட்ரிட் நகரிலிருந்து வரும் 'சூசெடியோ' எனும் இதழில் குறிப்பிட்டப் பட்டிருக்கிறது.

"பொதுவாக அமெரிக்கப் பெண்கள் அழகாயிருக்கின்றனர். எனக்கு ஆச்சரியத்தை அளித்ததெல்லாம், அங்கு நான் மிகப் பருமனுன பெண்கள் எவரையும் பார்க்கவில்லை. அவர்கள் எல்லாம் நளினமாகவும், அழகான தோற்ற முடையவர்களாயுமிருக்கின்றனர்" என்று அந்தப் பெண்மணி கூறினராம்.

ஜெய்சிங்: (கடிதத்தைப் படித்து முடிந்ததும்) நல்லது. சிவாஜிக்கு என் நன்றியைச் சொல்லுங்கள். அவரைப்போலவே — அவரோடு முகலாயச் சக்கரவர்த்தி ஔரங்கசீப் அவர்கள் சமாதானமாகப் போகவே ஆசைப்படுகிறார் என்பதையும அறிவியுங்கள். தில்லிக்கு அவர் வரும் தேதியைக் குறித்து எனக்குத் திட்டவட்டமாகத் தெரிவியுங்கள். சிவாஜிக்கு எங்களால் எவ்விதத் தீங்கும் சம்பவிக்காது. அவர் ஒரு அரசருக்குரிய சகல மரியாதைகளுடனும் நடத்தப்படுவார்; அதில் சந்தேகப்பட வேண்டாம்.

சந்திரமோகன்: மிக்க மகிழ்ச்சி! (வணங்கி) நான் வருகிறேன்.

[போகிறான்]

திரை விழுகிறது.

காட்சி—6

காலம்: காலை

இடம்: தில்லி — அரண்மனை, விசாரணை மண்டபம்.

இருப்போர்: ஔரங்கசீப், சிவாஜி, படைவீரர்கள்...

[அரியாசனத்தில் ஔரங்கசீப் அமர்ந்திருக்கிறான். சிவாஜி அவைக்கு அஞ்சா நெஞ்சத்தோடு வந்து மன்னனுக்கு வணக்கம் செலுத்துகிறான். ஔரங்கசீப் அதை அலட்சியமாக ஏற்றுக்கொள்கிறான்.]

ஔரங்கசீப்: (கோபமாக) சிவாஜி! நீ சிறுவன்! விளக்கோடு விளையாடும் விட்டிலைப்போல் — விளைவை அறியாது, தொண்டு செய்வதற் கென்றே பிறந்தோம் என்றிருந்தோரைக் கூட்டி வைத்துக்கொண்டு, எங்குமிந்த விடுதலைப் பேரார்வத்தை ஏவி ஓட்டம் நாங்கள் எடுக்கவென்றே நடத்துகிறாய் சேனை! அடுக்குமா இது? அடிமை! அச்சம் நீங்கினாயோ? சிங்கத்தின் முன் சிறு நரி! பகலவன் முன் பனித்துளியா? கூடாது, கூடாது! சுட்டுவீழ்த்தியே புத்தி வருத்திடச் சொல்லுவேன்...

சிவாஜி: சக்ரவர்த்தி! சுட்டு வீழ்த்தினாலும் — சதையைத் துண்டு துண்டாக்கினாலும் என் எண்ணம் சாகாது. நாட்டிலெங்கும் சுதந்திர வாஞ்சையை நாட்டினேன் என்பதற்காக வாட்டியென்னைச் சிறைக்குள்ளே மாட்டிட வழிகாட்டுகிறீர். கோழைப்பட்ட மக்களுக்கு உண்மைகளை எடுத்துக் கூறினேன்; இது குற்றமா? மராட்டியத்திடை அன்பு செலுத்துதல் பாபமா? எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவியிருந்த அந்த எழில் நாட்டைப் போற்றுதல் ஈனமா? பொழுதெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளை கொண்டு போக நாங்களும் எவ்வளவு காலம்தான் பார்த்திருப்போம். நாங்கள் ஆண்பிள்ளைகள் அல்லவா? உயிரென்ன — வெல்லமோ? சொல்லுங்கள் சுல்தான்; சொல்லுங்கள். எங்கள் இழிவைப் போக்கிக்கொள்வது எப்படி? உலகோடு மராட்டியமும் தலைநிமிர்ந்து உலாவிடப் போராடிச் சுதந்திரத்தைப் பெறுவதைவிட வேறு வழி உண்டோ? சுட்டுத்தள்ளுவேன்; சதையைத் துண்டு துண்டுகளாக்குவேன் என்று சொல்கிறீர்களே அவ்விதமே செய்யுங்கள். "**தனியரசு பெற்ற மராட்டியம்**" என்று உயிர் போகும்வரை வாழ்த்துவோம்; தலைதாழ்த்துவோம். (குனிகிறான்)

ஔரங்கசீப்: (ஆத்திரமாக) யாரங்கே! சிவாஜியைப் பிடியுங்கள்

சிறையில் அடையுங்கள். (எழுந்து) சபை இத்தோடு கலைகிறது. (போகிறுர்)

திரை விழுகிறது.

காட்சி—7

காலம்: இரவு

இடம்: சிறைச்சாலே

இருப்போர்: சிவாஜி, காவலாளிகள்...

[சிவாஜி பாடிக்கொண்டிருக்கிருன்.]

காவலாளி-1: வஹ்! குஷியா பாடருன்!...அச்சா! ஜோர் ஹை!

[இரண்டாவது காவலாளி வருகிருன்]

காவலாளி-2: யார்ரு இவன்!

காவலாளி-1: மஜ்னு ஹை!

காவலாளி-2: (ஆச்சரியத்துடன்) என்ன சொல்ருன்?

காவலாளி-1: கொழுப்பு! வலிய வந்து வலேயில் மாட்டிக்கொண்டிருக்கிருன்! நீயே சொல்லு; இந்தச் சுண்டெலியால் நம்பள் பாதுஷாவை ஜெயிக்க முடியுமா?

காவலாளி-2: ஓ! ஆழம் தெரியாமே குளத்திலே காலேவிட்ட ஆளா? ...அடாடா!......என்னமா பாடருன்!...ஆ!......ஆமாம்......அச்சா...

[சிவாஜி பாடுவதற்கு ஏற்றபடி தானும் பாடிக்கொண்டே ஆட ஆரம்பிக்கிருன்...முதல் காவலாளி ஆடல் பாடல்களில் மூழ்கிவிடுகிருன் அந்தச் சமயத்தில் பழக்கூடையைத் தூக்கிக்கொண்டு ஒருவன் அங்கே வருகிருன்.]

காவலாளி-1: என்ன இது?

பழவியாபாரி: பழக்கூடை

காவலாளி: உத்தரவு எங்கே?

பழவியாபாரி: இதோ! (ஒரு கடிதத்தைக் காண்பிக்கிருன்)

காவலாளி-1: கொண்டுபோ.

[பழக்கூடை கொண்டுவந்தவன் உள்ளே போக, ஆடிப்பாடிக்கொண்டிருந்தவனோடு சேர்ந்து கொள்கிருன்...சிறிது நேரத்திற்குப் பிறகு பழக்கூடையைக் கொண்டு சென்றபின் திரும்புகிருன்...]

காவலாளி-2: கொடுத்தாச்சா?

பழவியாபாரி: ஆச்சு!

[சோதனையிடுவதற்காகக் கூடையை இறக்குகிருன்)

காவலாளி-2: சரி, போ!

[பழவியாபாரி கூடையோடு வெளியே போகிருன்...அவ்விரு காவலாளிகள் ஆடலும் பாடலும் அடங்குகிறது...]

முக்கிய அறிவிப்பு

பத்திரிகை சம்பந்தமாகக் கடிதத் தொடர்பு கொள்வோர்:

ஆசிரியர்

கலைமன்றம், சென்னை—1.

என்ற முகவரியிட்டே எழுதுதல் அவசியமாகும்.

சந்தா—ஏஜென்ஸி சம்பந்தமான கடிதங்கள், கணக்கு விபரங்கள் மணியார்டர்கள், முதலியவைகளையும் மற்ற, சர்குலேஷன் சார்புள்ள சகல தொடர்புகளையும்......

மானேஜர்

கலைமன்றம், சென்னை—1.

என்ற முகவரிக்கே எழுதுதல் வேண்டும்.

—உரிமையாளர்.

காவலாளி-2: அடே! அவனே இன்னுமொரு பாட்டு பாடச் சொல்லு...

காவலாளி-1: உஹூம்! நான் மாட்டேன். வேணுமின்னு நீயே போய்க் கேளு. அவனைப் பார்க்கவே எனக்கு என்னமோ மாதிரி இருக்கு.

காவலாளி-2: து க்யா ஆத்மி ஹை! நானே போய் சொல்றேன்... அவன் பாடறான் பார்...

[உள்ளே போய்ப் பார்த்து விட்டு]

ஏ! ஏ! இங்கே ஓடிவா! ஓடிவா! எங்கே அவன்?

காவலாளி-1: (பதறி ஓடிப் போய்ப் பார்த்து) என்னது. கொஞ்ச நேரத்திற்கு முன்னாலே காணவிலே யிருந்தான்; இப்போ காணும போயிட்டான்......பாவிப் பய கம்பி நீட்டிட்டான் போலிருக்கே. பாதுஷாவுக்கு இது தெரிஞ்சுதுன்னு...உயிரே...என் உயிரே...போ...போயிடு...ம்...

[மயங்கிக் கீழே விழுகிறான்[

திரை விழுகிறது.

காட்சி—8

காலம்: இரவு

இடம்: புவனேஸ்வரர் கோவில்

இருப்போர்: புரோகிதர்கள், பீஷ்வாக்கள்.

[புவனேஸ்வரர் கோவில் — புரோகிதர்கள், பீஷ்வக்கள் கூடியிருக்கிறார்கள் கூச்சலும் குழப்பமுமாக இருக்கிறது]

ஒருவன்: நல்லதை சொல்கிறோம்; நம்மையே எளிநகையாடுகிறார்.

மற்றொருவன்: 'கேடு வரும் பின்னே; மதி கெட்டு வரும் முன்னே' என்று தெரியாமலா பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள்!

ஒருவன்: இன்றே நாம் இந்த விஷயத்தில் ஒரு முடிவிற்கு வந்தாகவேண்டும். சுற்றி வளைத்துப் பேசுவானேன்; சிவாஜிக்கு நாம் திட்டவட்டமாகச் சொல்லிவிட வேண்டும்—அவர் முடி சூட்டிக் கொள்ளக் கூடாதென்று.

மற்றொருவன்: இதென்ன அநியாயம்? சிவாஜிக் கில்லையென்றால் மராட்டியம் தனியரசாகிட முடியுமா? பொல்லாங்குக்காரர்கள்—பொறாமைப் பேயர்கள். யாரோ வேண்டுமென்றே இந்த விஷப் பேச்சைப் பரவவிட்டுவிட்டு வேடிக்கை பார்க்கிறார்கள். சிந்தித்துப் பாருங்கள்; நம்முடைய ஒற்றுமை சீர்குலைந்து போகக் கூடாது. சிவாஜியை மன்னனாகும் படி நாம்தானே கேட்டுக் கொண்டோம்? நாமே அவர் முடிசூடக் கூடாதென்று சொல்வது என்ன நியாயம்?

ஒருவன்: போதும் உன் பிரசங்கம். சிவாஜி யார் தெரியுமா?—சூத்திரன்!

இரண்டொருவர்: (ஆச்சரியத்துடன்) சூத்திரன்!

மற்றொருவன்: சிவாஜி — சூத்திரன்! (கோபமாக) யார் சொல்வது?

ஒருவன்: ஏன்?—நான் சொல்கிறேன்; இந்த நாடே சொல்கிறது. மமதையால் சிவாஜி உக்குமையை மறுக்கிறான். மதமில்லை சாதி சமயமில்லை என்று நம்மரசு மருட்டுகிறான்... யிர்

மற்றொருவன்: உண்மைதானே; கட்டுக்கள் போக்க விடுதலை போரிட்டபோது காணாத கதை க) பீடத்திலேறும் போது பீதிப்கள்

கிளம்புகிறது. எங்ஙனம் கற்றீர்? எதுக்கிதைப் பெற்றீர் அறிவு கொண்ட மனிதர்களே! மூத்த பொய்மைகள் மூடக்கட்டுக்கள் அடிமையாக முயலாதீர்கள்...

ஒருவன்: போதும் நிறுத்து! (கோபமாக) போதனை வேண்டுவது உனக்கு. பிடித்துக்கட்டுங்கள் அவனை...

[கூச்சலும் குழப்பமும் அதிகரிக்கின்றன]

திரை விழுகிறது.

காட்சி—9

காலம்: காலை

இடம்: தில்லி — அரண்மனை விழா மண்டபம்.

இருப்போர்: ஔரங்கசீப், பிரபுக்கள், பிரதானிகள்...

[அரியாசனத்தில் ஔரங்கசீப் அமர்ந்திருக்கிறான். காவலாளி ஒருவன் கடிதமொன்றைக் கொண்டுவந்து கொடுக்கிறான்...]

ஔரங்கசீப்: (படிக்கிறான்) "பட்டாளச் சக்கரவர்த்தியாரே! தில்லிப் பாதுஷாவே! வணக்கம். தாங்கள் என்னுடன் புரிந்த போர்கள் பல. திறமைமிக்க பல தில்லித் தளகர்த்தர்களை என்னை வென்று வாகை சூடிவர அனுப்பி வைத்தீர்கள். அவர்கள் என்னவானார்கள் என்பது தாங்கள் அறிந்ததே. ஷெயிஷ்டகான் ...ரல்களுள் ஒன்றை என் வீரத் கிருக் காணிக்கையாகக் கூ...த்துவிட்டு விரைந்தோடி ஒருதுகொண்டார். அவருக்குப் க...ஜெய்சிங்கை அனுப்பினீர்கள். ...வான நான் மற்றொரு க...வைக் கொன்று மராட்டிய ...ராஜ்யம் அமைக்க ஆசைப் கடி...ல்லை. ஆகவே நான் அடி கா...தேன். எனக்கு எத்தீங்கும் விளைவிப்பதில்லை என்றும், நான் ஒரு மன்னனுக்குரிய மரியாதைகளுடன் நடத்தபபடுவேன் என்றும் வாக்களித்து என்னைத் தில்லிக்கு அழைத்தீர்கள். வாக்குறுதி கொடுப்பவன் அதற்குக் கடனாளியாகிறான் என்ற வாசகம் தாங்களறிந்ததாயிருக்கலாம். தங்கள் வாக்குறுதியை நம்பி நான் தங்கள் அவைக்கு வந்தேன். ஆனால், சொன்ன சொல்லை மறந்து, சூதுமதிகொண்டு, எங்கள் சுதந்திர எழுச்சியைத் துச்சமென மதித்து என்னை இழித்தும் பழித்தும் பேசிச் சிறையில் தள்ளினீர்கள். சிறைச்சாலை—தேசாபிமானம் கொண்டவரை என்ன செய்யும்? தந்திரத்தைக கை

பிற நாட்டு நல்லறிஞர்களின் பொன் னேடுகள்

		ரூ.	அ.
நான் ஏன் நாத்திகன் (இங்கர்சால்)	...	1	0
வால்டையர் (”)	...	1	0
சீர்திருத்தம் (”)	...	1	0
மதங்கள் (”)	...	1	0
அறியாமை (”)	...	1	0
கடவுள் (”)	...	1	0
மக்கள் உரிமை(”)	...	1	0
தொழிலாளர்	...	1	0
நெப்போலியன்	...	1	0
ஒளிவிளக்குகள்	...	1	0
மாஜி கடவுள்கள்	...	1	0
சீனத்துச் சிங்கம்	...	1	0
ரஸ்புடீன்	...	0	8
தாமஸ் மசாரிக்	...	1	0

ஸ்ரீமகள் கம்பெனி,
சென்னை-1.

யாண்டு சிறையிலிருந்து — சிங் கனைக் கூடத்திலிருந்து தப்பி வந் தேன். இனி என்ன செய்யப் போகிறீர்கள்? அதை அறிய ஆவலுள்ளவனாக யிருக்கிறேன்.

முகலாயப் பேரரசின் முதல்வ ரான அக்பர் எம்மதமும் சம்மத மெனக் கொண்டார். பாசமும் நேசமும் பரிணமிக்க ஜஹாங்கீர் ஆண்டார். ஷாஜஹான் அழகுற ஆட்சி செய்து, இசையுடன் வாழ்ந்து இனிமையே பூண்டார். இந்த முகலாய மன்னர்கள் தங் களைப்போல் மதவெறி கொண்ட மூர்க்கர்களா யிருக்கவில்லை. மக் கள் தொண்டே மகேசுவரன் தொண்டு. நாம் அனைவரும் ஒன்றுபட்டு வாழ்வதே நன்று. ஒன்றே குலம்; ஒருவனே தேவன்— குர்-ஆன் முதலான ஏனைய நூல்களும் இதனையே குறிப்பிடுகின்றன. உண்மையது. நீங்கள் உணர்ந்தால் உய்வுண்டு இல்லையேல் அழிவு நிச்சயம் சுயாட்சி பெற்ற மராட்டியமே எங்கள் இலட்சியம்.

அன்பன்,
சிவாஜி.

ஔரங்கசீப்: (படித்து முடிந்த தும்) சபையோர்களே! சிவாஜி யின் குணத்தைச் சிறப்பிக்கிறது இக்கடிதம். வீட்டிற்கு வீடு சுவர் இருப்பதுபோல்—வயலுக்கு வயல் வரப்பு இருப்பதைப் போல்—நாட் டிற்கு நாடு ஒரு எல்லை இருக்க வேண்டுமென்பது மராட்டியர் களின் விருப்பம். சிறுமைக் குணங்களை யொழித்து சேர்ந்து வாழக் கற்றுக் கொடுத்துவிட் டான் சிவாஜி! சொந்த நாட்டிற் பார்க்கடிமை செய்தே துஞ்சி டோம் எனச் சூளுரைத்துவிட் டான். ஆட்சி, அதிகாரம் இவை களால் இனியும் அவர்களின் விடுதலை வேட்கையை அடக்கிவிட ஒருவராலும் ஆகாது. காலத்தின்

சுருக்கெழுத்து எழுதும் யந்திரம்

பிரசங்கங்களைச் சுருக்கெழுத்துக் குறிப்பெடுத்து, அச்சடித்துத் தரும் யந்திரம் ஒன்று இப்போது லண்டனில் நடைபெறும் பிரிட்டிஷ் வர்த்தகக் காட்சியில் இருக்கிறது. இந்த யந்திரத்திற்கு பல நாடுகளில் நல்ல வர வேற்பு உண்டு. ஒலி மூலம் எழுத்துக்களைப் பதிவு செய்யும் முறை கையாளப் படுவதால் எந்த மொழிக்கும் பதிவு செய்யும் முறை கையாளப் படுவதால் எந்த மொழிக்கும் ஏற்றபடி இதைத் திருப்பிக் கொள்ள முடியும். நீண்ட பிரசங்கங்களையும் சுலபமாகப் பதிவு செய்து கொள்ள முடியும்.

இந்த யந்திரம் 1939-ல் பிரிட்டனில் அமைப்புஉரிமை பதிவு செய்யப் பட்டது.யுத்தம்குறுக்கிட்டதால் உற்பத்தி தடைப்பட்டது. 1946-ல்உற்பத்தி ஆரம்பமாயிற்று. இந்த யந்திரத்தை கையாள பயிற்சி தர ஹால்போர்னில் ஒரு கல்லூரி யிருக்கிறது இருபது நாடுகளைச் சேர்ந்தவர்கள் இங்கு பயிற்சி பெறுகிறார்கள்.

மாறுதலே நாம் ஒப்புக்கொள்ள வேண்டும் கண்ணியமாக. மன்னித் தலே—பகைமையை மறத்தலே—நல்லதைப் பாராட்டுதலே சுத்த வீரர் மாண்பு. அடிமைப்பட்டிருக்கும் மராட்டியம் விடுதலை பெற்ற மாத்ருபூமியாக — மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையாக வேண்டுமென சத்ரபதி சிவாஜி விரும்புவதைப் போலவே, நாமும் ஆசைப்படுகிறோம். நாம் அவருக்கு பீராரில் ஒரு ஜாகீரையும் அவரிடமிருந்து கைப்பற்றிய இடங்களையும் அளித்து, **மராட்டிய மன்னர்** என்னும் பட்டத்தையும் கொடுத்து அவருடன் சமாதான மாகப்போக விழைகிறோம்.

அவையினர்: ஜே, பாதுஷா! ஜே, சிவாஜி!

ஔரங்கசீப்: அமைச்சரே! நமது நல்லெண்ணத்தை மராட்டிய குல மகிபனுக்கு இன்றே அனுப்பி வையுங்கள்.

அமைச்சர்: உத்தரவு.

[ஔரங்கசீப் போகிறார்]

திரை விழுகிறது

காட்சி—10

காலம்: காலை

இடம்: கங்கைக்கரை — ஓர் ஆஸ்ரமம் அருகில்.

இருப்போர்: காக பட்டர், இருசீடர்கள், இருதூதுவர்கள்...

[காக பட்டர் வேதமோதிக் கொண்டிருக்கிறார்]

சீடன்-1: (வந்து வணங்கி) குருதேவா! குதிரை வீரர்கள் யாரோ வருவதுபோல் தெரிகிறதே!

காக பட்டர்: வரட்டுமே! எதற்காக இந்தப் பதட்டம்? அசடு! இங்கே எந்தக் கோட்டை இருக்கிறது? போராடுவதற்கு இதுவா இடம்; இது பூஜா மடம்!

[குதிரை மீதேறி வந்தவர்கள் ஆஸ்ரமத்திற்குக் கொஞ்ச தூரத்திலேயே ஒரு மரத்தில் தங்கள் குதிரைகளைக் கட்டிப்போட்டு விட்டு வந்து, காக பட்டரை வணங்குகிறார்கள்]

தூதுவன்-1: ஸ்வாமி! மராட்டிய குல மகிபர்......மாவீரர்...... சத்ரபதி சிவாஜி அவர்கள் தங்களைத் தரிசிக்கவும் தங்களிடம் முக்

திராவிடரியக்கச் செம்மல்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள்

அறிஞர் அண்ணாதுரை	...	0 8
தலைவர் பெரியார்	...	0 8
புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்	...	0 8
கடமை வீரர் கருணாநிதி	...	0 8
அஞ்சா நெஞ்சன் அழகர்சாமி	...	0 8
பன்னீர் செல்வம், பாண்டியனார்	...	0 8
நெடுஞ்செழியன், நடராசன், மதியழகன்	...	0 8
சம்பத், நீலமேகம்	...	0 8
ஆசைத்தம்பி, சிற்றரசு	...	0 8
பூங்கோதை, அருண்மொழி, ராமாமிர்தம்	...	0 8

ஸ்ரீமகள் கம்பெனி,

சென்னை-1

கிய விஷயமாக ஆலோசனை கேட்க வும் தாங்கள் ராஜகிரிக்கு எழுந் தருள வேணுமாய்ப் பிரார்த்திக் கிறார்...

சீடன்-2: (ஆச்சரியத்துடன்) என்ன?

தூதுவன்-2: குருதேவரை சத்ரபதி சிவாஜி வரும்படி கேட் கிறார்...

சீடன்-1: என்ன குருதேவ ருக்கு அவ்வளவு வரும்படியா கிடைக்கிறது?

காக பட்டர்: மண்டு! வாயை மூடுடா! சம்பந்தா சம்பந்தமில் லாமல் உளறித் தொலைக்கிறது கள்! (தூதுவர்களைப் பார்த்து) புண்ணிய நாள் பார்த்து நாம் ராஜகிரிக்குப் புறப்பட்டு வரு கிறோம். நீங்கள் முன்னதாகப் போய், சிவாஜியிடம் சேதியைச் சொல்லுங்கள். சுப்ராப்ரதஸ்து!

[தூதுவர்கள் வணங்கிவிட்டுப் போகிறார்கள் சீடர்களைப் பார்த்து காக பட்டர் சிரிக்கிறார்]

திரை விழுகிறது

காட்சி—11

காலம்: காலை

இடம்: ராஜகிரி—அரண்மனை; விழாமண்டபம்.

திருமணப் பரிசுக்குரிய அரிய நூல்கள்

தம்பதிகள் சுகமாய் வாழ்வதெப்படி?	3	12	0
திருக்குறள்—பரிமேலழகர் உரை	5	0	0
திருக்குறள் சிறப்புரை	1	4	0
முல்லைக்காடு	0	8	0
நல்ல பெண்மணி	2	4	0
இன்ப நிலா	1	0	0
புது வாழ்வு	1	0	0
வாழ்க்கை வாழ்வதற்கே	0	12	0

ஸ்ரீமகள் கம்பெனி, சென்னை-1

இருப்போர்: சிவாஜி, காக பட்டர், படைவீரர்கள், பார்ப் பனர்கள், ஆடலழகிகள்...

[சிங்காதனத்தில் அமர்ந்திருக் கிறான் சிவாஜி; அமைச்சர்களும் அந்தணர்களும் அவனருகில் அமர்ந்திருக்கின்றனர். நடனம் நடைபெறுகிறது...]

சிவாஜி: (எழுந்து நின்று பேசு கிறான்) பிராமணோத்தமர்களே! பிரபுக்களே! பிரதானியர்களே!... மராட்டிய சாம்ராஜ்யம் மலர ஆருயிரையும் அர்ப்பணித்த அனை வர்க்கும் என் நன்றி; வணக்கம். வரலாற்றுப் பொன்னேடுகளில் புதியதோர் அத்தியாயத்தை இன்று நாம் ஆரம்பித்து வைக் கிறோம். விடுதலை பெற நாம் கொடுத்திருக்கும் விலை அளவிடற் கரியது. "முடியும் — முயன்றால்" என்ற இலட்சிய முழக்கத்தை உலகு முன் வைத்திருக்கிறோம், பிற்பட்டிருப்போரும் முன்னேறு வதற்காக. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; நம்மில் ஒற்றுமை நீங் கின் அனைவர்க்கும் தாழ்வு என் பதை நாம் உணர்ந்திருக்கிறோம். வாழ்வின் பூர்வகட்டத்தில் நாம் பெற்றிருக்கும் பெரும் பொறுப் பைக் குறையற நிறைவேற்ற அன்னை பவானி அருள்பாலிக்க வணங்குவதோடு வேதசிலர் ஆரியமதக் காவலர் ஸ்ரீலஸ்ரீ காக பட்டாச்சாரியார் அவர்களை ஆசிர் வதிக்க வேண்டுகிறேன்.

[காகபட்டர் காலில் விழுகிறான் சிவாஜி. நீரைத் தெளித்து காக பட்டர் ஆசிர்வதிக்க எழுந்து நிற் கிறார்...]

அவையினர்: மாத்ருபூமி வாழ்க மராட்டிய குல மகிபன் வாழ்க! ஜே, பவானி

திரை விழுகிறது.

புகைப்படக் கலைப்பகுதி

★

அழகு தவழும் இயற்கைக் காட்சிகள், சிந்தனையைத் தூண்டி விடும் சிறந்த காட்சிகள், குழந்தைச் செல்வங்களின் விதவிதமான காட்சிகள், பண்டை வரலாற்றுக் காட்சிகள், காமிருக்காரர்களின் திறமையை உணர்த்தும் உன்னதக் காட்சிகள்—இவைகள் காமிரு வைத்திருக்கும் வாசகர்களின் காமிருவுக்குள் விழுந்திருந்தால் அந்தப் புகைப்படங்களை எங்களுக்கு அனுப்பலாம்.

முதல் தரமான புகைப் படத்திற்கு பரிசு ரூ. 10.

இரண்டாம் பரிசு ரூ. 5.

பரிசு பெறும் படங்களும், பிரசுரத் தகுதிபெறும் படங்களும் கலை மன்றம் அட்டையின் 2-வது 3-வது பக்கங்களில் பிரசுரிக்கப்படும்.

புகைப்படங்கள் அனுப்புவோர் கீழ்க் கண்ட நுழைவுச் சீட்டுடன் அனுப்புதல் வேண்டும். மூன்று படங்களுக்கு ஒரு நுழைவுச் சீட்டு வீதம் படங்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும். அனுப்பும் படம் ஒவ்வொன்றும் புல்சைஸ் (**Full Size**) அளவில் பிரிண்ட் போட்டு அனுப்புதல் வேண்டும்.

புகைப்படக் கலைப் பகுதி

கலைமன்றம் சென்னை—1.

புகைப்படக் கலைப்பகுதி
நுழைவுச் சீட்டு

பெயர் ....

வயது: ....

காமிராவின் பெயர்: ....

அனுபவம்: ....

இணைத்துள்ள படங்களின் எண்ணிக்கை } ....

....

நாள்: ....1955 கையெழுத்து

நாட்டிற்கு நலம் பயக்கும் நல்லதொரு வார இதழ்

'கலைமன்றம்'

இருண்ட வாழ்வு

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

புதுமை மணம் கமழும் கற்பனைக் களஞ்சியமாகிய இருண்ட வாழ்வு, செல்லாத நோட்டு, மதுரை மீனாட்சி, லைலா-மஜ்னு, நல்லதங்காள், சிற்பி ஆகிய கருத்து நிறைந்த கதைகள்.

விலை **12** அணா

13 அணா ஸ்டாம்புகள் அனுப்பிப் பெறுக.

கலைமன்றம், சென்னை-1



"ஐயோ! வாழையடி வாழையென நல்லதுகள் வேண்டுமானால் வந்து வளர்ந்து கொண்டிருக்கட்டும்; என்னைப் போன்ற கெட்டதுகள் வளர வேண்டாம்!"

18

நல்லமுத்து...

"இந்த நாடுசெய்த பாக்கியம் தான் அவர், அறிவுக் களஞ்சியம், அன்பின் உறைவிடம்" என்றெல்லாம் புகழப்பட்ட கலாநிதியைக் கெடுத்ததே நான்தான்.

ஒரு காலத்திலே!

அவர் காங்கிரஸ் பிரமுகராக இருந்தபோது அவரைத் தெரியாத காங்கிரஸ் தலைவர்களே கிடையாது அவரைப் புகழாத நல்லவர்களே கிடையாது. உப்புச் சத்யாக்கிரஹ நேரத்தில் இந்தக் கலாநிதி செய்திருக்கும் தியாகத்தைப்பற்றிப் பலர் இவரை பகவத் சிங்குடன் ஒப்பிட்டுப் பேசுவதை நானே கேட்டு ரசித்திருக்கிறேன்.

அத்தகைய ஒரு பாரதப் புத்திரனை, பண்பு மிகுந்தவனை பாழாக்கியவன் நான் ஒருவனேதான்.

"மதுபானம் அருந்தவே மாட்டேன்" என்றார், ஆரம்பத்தில்! "ஏன்" என்றேன். "காந்தி சொல்லியிருக்கிறார்" என்றார். "கலாநிதி! எங்கேயோயிருந்துகொண்டு சொல்லும் அந்தக் காந்தியை மதிக்கிறீர்கள்—இதோ எதிரே நின்று சொல்கிறேன்: என்னை மதிப்பதில்லை, நீங்கள்—"என்ற விதண்டாவாதத்திலிருந்து துவக்கி; ஆகா, ஆகா மதுவையும், மாதுக்களையும் பற்றி வாழ்த்துக் கவிதைகள்பாடித் தள்ளியிருக்கிறானே, அந்த உமர் கய்யாம் அவன் வாழ்க" என்று அந்தக் கலாநிதியே சொல்லும் அளவுக்கு வளர்த்துவிட்டேன்.

இளமையிலேயே சூழ்நிலையால் கெட்டவன் நான். அதனால் என் குடும்பக் கௌரவம், சொத்து எல்லாம் பாழாயின. கடைசியில் எனக்கு இன்றியமையாத மது வகைகளுக்கும் மாது வகைகளுக்குமே நான் திண்டாட வேண்டியது வந்தது. அப்போது தான் கலாநிதியை என்முன் கொண்டு நிறுத்த, அவரது நிழலில் நான் பதுங்கி வளரலானேன்.

இலக்கியப் பாராட்டுக்காக அவரை அழைக்கவிருந்த அமெரிக்காவுக்கு இன்று அவரே இழந்த

பாதிக்கைகளுடன் சிகிச்சைக்குப் போயிருக்கிறார். ஐயோ! நான் மகா பாவி, ஒரு மேதையின் வாழ்க்கைச் சரித்திரத்தையே நாசமாக்கிவிட்டேனே!

கடைசியில் ...?

நானும் என்ன வாழவா செய்கிறேன்?

எனக்குக் கொடிய குஷ்டம் ஆரம்பமாகிவிட்டது என்பதைத் தெரிந்ததும், எனக்குப் பழக்கமான எல்லாரும் என்னைவிட்டு விலகுகிறார்கள்.

இன்று நான் ஒரு அனாதை.

நல்லவேளையாக எனக்கு என்று ஒரு வீடு, எனக்கு என்று ஒரு பெண்டாட்டி பிள்ளைகள் இல்லாமலிருப்பதுபற்றி இப்போது சற்று நிம்மதியடைகிறேன்.

சரியாகக்கூட என்னால் நடக்க முடியவில்லை.

நான் செய்த அட்டூழியங்கள் எல்லாம் இந்த ஊரில் எல்லாருக்கும் தெரியும். ஆதலால் ஒருவரும் எனக்கு ஒருநேரச் சாப்பாடுகூடப் போடமாட்டேன் என்கிறார்கள்,

சிறுவர்கள் என்மீது கல்லை விட்டெறிகிறார்கள்—பெரியவர்கள கல்லை இவனுக்காக குனிந்து கஷ்டப்பட்டு எடுப்பதா என்ற எண்ணத்தில் நின்றவாரே என்மீது காறி உமிழ்கிறார்கள்.

எனக்கு இப்போதுதான் நான் முன்பு செய்த தப்புககள் எல்லாம் என் மனக்கண்முன் வந்து வந்து மறைந்துக்கொண்டே இருக்கின்றன.

ஒரு காலத்திலே ...

அந்த மோகன் இந்த ஊரிலே குஷ்டரோகியாகி ரோடு ரோடாகத் திரியும்போது, அவன்மீது காறித் துப்புவது, செத்த பாம்புகளை எடுத்து வீசுவது, இப்படிச் செய்பவர்களுக்கெல்லாம் நான் தலைமைவகித்திருக்கிறேன். இன்று அதே மோகன் நிலையில் நான். நான் வகித்த தலைமைப் பதவியில் இன்னொருவன.

"ஐயோ! வாழையடி வாழைஎன நல்லதுகள் வேண்டுமானால் வந்து வளர்ந்து கொண்டிருக்கட்டும்—என்னைப்போன்ற கெட்டதுகள் வளரவேண்டாம்"-என்ற தினுசில் ஏதேனும் புலம்புகிறேன். அப்பொழுது எனமீது கல்லை எடுத்து அடிக்கிறார்கள்.

அந்த மோகன் ...

குஷ்டரோகம் வந்த பிறகும் சதா சிந்தனை செய்து புரட்சிக் கருத்துக்களை பேசிக்கொண்டேயிருந்தான்—கடைசியில் ஒரு மாபெரும் புரட்சியான காரியமும் செய்து மறைந்து—இன்று சிலையாக நின்று திகழுகிறான்.

எனக்கோ ...?

இந்த நிலையிலும் எப்போதாவது ஒருமுறை அத்தி பூத்தது போலத்தான் . புத்திசாலித்தனமான யோசனைகள் வருகிறதேயன்றி, அடிக்கடி வருவதில்லை.

கடவுளே என் எதிரிலே வந்து ஒரு கையிலே மதுப் புட்டியையும், மற்றொரு கையிலே குஷ்டத்தை நன்றாக நீக்கிவிடக்கூடிய மருந்துப் புட்டியையும் வைத்துக்கொண்டு "நல்லமுத்து! உனககு இந்த இரண்டில் எது வேண்டும் சொல் மகனே" என்று கேட்டாலும், "இதென்ன என்னைப்பற்றி இவ்வளவு தெரிந்தும் இப்படிக் கேட்கறேள்...எனக்கு வேண்டியது மதுப்புட்டிதான்" என்று சொல்லிக்கொண்டே, அவர் கையிலி

ருந்து அதைப் பிடுங்கி ஒரேவாயில் ஊற்றி குடித்து மகிழ்வேன்.

இப்படிப்பட்ட கீழ்த்தரமான நான் எங்கே? மேதை மோகன் எங்கே?

இதைப்பற்றியெல்லாம் சிந்தனே செய்துகொணடே நடக்கும் போது, சிலையுருவில் கடவுளாக நிற்கும் அந்த மோகனேப்போய் வணங்கி, செத்தாலும் அவன் சிலை யடியிலேயே சாகவேண்டும் என்று திட்டமிட்டேன். ஆகவே என் கால்கள் ஊருக்கு வெளியில் நிறுத்தப் பட்டிருக்கும் மோகனே நோக்கியே விரைவாக நடந்து கொண்டிருந் தன!

நடைபாதையில்...?

ஒரு குஷ்டரோகி கீழே மயக்க மாக வீழ்ந்துகிடந்தான். அவன் மீது எனக்கு இரக்கம் வந்துவிட் டது. என் கையிலிருந்த கம்பை அப்படியே சுவரில் சாத்தி வைத்து விட்டு, கீழே கிடப்பவருககாக பம் பில் கொஞ்சம் தண்ணீர் அடித்து முகத்தில் கொண்டு மெள்ள மெள்ளத் தெளித்தேன்.

இலேசாக கண்களேத் திறந்தார். அவரது முகம் எனக்கு எங்கோ அறிமுகமானது போலிருந்தது

பேசத்தொடங்கினேம்.

உங்களே எங்கோ பார்த்தது போலிருக்கிறது என்றேன்.

உங்களேயும் எங்கோ பார்த்தது போலிருக்கிறதே என்று கேட்டுக் கொண்டே, நான்தான் சப்-இன்ஸ் பெக்டர் சந்தானம் ஐயர் என்று மிகுந்த வெட்கத்துடன் சொல்லி விட்டார்.

"ஐயோ! உங்களுக்குமா இந்தக் கதி வரவேணும்" என்று வியந்தேன்.

"ஐயோ! என் தாய் எனக்கு இளமையிலிருந்தே எவ்வளவோ ஒழுக்கத்தைக் கற்பித்துப் பார்த்தாள். என்ன செய்வது? அவளது அறிவுரைகளை என் விதி அழித்துவிட்டது! கண்டபடி திரிந்தேன். கள்ளத்தனமான வாழ்க்கை வாழ்ந்தேன். என் தாயை சுடுகாட்டுக்குத் தூக்கிக் கொண்டுபோன தினத்தில் கூட, நான் ஒருவருக்கும் தெரியாமல் மாடி சென்று ஒரு 'பெக்' பிராந்தியை உள்ளே ஊற்றிக் கொண்டேன்—அன்றிரவும் சோரம் புரிந்திருக்கிறேன்...ஊம் அதெல்லாம் ஏன்?...பழங்கதை... நடந்தது நடந்துதுவிட்டது என்று பெருமூச்சுவிட்டார்.

"ஆமாம், உங்களோட பெண்டாட்டி பிள்ளைகள், வேலை, பென்சன் எல்லாம் என்ன ஆச்சுது" என்று கேட்டேன்.

"என் மனைவி என் கார் டிரைவருடன் ஓடிவிட்டாள்! ஒரு பொய் வஞ்சகக் குற்றத்தில் வேலையிலிருந்து டிஸ்மிஸ்ஸும் செய்யப்பட்டேன். என் பயல் அதோ அங்க 'பாலமந்தி'ரில் வளருகிறான்" என்று கையைக் காட்டினார்.

எனக்கு அழுகையே வந்துவிட்டது!

"ஆமா சார் நீங்கள் அந்த கலாநிதிகூட, சதா காரிலேயே போய்க் கொண்டிருப்பீர்களே, சினிமா டைரக்டர், அவருதானே" என்று ஆச்சர்யத்துடன் கேட்டார்.

"ஆமாம்" என்று வெட்கத்துடன் பதில் சொன்னேன். எழுந்து சுவரில் சாத்திவைத்திருந்த கம்பை எடுத்தேன். மீண்டும் இவர் அருகில் வந்து, இவரையும் அந்தச் சிந்தனைச் சிற்பி மோகனை வணங்குவதற்காகக் கூப்பிட்டேன் சரி என்றார். ஆனால் பாவம் நடக்கமுடியாமல் தவித்தார்—காலைப் பார்த்தேன்—காலில் அதிகமான புண்!

என் கையிலிருந்த கம்பு தேவையைவிட சற்று நீளமாகவே இருந்தது. அதைப் பாதியாக நொடித்து அவரிடம் கொடுத்துக் கூட்டிக்கொண்டு போனேன்.

பசிவேறு அவஸ்தைப் படுத்தியது. நடந்து போகும்போதே பிச்

வட நாட்டவர் சுரண்டல்

கவர்னர் பிரகாசா தரும் சான்று!

"தென்னாட்டிலிருந்து அந்த நாட்களில், வடநாட்டுக்காரர்கள் ஏராளமான பணம் கொள்ளையிட்டுச் சென்றிருக்கிறார்களெனத் தெரிகிறது; எனவே, இன்று தென்னாட்டவர் வடநாட்டவர் மீது வெறுப்புணர்வு கொண்டிருக்கிறார்கள் என்பது காண எனக்குச் சற்றும் ஆச்சரியமேற்படவில்லை,"

—என்று, காசியைச் சேர்ந்த ஒரு 'சரித்திர பூர்வமான குடும்'பத்திலிருந்து வரும் சென்னை கவர்னர் பிரகாசா, கோட்டை பொருட் காட்சியில் தனது மூதாதையருள் ஒருவரான கோபால்தாஸ் என்பவருக்கு நினைவுச் சின்னம் ஒன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

சையும் கேட்டுக்கொண்டே சென்ருேம்.

ஏதோ கிடைத்தது—ஏதோ வாங்கித் தின்ருேம்.

எப்படியே தள்ளாடித் தள்ளடி மோகன் சிலேயின் பக்கமாகப் போய்விட்டேன்.

ஆனல்...?

மோகனின் பக்கத்தில் எங்களால் நெருங்க முடியவில்லே. அவனேச்சுற்றி ஒரு பெரிய "பூங்கா"வே தயாராகிக் கொண்டிருந்தது. அந்த வேலேகளே மேனட்டிலிருந்து கலாநிதி வீட்டிற்குப் பிறந்தநாள் விழாவிற்கு வந்திருந்தாரே, அந்த ஜேம்ஸ் என்பவர் மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தார்.

பூங்காவின் வாசலிலே மற்ருெரு சிலேயை சிற்பிகள் நட்டுக்கொண்டிருந்தனர். அது யார் சிலே என்று பார்த்தேன்! அதுதான் அந்தக் கிழட்டுப்பயல் ஆசீர்வாதத் தாத்தாவினுடையது!

எனக்கும், மாஜி சப்-இன்ஸ்பெக்டருக்கும் வயிற்றெரிச்சல் தாங்கமுடியவில்லே. ஏதோ அந்த மோகன்தான் எங்களுக்கு வேண்டியவனுகக் காணப்பட்டான்—ஆகவே 'பூங்கா'வுக்குள்ளே புக நினேத்து நடந்தோம்.

போலீஸ்காரர்கள் ஆளுக்கு ஒரு அடி கொடுத்து எங்களே அப்படியே தூரத் தள்ளிவிட்டார்கள்.

(அடுத்த இதழில் முடியும்.)

நமக்குமுன் உயர்ந்த தத்துவ ஞானிகளும், அரசியல் அறிஞர்களும் வாழ்ந்து போயிருக்கிருர்கள். அவர்கள் தனித் தனியாக எந்தெந்த நாடுகளிலோ பிறந்திருந்தாலும் அவர்கள் உலகப் பொதுச் சொத்து. அவர்கள் நமக்கு விட்டுச் சென்ற அரிய உரைகளேத் தமிழிலே தருகிருேம் தமிழ் மக்களின் பார்வைக்கு. கீழ்க் காணும் நாடுகளில் வாழ்ந்த அறிஞர்களின் பொன்மொழிகள் பல இதில் தொகுக்கப் பெற்றிருக்கின்றன. கைக்கு அடக்கமாகவும், கணிசமான விலேயிலும் கிடைக்கும்.

அமெரிக்கநாட்டுப் பொன்மொழிகள்

தமிழ் நாட்டுப் பொன்மொழிகள்

ஆங்கில நாட்டுப் பொன்மொழிகள்

பிரஞ்சு நாட்டுப் பொன்மொழிகள்

டால்ஸ்டாய் பொன் மொழிகள்

கார்க்கியின் கருத்துரைகள்

ஒவ்வொன்றும் விலே 8 அணு

அழகிய மூவர்ண அட்டைப் பைண்ட்

ஸ்ரீமகள் கம்பெனி

த. பெ. எண். 275

சென்னே-1

முத்துவும் ராமுவும்

டீ. ஏகநாதன்...

முத்துவின் தாய், முத்து ஆறு வயதுடையவனா யிருக்கும் பொழுதே காலராவினால் இறந்துவிட்டாள். அதற்குப்பிறகு, முத்துவின் தந்தையை மறுபடியும் கல்யாணம் செய்துகொள்ளும்படி பலர் வேண்டினர். ஆனால் முத்துவின் தந்தை தருமலிங்கம் மறுதாரம் செய்துகொள்ள இணங்கவில்லை தன் மகனின் நன்மையைக் கருதி.

மனைவி இறந்த இருவருடங்களுக்குள் தருமலிங்கத்திற்கு க்ஷய ரோகம் பீடித்தது. அவர் நோயினால் மிகவும் கஷ்டப்பட்டார். ஒன்றரை வருடம்வரை கஷ்டப்பட்டு பிறகு உயிர்நீத்தார்.

சாலைகுடியில் இருந்த முத்துவின் பெரியப்பாவான ராமலிங்கம் முத்துவின் தாயும், தந்தையும் இறந்துவிட்டனர் என்று எப்படியோ அறிந்து முத்து இருந்த ஊருக்குச்சென்று முத்துவைத் தன் ஊருக்கு அழைத்துவந்து தன் வீட்டிலேயே வைத்துக் கொண்டார். ராமலிங்கம் பெரிய பணக்காரர் எனினும் மேலும், மேலும் பணத்தைச் சேர்க்கக் கருதினார்.

முத்து சாலைக்குடியில் இருந்த பெரியப்பாவின் வீட்டிலேயே இருந்தான். பெரியப்பா ராமலிங்கம் ஐந்து மாதங்களுக்குப் பிறகு முத்துவிற்காக தந்தை வைத்துவிட்டுப்போன நிலபுலன்களும், ஒரு வீடும், அதில் இருந்த சில சாமான்களுடன் ரூ. 8000க்கு விற்றுவிட்டார். அந்தப் பணத்தை ராமலிங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணினார். அதன்படி இரண்டு மாதங்களுக்குப் பிறகு முத்துவை நன்றாக அடித்து, "டேய், இப்பொழுதே இந்த ஊரைவிட்டு ஓடிப்போய்விட வேண்டும். மேலும், நீ இந்த ஊர் வட்டாரங்களில் எங்குமே இருக்கக் கூடாது. வெகு தூரத்திற்கு அப்பால் சென்றுவிடவேண்டும். இந்தா இந்த 10 ரூபபயை வைத்துக் கொண்டு, இப்பொழுதே செல்ல வேண்டும்" என்று கூறிவிரட்டி விட்டார்.

பாவம், அனாதைச் சிறுவனான முத்துவிற்கு தன் பெரியப்பாவைப் நினைக்கவே பயமாயிருந்தது. மனதிற்குள் "சரி, எப்படியாகிலும் வேறு ஊருக்குச்சென்று பிழைத்துக்கொள்ளலாம்" என்று நினைத்து ரயில்வே ஸ்டேஷனை அடைந்தான் ரயில்வே டிக்கட் கொடுக்கும் இடத்திற்குச் சென்றான். அப்பொழுது ஒரு பெரியவர் "ரங்கனூருக்கு ஒரு

டிக்கட் கொடுங்க" என்றுகூறி பனிரண்டு ரூபாயைக் கொடுத்தார். ஒரு டிக்கட்டும் மீதி எட்டணவும் பெரியவரிடம் டிக்கட் கொடுப்பவர் கொடுத்தார். முத்து, ரங்கனூர் வெகுதூரததிற் கப்பால் இருக்க வேண்டுமென்று எண்ணித், தனக்கும் ரங்கனூருக்கு ஒரு அரை டிக்கட் கொடுக்குமாறு கேட்டு 6 ரூபாயைத் தந்தான். ஏனெனில் அவன் 10 வயதுடையவனக இருந்தான். பிறகு டிககட் வாங்கிக் மீதி 4 ரூபாயை வாங்கிக்கொண்டு முன்பு ரங்கனூருக்கு டிக்கட் வாங்கின பெரியவர் உட்கார்ந்திருந்தப் பெட்டியில் ஏறினன்.

அந்தப் பெரியவர் முத்துவைப் பார்த்து, "தம்பி நீ எங்கு போகின்ருய்" என்று கேட்டார். முத்து அதற்கு "நான் ரங்கனூருக்குச் செல்கிறேன். நான் தூங்கிவிட்டாலும் என்னை எழுப்பி விடுங்கள்" என்று கூறினன். சரி என்று பெரியவர் கூறினர். அதற்குப் பிறகு பேச்சுவார்த்தையே இல்லை.

புதன்கிழமை காலை 11 மணிக்கு வண்டி ஏறிய முத்து வியாழக்கிழமை மாலை 7 மணிக்கு ரங்கனூரை அடைந்தான். ரங்கனூரில் முத்து ஒருவாரம் வரை வேலை தேடினன். வேலை கிடைக்கவில்லை. இருந்த பணமும் செலவழிந்து விட்டது. பின்பு என்ன செய்வது என்று எண்ணி ஒரு சினிமா தியேட்டர் மானேஜரிடம் சென்று வேலை தருமாறு மிகவும் பணிவாகக் கேட்டான். அதற்கு மானேஜர் நோட்டீஸ்தரும் வேலை ஒன்று காலியாக இருப்பதாககூறி அந்த வேலைக்குச சம்மதமா என்று கேட்டார். சரி என்று ஒப்புக் கொண்டான் அனதை முத்து.

சிலநாட்கள் கழிந்தன. அந்த சினிமா தியேட்டரில் ஒரு புது சினிமா வெளிவந்தது. அதற்கு விளம்பரமாக ஒரு தள்ளு வண்டியை ஒரு பையனிடம் தந்து, "டேய் ராமா! நீ இந்த வண்டியைத் தள்ளிக்கொண்டுபோ, முத்து நோட்டீசை கொடுப்பான்" என்று கூறி முத்துவையும், ராமனையும் அனுப்பினர்; அந்த ஊரில் உள்ள மார்க்கெட்டின் அருகில் சென்றதும், ராமன் முத்துவை நோக்கி "முத்து நீ வண்டியுடன் இங்கேயே நில் மார்க்கெட்டில்சென்று நோட்டீசை எல்லாம் ஜனங்களுக்குக் கொடுத்துவிட்டு வருகிறேன்" என்று சென்ருன் ராமன். அந்த நோட்டீசைக் கொண்டு போய் கடையில் நாலணவிற்கு விற்று விட்டு வந்தான் ராமன். பிறகு தியேட்டருக்கு வந்து சேர்ந்தனர் இருவரும். ராமன் மானேஜரிடம் சென்று 'சார் நம்ப முத்து நீங்கள் கொடுத்த நோட்டீசைக் கொண்டுபோய் நாலணவுக்கு விற்றுவிட்டான் சார்" என்று கூறினன். அதுவும் தானே விற்று விட்டு! மானேஜர் "டேய் ராமா! முத்துவை அழைத்துவா" என்ருர் "சரிசார்" என்று கூறிச்சென்ருன் ராமன். முத்துவிடம், மானேஜர் "டேய் முத்து நீ நோட்டீசைக் கொண்டுபோய் நாலணவுக்கு விற்ருயா? என்ருர். "இல்லை சார் ராமன்தான் மார்க்கெட்டிற்கு அருகில் வண்டியுடன் என்னையும் நிறுத்திவிட்டுச் சென்ருன்" என்று முத்து கூறினன். "சரி முதலாளியிடம் பேசிக்கொள்ளுங்கள்" என்று கூறிச்சென்ருர் மானேஜர்.

அன்று மாலை 6 மணிக்கு முதலாளியிடம் இருவரையும் கூட்டி

விசாரிக்குமாறு கூறினர். முதலாளி இருவரையும் விசாரித்து விடடு, முததுவைநோக்கி, "டேய் முத்து நீ எந்த ஊர்? என்றார். சண்பகப்புதூர் சார்" என்றான். "அடே நம்ம ஊர்தானா நீ. உன் அப்பா பெயர் என்ன" என்றார். அதற்கு அவன் 'தருமலிங்கம் சார்" என்று கூறினன். உடனே முதலாளி "ஆ நீ என் அண்ணன் மகன் முத்தா!" என்றுகூறி, எதிர்பாராத ஆச்சரியத்தால் வியந்தார். அப்படியானல் "நீங்கள் எனக்கு சித்தப்பாவா?" என்றான் தயக்கத்துடன் முத்து. "ஆமாம் முத்து" என்றார். "நீ ஏன் இப்படி அனாதையானாய் விபரம் கூறு" என்று நச்சரித்தார். முத்து தன் தாய் இறந்ததுமுதல் சினிமா தியேட்டரில் வேலைக்குச் சேர்ந்தவரை விடாமல் கூறி முடித்தான். பிறகு முத்து, "அது சரி சித்தப்பா, நீங்கள் ஏன் பிரிந்துவிட்டீர்கள்?" என்று கேட்டான். அதற்கு சித்தப்பா "நிலத் தகராறு மூலமாக வந்ததுதான் பிரிந்துவாழும் படலம்" என்றார். மேலும் "சரி நான் இப்பொழுதே நீ அடையவேண்டிய ரூபாயை நீ அடைவதற்காகக் கேஸ்போடுவதற்கான ஏற்பாடுகள் செய்கிறேன். வீட்டிற்கு வாபோகலாம்" என்றார். இதையெல்லாம் கேட்ட ராமன், "சார்! சார்! என்னை மன்னித்து விடுங்கள்" என்று கெஞ்சினான். முதலாளி "டேய்! உன்னையா மன்னிப்பது, என் அண்ணன் மகனுக்குத் திருட்டுப் பட்டம் கட்டின உன்னை சும்மா விடக்கூடாது. மானேஜர் சார் இவனை இப்பொழுதே கணக்குத் தீர்த்து வெளியே அனுப்புங்கள்" என்றார். அவற்கு முத்து "சித்தப்பா இவன் இல்லாவிட்டால் நாம் எப்படி ஒன்று சேர்ந்திருக்க முடியும்? மேலும் இவன் தன் தவறை உணர்ந்துவிட்டான். ஆதலால் இவனை நாம் நம் வீட்டிலேயே வைத்துக்கொள்ளலாம்" என்றான். "சரி" என்றார். மானேஜர் முத்துவின் நிலையையும், பரோபகார சிந்தையும் கண்டு ஆச்சரியப்பட்டார். பிறகு கேஸ்போட்டு முத்துவின் பணம் முத்துவிற்கு கிடைத்தது. அந்தப் பணம் இப்பொழுது முத்துவின் பையரில் பாங்கில் இருக்கிறது. தற்போது முத்துவும், ராமுவும் சிநேகிதர்களாகிவிட்டனர்.

❀ ஒன்று ஆனந்த யாத்திரை - இன்றென்று அந்திம யாத்திரை

❀ இன்பத்தின் எல்லையும், துன்பத்தின் எல்லையும் கடகரேகை—மகரரேகையாகப் பிரிந்து கிடக்காமல் எதிரெதிரே மோதிவிட்டால்……

❀ முடிவு……? அந்த 'முடிவு' ஏற்படவே கூடாது என்று ஆசைப்படுகிருர் ஆசிரியர்.

❀ அப்படியானல் இரு கதாபாத்திரங்களின் பித்தமும் தெளிய மருந்து வேண்டும்.

❀ ஆதலின் வாசகர்களிடமே வேண்டுகிருர்……

CONNEMARA PUBLIC LIBRARY
7-AUG 1958

பித்தம் தெளிய மருந்து

விருதை.ந.இராமசாமி

கண்ணன்:

பூந்தோட்டம்—அதுவொரு பொதுவிடம்—நகராண்மைக் கழகத்தாருக்குப் பாத்தியப்பட்டது. அங்கு செல்கிறேன் நாள்தோறும். அரும்பும் மொட்டுகள், அழகு மலர்கள, இவற்றைக் காணுகிறேன். களிப்படைகிறேன். பணக்காரன்—ஏழை என்ற பேதம் பாராமல், நல்லவன்—கெட்டவன் எனும் நியாயத்தை நினைக்காமல், ஆண்—பெண் என்னும் பால் வேறுபாடு கருதாமல் எல்லாருடைய உடல்களுக்கும் உவப்பளிக்கும் தென்றல், மலர்க் காட்டின் மணமெல்லாம் அள்ளி வந்து என் மீது மோதச் செய்யும். மேனி சிலிர்க்கும்—உளம் களிக்கும்.

ஆம்! மலரைப் பார்த்தும் பரவசம் பெறலாம். தென்றலின் தொண்டினல் மெய்யால் உணர்ந்தும் மகிழலாம்.

அதற்காக மலரைக் கிள்ளி எடுத்து நுகர்ந்துதான் மகிழ வேண்டுமென்பதல்ல. நான் மல

ரின் மணத்திற்காக, அதைப் பறித்து நுகர்ந்து அனுபவிக்க ஆசைப்படவில்லே.

*   *   *

கடலலேயின் ஆடுப் லாவகத்திலே மிதந்து செல்லும் தோணியிலே ஏறி ஊஞ்சலாடினுல்தான் உள்ளத்திற்கும் உடலுக்கும் உல்லாசம் கிடைக்கும் என்று எண்ணுபவனல்ல. கடற்கரையிலே அமர்ந்தவாறு, ஊஞ்சலாடி வரும் தோணியின் தோற்றத்தைப் பார்த்துக் கொண்டே பூரிப்படையலாம் என்ற கருத்துடைவன் நான்.

*   *   *

வானத்தில் விண் மீன்கள் பளிச்சிடும் வனப்பை மாடி வராண்டாவில் நின்றபடியே கண்டு குதூகலமடையலாம். இதனை விடுத்து வான வீதிக்கே சென்று விண் மீன்களேக் கோர்த்து விளையாட விரும்புவது விவேகமல்ல, வினேதமான கற்பனே.................... இத்தகைய விசித்திரமான ஆசை தற்கால திரைப் படங்களில் தவருமல் வந்துவிடும் 'ட்ரீம்சீன்'தான்.

*   *   *

பூந்தோட்டத்துப் புது மலரைப் பறிக்காமல் மணம் பெறலாம் என்று எண்ணும் என்னே—கடலலேயில் ஊஞ்சலாடும் படகைக் கரையில் நின்றே கண்டு களிப்படையலாம் என்றும் கருதும் என்னே—பித்தன் என்றே பறை சாற்றுகிருர்கள் பலர்.

மலர் பறிக்க முடியும்—படகிலும் செல்ல முடியும்—மனிதனுல். ஆனுல் விண் மீன்கள் வாழும் வான வீதியிலே விளையாட முடியாது மனிதனுல்.

முடியும் என்ற வகைப்பட்ட அத்தனே காரியங்களிலும் மனிதனின் ஆசை தவருன பாதையாக இருப்பினும் தலேயிட்டே தீருகிறது. முடியாத வகையைச சாரந்த அத்தனே காரியங்களேயும் கற்பனேயாக்கி விடுகிருன்—காவியம் என்கிருன்—அவற்றையெல்லாம் கவிஞர்களே கதறிக் கதறி மாயட்டும், எழுதி எழுதிச் சாயட்டும் என்று ஒதுக்கி வைத்திருக்கிருன்—மனிதன்!

ஆனுல் நானே முடியும் என்பதற்காக ஆசை வயப்பட்டு எதையும் ஏற்று அனுபவித்தே தீர வேண்டுமென்பதை ஒப்புக் கொள்ள மறுக்கின்றேன். இது உதவாக்கரைத் தத்துவமாம். இப்போதுதான் உருப்படாத 'உதறல்கள்' எல்லாம் 'பொன்மொழிகளா'கும் போது, எப்படி என் கருத்து எடுபடும்?

"அட பைத்தியக்காரா! காதல் கூடாது என்கிருயே" என்று கேட்கிருர்கள் எனது நண்பர்கள்.

பங்கஜம் என் வாழ்விலொரு விண் மீன்—படகுமல்ல, மலருமல்ல.

பிறர்தான் பேசுகிருர்கள் எங்கள் பழக்கம் புரியாமல். சரி, போகட்டும். ஆனுல் பங்கஜமும் 'காதல்' என்று கூறவேண்டும், நிகழ்கால மதி கெட்ட மாந்தரைப் போல்? எல்லாருமே ஏக மனதாக எங்கள் பிணேப்பைக் காதல் என்றே சாதிப்பதாயின் வான வீதியிலே விண்மீன்களோடு விளேயாடும் கற்பனேயாக அந்தக் காதலே மாற்றி நான் கவிஞனுகி விடுகிறேன். அவ்வளவுதான் என்னுல் முடியும். வேறு வழி? நேரடியாக விண்ணுலகில் போய்த் தங்கி நட்சத்திரங்களோடு 'சதிர்' ஆட சாத்தியப்படுமா?

இவ்வாறு பதிலிறுத்தால், பித்தனும் நான்?

யார் மீதும் எனக்கு எரிச்சல் இல்லை. இத்தனை நாட்களாக என்னுடன் உறவாடிய பங்கஜங்கூட..... ....?

பங்கஜம்:

நானுங்கூட எதிர்பார்க்கவில்லை, ஏமாற்றம் இப்படி இடி மாதிரி விழும் என்று. இதய பூர்வமாக நேசித்தேன் கண்ணனை. இப்போது 'இயலாது' என்று எளிதாகச் சொல்லி விட்டார், எழுத்தாளனாக ஏங்கிக் கிடப்பனுக்குப் பிரசுரிக்க 'இயலாது' என்று எளிதாகப் பதில் தரும் பத்திரிகாசிரியரைப்போல்.

"ஆர அமரப்படித்து, உணர்ந்து எழுதுகிறேன் பிரசுரிக்க இயலாது" என்று உள்ளத்தில் ஓங்கி அடித்து விட்டு உற்றார் உறவினரின் உருப்படாத 'காவியங்களை' உடனே பிரசுரிக்கும் ஆசிரியர் அல்லவே, கண்ணன். கற்றுணர்ந்தவர், கண்யமிக்கவர், கடமையுணர்ச்சி கொண்டவர்—அவர். இத்தகையவர்தான் சுலபமாகச் சொல்லுகிறார் 'இயலாது' என்று. என் இதயம் ஏற்கவில்லை. என் செய்வேன்? ஏதும் புரியாத நிலையிலே, ஏக்கம் விரித்த வலையிலே, சிக்கித் தவிக்கிறேன்.

எவ்வளவு நெருங்கிப் பழகினோம்-என்னென்ன பேசினோம்—எங்கெங்கு போனோம்—என்னால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை இப்போது! ஐயோ! கண்ணீர்த்துளிகளைத் துடைகக்கூடத் திறன் இல்லையே என் விரலுக்கு.........

அந்த ஆட்காட்டி விரலுக்கு அடுத்த அந்த நடு விரலில் கண்ணனின் புஜம் உராயும்போது......? அந்த விரலுக்கு எத்துணை திறன்! எவ்வளவு இன்பம்!! எத்தகைய சுறு சுறுப்பு. ஆகா! அதை நினைக்குந்தோறும் நெஞ்செல்லாம் நனைந்து, நிறைந்து. வழிந்து எங்கெங்கோ பாய்ந்து குறு குறுக்கிறது.

அன்று...ரத்தினபுரத்திற்குப் போவதற்காகக் காத்திருந்தேன். டவுனிலிருந்து ரத்தினபுரம் போக பஸ்கள் கால்மணி நேரத்திற்கொரு முறை போகத்தான் செய்கின்றன. ஆனால் நான் தினசரியும் போகும் நேரம் அலுவலக நேரம் ஆகவே அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் 'தவம்' கிடக்கும் நூற்றுக் கணக்கானவர்களுள் நானும் ஒருத்தியாக நின்றேன்.

முட்டி மோதி—இடித்துத் தள்ளி பஸ் ஏறிப் போவதில் கைதேர்ந்த புள்ளிகளுக்குக் காத்துக் கிடக்க வேண்டியதில்லைதான் என்றாலும், அப்படிப்பட்ட 'நிபுணர்கள்' கூட சில சமயங்களில் கண்டக்டரால் வெளியே இடித்துத் தள்ளப்பட்டு, ரோட்டில் பல்டி அடிப்பதையும் பார்த்திருக்கிறேன். அப்படியிருக்க நான் எம்மாத்திரம்

அதுவும் நானோ பெண். கூட்டத்தோடு கூட்டமாகப் பஸ்ஸில் ஒரு இளம் பெண் ஏறுவதற்கு முயல்வதை இக்கால 'மன்மதக் குஞ்சுகள்' பார்த்து விட்டால்போதும்—வேறு ரூட்டில் போக வேண்டியவர்கள்கூட இளம் பெண் ஏறிச் செல்ல முயலும் இந்தப் பஸ்ஸிற்கு ஓடி வந்து 'ஒரு சான்ஸ்' பார்த்து விடுவார்களே.

ஆதலால்தான் நான் கூட்டம் அதிகமாகி இடித்து முன்னேற வேண்டியதேற்பட்டால் 'பஸ்' அருகில்கூடப் போக மாட்டேன். மேலும் நான் அப்படியொரு சந்தர்ப்பத்தில் சிக்க வேண்டுமென்றும், பழம் கொத்தும் புத்தியைக் காட்ட வேண்டுமென்றும் கருதிக் கொட்டாவி விட்டுக் காத்திருக்கும் கூட்டம் அந்தப் பஸ் ஸ்டாண்டில் தயாராக உண்டு. அவர்கள் வேறு யாருமல்ல. நான் 'டைப்பிஸ்டு' வேலை பார்க்கும் விவசாய இலாகாவிலுள்ள கிளார்க்குகள் தான். இதனால்தான் அந்த 'வௌவால்கள்' போய்த் தொலையும்வரை நான் பழமாகாமல் மறு பஸ்ஸுக்காகக் காத்திருப்பேன்.

அன்று... முதலில் குறிப்பிட்டேனே அதே நாளன்று... நின்று நின்று கால் கடுத்ததைப் பற்றிக் கூடக் கவலைப்படவில்லை, நேரமாகிறதே என்ற கலககம்தான் அதிகம்.

அந்த மனப் பதட்டத்திலே எப்படியாவது இனி வரும் பஸ்ஸில் ஏறி விடுவதென்று தீர்மானித்து விட்டேன். பஸ்ஸும் வந்தது. இதிலும் போகத் தவறினால்......அந்தச்சிடுமூஞ்சி மானேஜரின் சுடு சொல்லுக்கோ சஸ்பெண்டுக்கோ ஆளாக வேண்டுமே. முன் காலை எடுத்து வைத்தேன்—ஒரு கரத்தால் கைப் பிடியைப் பற்றினேன். இன்னும் கூடுதலான வலுவிருந்தாலதான் நுழைய முடியும் போலிருந்தது. அந்த க்ஷண நேரம்... யாரோ என இடுப்பின் இரு பக்கங்களிலும் கரங்களை நீட்டி ஏறினான். அவ்வளவுதான் நான் எவ்வித சிரமமுமில்லாமல் பஸ்ஸுக்குள் வந்து விட்டேன். ஆனால் அந்தக் குறும்புக் கரங்கள்......பட்ட இடமோ......?

அவர்... எனக்கு இரண்டு பேர்களுக்கு அடுத்துப் போய் உட்கார்ந்தார். நான் எனது கரத்தைப் பெஞ்சின் மேல் விளிம்பில் நீட்டிப் போட்டிருந்தேன். அப்போது எனது ஆள் காட்டி விரலுக்கு அடுத்த நடு விரல் அவருடைய புஜத்தில் உராய்ந்தது. எந்தப் புஜமும் என் விரலில் படவேண்டுமென்பதற்காகச் சலனம் செய்வது போல......? என் விரலை அங்கே படாமல் மீட்குமாறு என் பெண்மை எச்சரித்தது. ஆசையோ என் கரத்தைத் தடுத்தது. கரம் சக்தி தர மறுக்கவே என் விரல் அங்கேயே நிதானித்தது.

அன்று முதல் அவர் பஸ் ஏறும் போதுதான் நானும் ஏறிச் செல்வேன். இந்தச் சம்பவம் நடப்பதற்கு முன்பே அவரிடம் பல முறை பேசியிருக்கிறேன். ஆனால் இது நடந்ததற்குப் பின்பு அவருடன் பேசுவது எனக்குப் புது அனுபவமாக—புல்லரிக்கும் செயலாகத் தோன்றிற்று. அப்புறம் பேச்சு முற்றியது. மற்ற இடங்களிலும் சந்திக்க ஆரம்பித்தோம். சினிமா—நாடகம் என்று செல்லத் துவங்கினோம். அவர் யார்? கண்ணன்தான். நான் பணி புரியும்

விவசாய இலாகாவிலேயே அவருக்கும் வேலை. ஸ்டோர்ஸ் கிளார்க். கார்பன் ஷீட்வேணுமா, பேப்பர் வேணுமா, பென்சில் வேணுமா, அது வேணுமா, இது வேணுமா என்று சரமாரியாகக் கேட்டுத் திணற அடித்து விடுவார் என்னை.

இவ்வாருகச் சூழ்நிலை—கவ்வும் ஸ்பரிசத்தாலான முதற் சந்திப்பு—அடிக்கடி உறவாடுவதற்காக நாங்களே உண்டாக்கிக் கொண்ட வாய்ப்பு—நான் அவருக்கே உரிமைப் பொருளாகி விட்டேன்.

காதுகளில் வெறும் சாதாக் கற்கள் பதித்த கம்மல்களோடு முதற் சந்திப்புக்கு முன்பிருந்த நான் இன்று டால் வீசும் கம்மல்கள்—கண்ணைப் பறிக்கும் நெக்லெஸ்—வளையல்கள்—என் தோழிகளின் மனதை உறுத்தும் நகைகள்—அணிந்திருக்கிறேன்—விதவிதமான ஆடைகள் உடுத்துகிறேன். இவையெல்லாம் யார் தந்தவை! தள்ளாத வயதில் இருபது ரூபாய் பென்ஷன் சம்பளம் வாங்கும் அப்பாவா? இல்லை. அம்மாவா? அல்ல. அவர்தான் கண்ணன்.

எங்கள் உறவு உற்ருர், உறவினர், அப்பா, அம்மா அனைவருக்கும் தெரியும். அதைப் போல அவருடைய அப்பா, அம்மா; நண்பர்கள் யாவருக்கும் தெரியும். சுருங்கச் சொன்னுல் நாங்கள் இருவரும் எல்லாராலும் அனுமதிக்கப்பட்ட காதலர்கள். வியாபார முறைப்படி சொல்வதென்ருல் கஷ்டம்ஸ் ஆபீஸில் 'லஞ்சம்' கொடுக்காமலேயே லைசென்ஸ் பெற்று விட்டோம்.

ஆனல்......இன்று அவர் உன்னைக் காதலித்ததே கிடையாதென்கிருர். அந்தக் 'கெட்ட' எண்ணத்தோடு கலந்துறவாடவில்லையாம். மற்ருெரு நாள் நானும் அவரும் 'பார்க்'கில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அப்போது ஒரு பட்டுப்பூச்சி என் தோளில் உட்கார்ந்தது. அதைக் கையால் விரட்டினுர் அவர். அதே சமயம் விரட்டிய அந்தக் கரம் நெஞ்சில் பட்டுவிட்டது. நான் சிரித்து விட்டேன். மறுகணம் அந்தச் சிரிப்பு என்னை எங்கோவொரு புரியாத புதுமை உலகுக்கு இட்டுச் சென்றது. அவரும் சிரித்தார்—அந்தச் சிரிப்பிலே எவ்வளவு விஷமம். இப்போது காதலிக்கவில்லை என்கிருரே, அப்போது விஷமமாகச்

டென்சிங் நோர்கேயுக்கு தங்கப் பதக்கம்

எவரெஸ்ட் சிகரமேறிய பெரிய சாதனைக்காக எவரெஸ்ட் வீரர் திரு டென்சிங் நோர்கேயுக்கு பிரெஞ்சு பூகோளச் சங்கம் ஒரு தங்கப் பதக்கம் வழங்கியது. இப் பதக்கத்தைப் பெற்றுக்கொள்ள பிரான்சுக்கு வரும்படி சங்கம் அவரை அழைத்தது. அவர் வர இயலாதெனத் தெரிவித்ததால் சங்கம் பதக்கத்தை டில்லியிலுள்ள பிரெஞ்சு தூதருக்கனுப்பியது. அவர் அதனை டென்சிங்கிற்கு வழங்குமாறு டார்ஜிலிங் டிப்டி கமிஷனருக்கு அனுப்பியுள்ளார்.

சிரிக்காமல் 'தவறுக்காக மன்னிக்க மாட்டாயா' என்றல்லவா கேட்டிருக்க வேண்டும். அப்படி விஷமமாக விளையாடிக் கொண்டிருக்க நான் என்ன ஆணு? விசித்திரமாகக் கூறுகிறுர், நான் நண்பனைப் போலவாம்.

'ஆடைகள் வாங்கித் தருவானேன்? எனக்கு நகைகள் பூட்டி மகிழ்வானேன்?' என்று கேட்டால் என் ஏழ்மை நிலைக்காக இரக்கப்பட்டு அப்படிச் செய்தாராம். ஏன் பழகினீர்கள், என்று வினவினுல் பலருக்குப் பிடிக்காத எனது தோற்றம் அவருக்குப் பிடித்திருந்ததாம். அப்படிப் பழகுவதால்—உதவி புரிவதால் எனக்கு ஆனந்தம் ஆத்ம திருப்தி ஏற்படும் என்று எண்ணினுராம். உண்மைதான் அப்படிப் பலரும் வெறுத்தொதுக்கும்படியான தோற்றம் தான். அதற்காகக் கருணை காட்ட வந்த கடவுள் என்று நான் கருதவில்லையே. காதலராகவல்லவா கருதி விட்டேன்.

ஆனுல் அவரோ, அத்தகைய தோற்றத்திற்காக......? எத்தகைய தோற்றம்? ஆம்! எனக்கு ஒரு கண் ஊனமடைந்தது. சிறு குழந்தையில் பீடித்த வைசூரி நோயினுல் ஒரு கண் அவிந்து, பூ படர்ந்து குருடியானேன்.

கண்ணன்:

கண்வேறு குருடு, எளிய குடும்பப் பெண் என்ற இரக்கம் தூண்டியது என்னை. அவள் மேலும் மேலும் நெருங்கி வரவே வளர்ந்தது. என்னுடைய தொடர்பைத் தவருகப் புரிந்து கொண்டால் அதற்கு நானு பொறுப்பு?

அவள் என் உயிருக்குயிரான தோழி. அவளுக்காக எவ்வித தியாகத்தையும் ஏற்பேன். ஆனுல் அவளை மணக்க முடியுமா?

அடுத்த வாரம் எனக்கும் நளினிக்கும் திருமணம். பங்கஜம் இல்லாமலா மணவிழா நடத்துவது? நியாயத்தை நயமாக எடுத்துக் கூறி என் பங்கஜத்தைத் திருமணத்திற்கு அழைத்து வருவது உங்கள் பொறுப்புத்தான்.

காலம் அழிக்க முடியாத கதைப் பெட்டகங்கள்

		ரூ.	அ.
கசந்த கரும்பு	...	1	8
வாழ்க்கை வாழ்வதற்கே	...	0	12
இருண்ட வாழ்வு	...	0	12
கொலைகாரி	...	0	12
அவள் வாழ்வு	...	0	8
மனைவி	...	0	12
முள்	...	1	0
வழுக்கி விழுந்தவள்	...	1	0
தளபதி	...	1	0
இலட்சியப் பெண்	...	1	0
அரண்மனை அழகிகள்	...	1	8
நல்ல பெண்மணி	...	2	4
ஒருதுளி இரத்தம்	...	2	0
காயகல்பம்	...	2	0
சண்முகவடிவு	...	0	12
கோகிலசுந்தரி	...	0	12
மின்னல்	...	1	0
வானம்பாடி	...	1	8
எகிப்துநாட்டு எழிலரசி	...	1	0
காதல் சிரித்தது	...	0	8
சிலம்பு	...	0	12
அந்தப்புரம்	...	0	12
திருடர்கள் ராஜ்யம்	...	0	6
வாழமுடியாதவர்கள்	...	0	12
பெரியஇடத்துப் பெண்	...	0	8
தப்பிவிட்டார்கள்	...	0	6
வாழ்க்கைப் போர்	...	1	0

ஸ்ரீமகள் கம்பெனி,
சென்னை-1.

பங்கஜம்:

முடியாது! மாற்றானுக்கு மாலையிடும் அந்த மகாக் கொடுமையான காட்சியைக் காண வரமுடியாது. மரணமே; இனி என் காதலன்! அவன் கொஞ்சவும் மாட்டான். வஞ்சம் செய்யவும் மாட்டான். அஞ்சாமல் ஏற்பான் என்னை.

கண்ணன்—நளினி மண ஊர்வலம் போகும் அதே நாளிலே—என் பிணமும் போகும் ஊர்வலமாக. ஊராரும் பார்ப்பர். அவர் ஊர்வலம் செல்லும் பீட்டனிலுள்ள மலர் மணத்தை விட என் அந்திம யாத்திரையை ஏந்திச் செல்லும் சப்பரத்தின் வெட்டிவேர் மணம் மிகச் சுவையான சுகந்தம் வீசும்.

ஒன்று ஆனந்த யாத்திரை—இன்னொன்று அந்திம யாத்திரை—இவ் இரு வேறுபட்ட யாத்திரைகளின் மனோ தத்துவ தாரதம்மியத்தை உங்கள் நெஞ்சிலே எழுப்பிச் சரியானதொரு விளக்கத்தைத் தரவேண்டியது உங்கள் பொறுப்புத்தான்.

நான்:

பொறுப்பு! பங்கஜமும் கண்ணனும் எனக்குக் கொடுத்திருக்கும் பொறுப்பு! விசித்திரமாக இல்லையா? நீண்ட நாட்களாக நெருங்கிப் பழகிய இவ் இருவர்களுக்கிடையேயும் அவிழ்க்க முடியாத மனச் சிக்கல் ஏற்பட்டு அதனால் எந்த மருந்தாலும் தீர்க்கப்பட முடியாத பித்தத்தால் பொறுமிப் பொங்கித் தத்தளிக்கிறார்களே—ஒருவர் பொறுப்பை ஒருவர் உணர முடியாமல் பேதலிக்கிறார்களே—அவ் இருவருடைய வாக்குமூலத்தை மட்டும் கேட்டுள்ள நான் இவ் விடுபடாத புதிரை எப்படி விடுவிக்க முடியும்? என் பொறுப்பை எவ்வாறு செய்ய முடியும்?

இப் பொறுப்பைத் தமிழ் நாட்டின் கையில் ஒப்படைக்கிறேன்.

மண விழாவால் மரணமோ, மரணத்தால் மாருத மனத்துயரோ ஏற்பட்டுவிடக் கூடாது என்பதுதான் என் மனப்பூர்வமான ஆசை. இது நிறைவேற இருவரின் பித்தமும் தெளிந்தால்தானே முடியும்.

* * *

குறிப்பு: 'பித்தம் தெளிய மருந்து' உங்களில் எவரிடமாவது இருக்குமானல் எமக்குக் கதை உருவத்திலேயே அனுப்பி வைக்கவும். **'மருந்து'** ஏற்றதாகயிருந்தால் பரிசும் பிரசுரமும் பெறும். **'மருந்தை'** அனுப்பும்போது இவ்வாரக் கலைமன்ற இதழிலுள்ள **'பித்தம் தெளிய மருந்து'** சீட்டோடு அனுப்புதல் வேண்டும். **முடிவு தேதி: 4—6—55.**

மாணவர்களுக்கான நூல்கள்

ஸ்ரீமகள் இங்கிலீஷ்-தமிழ் கையகராதி	2 8 0
ஸ்ரீமகள் தமிழ்க் கையகராதி	1 8 0
நீதிநூல் தொகை I	1 8 0
,, ,, II	3 8 0
திருக்குறள் சிறப்புரை	1 4 0
திருக்குறள் (தீப்பெட்டி அளவு)	0 8 0
ராமுலு ஆங்கில ஆசான்	1 8 0
நேரு இந்தி ஆசான்	1 8 0
வீர பாண்டியன் ‹ட்ட பொம்மன்	1 0 0

ஸ்ரீமகள் கம்பெனி, சென்னை-1

புத்துலகத்தின் பொன்னேடாக.........
புரட்டும் பக்கங்கள் தோறும் புது மணம் தரும் பத்திரிகையாக...
அறிவுப்பசிக் கேற்ற சுவையான உணவாக......

இனிய இலக்கியக் கட்டுரைகள்—கருத்தைக் கிளறும் கவிதைகள்—சிறந்த சிறு கதைகள்—அத்தனையும் ஒருங்கே அமையப்பெற்ற புதிய உருலாக......

மே 21-ம் தேதி முதல்

கலை மன்றம்

வெளிவருகிறது.

மற்றும் கேள்வி கேட்டு, ஏற்ற விடை தரும் வாசகருக்கு ரூ, 10 பரிசளிக்கும் 'ஏன்' என்ற பகுதியும்—கண்கவரும் புகைப்படக் கலைப் பகுதியும் இடம் பெறுகின்றன.

மறவாதீர்கள்
மே 21-ம் தேதி ஏ. வி. பி. ஆசைத்தம்பியின்

காதலும் கண்ணீரும்

என்னும் தொடர் கதையும் ஆரம்பமாகிறது.

பித்தம் தெளிய மருந்து

நுழைவுச் சீட்டு

பெயர்..

முகவரி ....

....

....

நாள்...............1955 கையெழுத்து

காட்சி—8

கத்தேரினா-ஆன்ழெல்லோ-தீஸ்ப்

கத்தேரினா: (தனியாக) யார் இந்தப் பெண்—அன்று இரவு வந்தவளா?

ஆன்: ராணி! என்ன—முடிவுக்கு வந்துவிட்டாயா?

கத்: ஆம்! அரசே!

ஆன்: சாவு! அல்லது அந்தக் கடிதம் எழுதினவனைக் காட்டிக்கொடு. அவன் யார் என்று சொல்லுகிறாய் அல்லவா?

கத்: அந்த முடிவுக்கு வரவில்லை அரசே!

தீஸ்ப்: (தனியாக) கத்தேரினா! நீயல்லவா உண்மையில் தைரியசாலி—சிறந்தவள்.

ஆன்: (தீஸ்ப்புக்குச் சாடை காட்டுகிறான்—தீஸ்ப் ஆன்ழெல்லோவிடம் ஒரு சிறு சீசாவைக் கொடுக்கிறாள்—அதை மேஜை மீது வாங்கிவைக்கிறான் அவன்.)

ஆன்: அப்படியானால் நீ இதைக் குடிக்க உடன் படுகிறாய் அல்லவா?

கத்: நஞ்சா?

ஆன்: ஆம் ராணி! ஆம்...

கத்: நஞ்சுண்டால் அந்த மனிதனைச் சிறை செய்யமாட்டீர்களே?

ஆன்: உன் முன்னோர்களில் ஒருவர் அவர் மனைவியை இதே தவறுக்காக—இப்படித்தான் செய்திருக்கிறார்.

கத்: அவர்களைப்பற்றி யெல்லாம் பேசவேண்டாம். இறந்தவர்களைப்பற்றிப் பேசுவது ஈனத்தொழில். நஞ்சை எடுத்து வந்துவிட்டீர்—நான் குற்றவாளியா? இல்லை. ஒருநாளும் இல்லை—நான் அதை இப்போது உம்மிடம் எண்பிக்கவரவில்லை. உமக்கு என்னிடம் நம்பிக்கையில்லை—உம்மைப் போல் நான் பொய் பேசுபவளல்ல—இதுவரையில் உம்மைக் கணவன்என்று மதித்துத்தான் ஒழுங்கு மீருது நடந்து வந்தேன்—நீர் கணவனுக இருப்பதற்கேற்றவரல்ல என்பது உம் செய்கையில் நன்ருக விளங்கிவிட்டது. நீர் எதற்காக என்னைத் திருமணம் செய்துகொண்டீர்--என் பணத்திற்காக, என் முன்னேர்களுக்கு வேனீஸ் அரசியலில் உரிமையுண்டு என்பதற்காக மணந்து கொண்டீர்—நல்ல பணம்—பதவி—புகழ்வரும் என்பதற்காக மணந்துகொண்டீர். ஆண்டுதோறும் நூறு ஆயிரம் (துய்க்கா) பொன் நாணயம் வருமானம் வரும் என்பதற்காக மணந்துகொண்டீர்--இல்லையென்று மறுக்க உமக்குத் தைரியமுண்டா? இந்த ஐந்து ஆண்டுகளாக தாம்பத்திய வாழ்க்கையில் நான் அடைந்த நன்மை என்ன? சொல்லுங்களேன். எப்பொழுதும் பொருமைப்படுவதும்—ஐயக்கண்கொண்டு நோக்குவதும் அன்றி அன்பாக ஒருநாளாவது பேசியதுண்டா? என் உடைந்த இதயத்திற்கு அன்புப் பசை பூசியதுண்டா? ஆறுதல் மொழி கூறியதுண்டா? மனைவி என்று நினைத்தாவது—ஏதாவது அன்பின் அறிகுறியை என்ருவது—எப்பொழுதாவது காட்டியதுண்டா? கூறுங்களேன். நீங்கள் என்ன வேறு பெண் முகத்தில் விழிக்காமல் விரதமா இருக்கிறீர்கள்? அடடா! எத்தனை வெள்ளாட்டிகள், இச்சைபோல் அவளோடு, இவளோடெல்லாம் திரிவது—கண்டவளோடெல்லாம் கனிமொழி பேசுவது—கள்ஆட்டம் ஆடுவது—நீங்கள் செய்வதில் தவறுகிடையாது—ஆண் இனமே எது வேண்டுமானுலும் செய்யலாம் என்பதுதானே சமுதாயச் சட்டம். சிடுசிடு என்று இருப்பது—எதைக் கேட்டாலும் பதில் சொல்வதில்லை நானும் எங்கும் போகக்கூடாது. கட்டுக் காவலெல்லாம் எனக்கு. கட்டு இல்லாமல் திரிவது உமக்கு. இதுதான் மனைவியைக் கணவன் நடத்துகின்ற முறையோ? வாழ்க்கை மனைவிக்கு அளிக்கும் இன்பங்கள் இவைதாமோ? உம் தந்தையைப்பற்றி, பாட்டனைப்பற்றி முன்னேரைப்பற்றி, அவர்கள் வீரப்பிரதாபங்களையெல்லாம் பேசுவது. எம்மவரை இடித்துக் கூறுவது. ஒரு நல்ல வார்த்தைகள் என்ருவது என் செவிகள் கேட்டிருக்குமா? இப்படி நடப்பதுதான் மனைவியை இன்பமாக நடத்துவது என்பது உம் சித்தாந்தமோ! பெண் பிறப்பென்பது எவ்வளவு இழிவானது என்பதை உணரவேண்டுமானுல்என்னைப்போலதுன்பப்பட்டாலல்லவா தெரியும். மகாராஜாவே! ஆம்! உம்மைத் திருமணம் செய்துகொள்வதற்குமுன் நான் ஒருவரைக் காதலித்தேன். இன்னும் காதலிக்கிறேன். அதற்காகத்தானே என்னைக் கொல்லப்போகிறீர்கள். எது உண்மை. நடந்ததென்ன? அது தேவையில்லை உங்களுக்கு—ஏதோ கடிதம் இருக்கிறது அதுவேபோதும். மறைவாக நஞ்

சூட்டிக் கொன்றுவிடலாம் என்ற தைரியம். ஏன் அதுதானே உங்கள் எண்ணம்—இது ஆண்மையல்ல. கயவாளித்தனம்! (தீஸ்ப் இருக்கும் பக்கம் திரும்பி) இவரைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள். நீங்கள் ஒரு பெண்ணாயிற்றே நேர்மையாக சொல்லுங்கள்...

ஆன்: நாவை அடக்கிப்பேசு.

கத்: (தீஸ்ப்பைப் பார்த்து) நீங்கள்—யார் நீங்கள்—நீங்கள் நடப்பதும், உங்கள் செய்கையும் அழகாக இருக்கிறது. என் கணவரின் வெள்ளாட்டி நீங்கள். வைப்பாட்டியாகிய உங்களுக்கு என்னைத் தீர்த்துக் கட்டவேண்டிய பொறுப்பு இருக்கத்தான் செய்யும். வைப்பாட்டிகளின் தொழிலே அதுதானே. தனக்கு அடிமையாக இருக்கின்ற ஆணை மீண்டும் அடிமையாக ஆக்கிக்கொள்ள—அவன் கட்டிய மனைவியை எட்டியிருந்து கண்காணித்து இல்லாததையும், பொல்லாததையும் கூறிக் கோள் மூட்டுவதும், கொலை செய்யத் தூண்டுவதும்தானே அவர்கள் தொழில். இந்த நஞ்சுகூட ஒருக்கால்நீங்களே கொடுத்திருக்கலாம்; ஏன் அப்படித்தானே! (ஆன்ழெல்லோவைப் பார்த்து) இந்தப் பெண்ணைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்—இவள் வாயினின்றும் வருவதெல்லாம் வேதம், இவள் வாக்குதெய்வவாக்கு இவளைவிடப் பதிவிரதையை வேறெங்கும் பார்க்க முடியாது. ஆகையால் இவள் சொல்வதையெல்லாம் செயயவேண்டும் என்பதுதானே உங்கள் நோக்கம்.

ஆன்: வீண் பேச்சு!...

கத்: உண்மைதான். நாம் மூவரும் எங்கே யிருக்கிறோம். இந்தக் கொடுமையான நாட்டில் தான் இருக்கிறோம். இந்த உதவாக்கரைக் குடியரசில்தான் இருக்கிறோம். குடியரசென்ற பெயரை வைத்துக கொண்டு, வெட்கமும், மானமுமின்றி நடக்கிற விலங்குகளை விடக் கீழாய் நடக்கிற வேனீஸ் குடியரசில் இருக்கிறோம். ஒரு பேதைப் பெண்ணைக் கொலை செய்யத் துணிகிற ஆணை இந்தக் குடியரசிலின்றி வேறெங்கும் பார்க்க முடியாது. அதிலும் நீங்கள் இந்தக் குடியரசின் வலக் கைபோன்ற சர்வாதிகாரி. ஒரு பெண்ணைக் கொலைசெய்ய அதிலும் மறைவாக—மற்றவர் கண்ணுக்குத் தெரியாது—ஆதரவற்ற பெண்ணை—தாய், தந்தையர், உற்றார், உறவினர் இல்லாத இடத்தில் கொலைசெய்யத் துணிகிற வீரரை சர்வாதிகாரியாக உடைய வேனீஸில் எந்தப் பேச்சும் வீண் பேச்சுதான்-ஏதோ என் முன்னோர்கள் என்னைப்போல் தவறிழைத்த பெண்களைக்கொன்றதாகச் சற்றுமுன் உம் திருவாக்கால் கூறினீர். அவர்கள் உங்களைப் போலவா செய்தார்கள். வேனீசெல்லாம் திரண்டிருந்த பொது மன்றத்திலே கொலை நடத்தினர். நீங்கள் அப்படியல்ல. இதை யாராவது கேட்டால் சிரிப்பார்கள். நீங்கள் இருவரும் இருந்து செய்கிற இந்தக கொலை வேனீஸ் குடிமக்கள் யாவரும் இருந்து செய்வது என்பது உங்கள் நினைவோ? இருக்கலாம். ஏனென்றால் நீங்கள் வேனீஸ் சர்வாதிகாரி—இந்தப் பெண் (தீஸ்பைக் காட்டி) பெண்ணல்ல—பேய்! சர்வாதிகாரியின் வைப்பாட்டி—போதாதா—வேறு குடிமக்கள் எதற்கு?

ஆன்: (கத்தேரினுவின் கையைப் பிடித்து) எடுத்துக் குடி நேரமாகிறது.

கத்: (நஞ்சிருக்கும் மேசையின் அருகில் நெருங்குகிறாள்) நான்சாக வேண்டுமென்பது உங்கள் முடிவு அவ்வளவுதானே! ஊம்-சரி (நஞ்சு சீஷாவை எடுக்கக் கையை நீட்டுகிறாள்) ஓ! கொடுமை! வேண்டாம்! நான் குடிக்க மாட்டேன்—இதற்குள்ளாகவா நான் இறக்கவேண்டும், வாழ்க்கைப் பாதையில் அடி எடுத்துத்தானே வைத்துள்ளேன்-அதற்குள்ளாகவா நான் இறக்க வேண்டும். நன்றாக சிந்தித்து முடிவுசெய்யுங்கள் அரசே! நீங்கள் சர்வாதிகாரி; நீங்கள் எது வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால், ஒரு பெண்—பேதமையே குடிகொண்ட ஒரு இனம்—ஆதரவற்றவள்—தற்காக்க வலியற்றவள்—உற்றார் உறவினர் அற்றவள், நட்பற்ற நங்கை-வேண்டாம். எங்கோ ஒரு மூலையில்கூட அல்லாமல் தன் வீட்டில் மற்றவர்களுக்குத் தெரியாமல் நஞ்சூட்டிக் கொல்வது இழிவான செய்கை. வேண்டாம். அரசகுடும்பத்தினர்க்குரிய பண்பல்ல. ஆண்மையல்ல—வேண்டாம்—வேண்டாம்—அம்மா! அம்மா!...அம்மா!

தீஸ்: பாவம்!

கத்: பாவம்! பாவம் என்று தானே சொன்னீர்கள்! ஆம்! நான் நன்றாகக் கேட்டேன். உங்களுக்காகிலும் அந்த இரக்கம் இருந்ததே! நீங்களே சற்றுச் சிந்தியுங்கள். என்னைக் கொலைசெய்யப் போகிறார்கள்—நான் உங்கள்மீது தவறாக ஏதேதோ எண்ணிவிட்டேன். நீங்கள் ஒருக்காலும்

இதற்கு இசைந்திருக்கமாட்டீர்கள்—பெண்ணல்லவா? பெண்மை என்பது என்னவென்று பெண்களுக்குத்தானே தெரியும்—நான யாவற்றையும் உங்களிடத்தில் விளக்கமாகக் கூறுகிறேன். நீங்கள் அவருக்குச் சொல்லுங்கள். சர்வாதிகாரி உங்கள் பேச்சைக் கேட்பார் என் அழுகையும், கூக்குரலையும் விட உங்கள் பேச்சு அவரை அடக்கி ஆட்கொள்ளும். இந்தச் செயல் ஆண்மையற்ற, இழிவான செயல் என அவருக்குச் சொல்லுங்கள். ஆம். நீங்கள் தான் சொல்லவேண்டும்' நான் ஏதேதோ ஆத்திரத்தில் புத்தியற்றுச்சொல்லி விட்டேன். என்னை மன்னியுங்கள். நான் உங்களைப் புரிந்துகொள்ளாது உங்களை நிந்தித்துப் பேசிவிட்டேன் பொறுத்துக் கொள்ளுங்கள் கோபப்படாதீர்கள். நான் கடவுளறிய சொல்கிறேன்—நான் ஒரு விநாடிகூட ஒழுங்குதவறி நடந்ததில்லை. என் கணவருக்குத் துரோகம் செய்ததே கிடையாது. சத்தியமாகச் சொல்லுகிறேன். இது வரையில் உண்மையாக கற்புள்ளவளாகவே நடந்து வருகிறேன். அவர் என்னை நம்பவில்லை. நான் சொல்லுவதையும் நம்பமாட்டார். ஆண் இனமே பெண்கள் பேச்சை நம்பாது. அது அவர்கள் உடலிலேயே ஊறிய ஒன்று. எவ்வளவு உண்மையை நாம் எடுத்துக்கூறினாலுங்கூட அவர்கள் நம்பமாட்டார்கள். நீங்கள்கூடவா நம்பமாட்டீர்கள்! என்போன்ற பெண்ணையிற்றே நீங்கள். உங்களுக்குக்கூட என் உள்ளம் தெரியவில்லை. சாவு--அதை நினைக்கும்போதே எனக்குப் பயமாக இருக்கிறதே—வேண்டாம்—வேண்டாம். என்னைச் சாகடிக்கவேண்டாம் என்று சொல்லுங்கள்.

ஆன்: ஊம்—நேரமாகிறது—ஆகட்டும்!

கத்: பார்த்தீர்களா? நான் உங்களிடம் சொல்லி உண்மையை விளக்கி, உங்கள் மனதைக் கவர்ந்துவிடுவேனும், அதைக்கூடத் தடுக்கிறர். (ஆன்ஜெல்லோவைப் பார்த்து) கொடியமனிதரைய்யா நீர்

ஆன்: போதும்! போதும் கத்தேரின! தவறுக்கு எப்போதும் தண்டனைதான். சாக்குழி—சவம் கேட்கிறது. ஏமாற்றப்பட்ட கணவன், மனைவியின் உயிரைக் கேட்கிறுன். வீணுக, எதற்காகப் பேசிப் பேசிக் காலம் போக்குகிருய்--முடியாது. கடவுள்மேல் ஆணையாகக் கூறுகிறேன். முடியாது, மன்னிக்க முடியாது. (விஷத்தைக் காட்டி) எடுத்துக்குடி.

கத்: குடிக்கமாட்டேன்.

ஆன்: என்ன? குடிக்கமாட்டாயா? சரி. அப்படியானல் சரி.

இலங்கையிலிருந்து 20,000 பேர் திரும்பினர்!

இலங்கையில் குடி உரிமை மறுக்கப்பட்டு, அதனல் இந்தியா திரும்ப வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, கடந்த ஜூன் திங்கள் முதல் தேதியிலிருந்து இந்த ஆண்டு ஏப்ரல் திங்கள்வரை சுமார் 20,000 என்று தெரிய வருகிறது.

இலங்கைக்கு மீண்டும் திரும்பிச் செல்ல உதவும் 'விசா'க்கள் ஏதுமின்றி இவர்கள் வந்துள்ளனர்.

கடந்த ஜூன் முதல் டிசம்பர் வரை இம்மாதிரி வந்தவர்கள் எண்ணிக்கை 13,000 ஆகும் என்றும் கூறப்படுகிறது.

முதல் முடிவுதான் சரி· ஏய்! யார் அங்கே என் வாளை எடு. எடுத்து வா—நானேபோய் எடுத்து வருகிறேன்.

(கோபமாக வாளெடுக்க அறைக்குள் போகிறுன்)

காட்சி 9

கத்தேரினு—தீஸ்ப்

தீஸ்: இன்னும் சில விளுடிகளே நாம் தனித்துப் பேசமுடியும். சர்வாதிகாரி அதற்குள் வந்தாலும் வரலாம். நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள். அவன் உங்களைக் காதலிக்கிறுன். உக்களுக்காக அல்ல. நீங்கள் இப்போது நினைக்கவேண்டியது அவனுக்காக—அவனுக்காக மட்டுமல்ல உங்களுக்காகவும் கூறுகிறேன். சர்வாதிகாரி சொல்வதைச் செய்யுங்கள். இல்லையென்ருல் நீங்கள் தப்ப முடியாது: இதைவிட விளக்கமாக நான் சொல்லமாட்டேன்· நான் சொல்வதை புரிந்துகொள்ள மாட்டேன் என்கிறீர்கள். சிந்திக்கமாட்டேன் என்கிறீர்கள். இப்பொழுது சற்றுமுன்புதான் பாவம்என்றுஎன் வாயிலிருந்து தப்பி வந்துவிட்டது. அந்த சர்வாதிகாரி முன்பு—பைத்தியம் நீங்கள்...அந்தச் சொல்லைப் பலதடவை உரக்கச் சொல்லிவிட்டீர்கள். சர்வாதிகாரி என்ன நினைப்பார். அவர் சந்தேகப் படமாட்டார் நான் உங்களிடத்தில் உண்மையை விளக்கிக்கூறினல் அதை மனதிலேயே காப்பாற்றுகிற நிலையில் நீங்கள் இல்லை. துடுக்குத்தனமாக அதை நீங்கள் வெளியிட்டால் திட்டமெல்லாம் தூளாகிவிடும். அதோடு யாவும் தீர்ந்தது. அதற்காகத்தான் சொல்லுகிறேன். அவர் இஷ்டம்போல் நடவுங்கள். நஞ்சுதானே குடிக்கச் சொல்கிருர். குடியுங்கள் மறுக்காதீர்கள். நஞ்சையே குடியுங்கள். வாள் வேண்டாம். நான் இதைவிட உங்களுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. அவன் உங்களைக் காதலிக்கிறுன்—யாராவது ஒருவர் நன்மை செய்யவேண்டும்—யாராவது ஒருவர் நன்றியைக், காதலை விளக்க வேண்டும். நான் சொல்வது உங்களுக்கு விளங்கவில்லை. ஊகும்—உண்மையைக் கூறக் கூடாது. நான் சொல்வதைக் கேளுங்கள்.நஞ்சைக் குடியுங்கள் மறுக்காதீர்கள்.

கத்: என்னம்மா சொல்கிறீர்கள்......

தீஸ்ப்: என்ன சொல்லுகிருரோ அதைச் செய்யுங்கள் மறுக்க வேண்டாம். ஒருவார்த்தை கூடக் கூறவேண்டாம்—உம் மணுளர் என்மட்டில் வைத்திருக்கிற நம்பிக்கையைக் கெடுக்காதீர்கள். தெரிகிறதா? உங்கள் வாய் ஓட்டை நான் ஒன்றும் சொல்லமாட்டேன். இங்கு இந்த அறையில் ஒரு பெண் சாகப்போகிருள். ஆனுல், நீங்களல்ல—நான் சொல்வதைக் கேளுங்கள். மறுக்கவேண்டாம்—நஞ்சைக் குடியுங்கள்.

கத்: சரி. உங்கள் விருப்பம் போல் ஆகட்டும். அப்படியே செய்கிறேன். அதோ அவர் திரும்பி வருகிற ஓசை கேட்கிறது·

தீஸ்: (அறைப் பக்கம் ஓடுகிருள்—கதவு திறக்கிறது) அரசே! வேண்டாம்—வாள் வேண்டாம். தனியே வாருங்கள்—தனியே வாருங்கள்.

[வேலையாட்கள் வாளை எடுத்துக்கொண்டுவந்து பக்கத்து அறையில் நிற்கின்றனர். ஆன்ழெல்லோ வருகிருர்.]

—தொடரும்.

மலர்க்காடு

திருவாரூரைச் சேர்ந்த தமிழ ரொருவரை, உலகஞ் சுற்றிய தமிழரான திரு. ஏ. கே. செட்டியார் நியூயார்க்கில் சந்தித்த சேதியொன்றைச் சின்னுட்களுக்கு முன் ஓர் பத்திரிகையில் எழுதியிருந்தார்.

அந்தத் தமிழர் (அவர் பெயர் நினைவுக்கு வரவில்லை) தமிழகத்தை விட்டுப் போய்ப் பல ஆண்டுகள் அமெரிக்காவிலேயே வாழ்ந்து அந்நாட்டுக் குடிமகனுகவே மாறிய பின்னுங் கூட, "இந்தப் பாழாய்ப் போன" தமிழ் மீது அவருக்கு இருந்த பற்றுப் போகவேயில்லை.

எல்லாத் தாய்மொழிகளுக்கும் அந்த 'வல்லமை' இருக்கத்தான் செய்யும். பழகிய மொழியைக் கேட்க இயலாத கிளியொன்று இறந்த கதை — கிளியே அப்படி யென்ருல், ஆறறிவு படைத்த மனிதன்?—சொல்லவும் வேண்டுமா?

தமிழகம் போலவே இருந்தாலும் தமிழகத்தைவிட்டுக் கடலாலும், மொழியாலும் பிரிக்கப் பட்ட நாடு இலங்கை. அங்கே ஆயிரமாயிரம் தமிழர்கள் பல அவதிகளுக்கு நடுவே வாழ்கிருர்கள்.

எந்த அவதியிருந்தாலும் தங்கள் "உரிமைக் குரல்;" "ஆனந்த(ம்)ன்" — இதைகளை விடமுடியவில்லை. இதற்குச் சான்ருக இருந்து தமிழ்ப் பணி ஆற்றிவரும் நல்ல தமிழ் ஏடுகள் தான் "உரிமைக் குரல்",—"ஆனந்தன்."

(1) "உரிமைக் குரல்"
திங்கள் இதழ்,
விலை 15 சதம்,
இலங்கை.

(2) "ஆனந்தன்"
கிழமை இதழ்,
விலை 10 சதம்
யாழ்ப்பாணம்,
இலங்கை.

* * *

"நம் கொள்கை" என்ற தலைப்பிட்ட சிறு புத்தகம் ஒன்று வரப் பெற்ருேம். எல். வீரராசன் எனும் எழுத்தாளர், நமது கொள்கை, திராவிடநாடு எது? என்று இந்தத் தலைப்புகளை வைத்துக்கொண்டு திராவிட ரியக்கத்தின் கொள்கைகளை விளக்க முயன்றிருக்கிருர்.

இந்த "வீண்" வேலையில் அவர் இறங்கி இருக்கக்கூடாது என்பது தான் எமது தாழ்ந்த கருத்து.

ஏனென்ருல் கழகங்களின் அனுமதியோ அங்கிகாரமோ இல்லாமல் இந்தப் பெரிய செயலில் ஈடுபடுவது தவறு. இதை உணராமல் செய்வதால் விளக்கங்கள் ஏற்படுவதற்கு மாருக ஐயப்பாடுகளும், மாச்சரியங்களும் ஏற்பட ஏதுவாகும்.

* * *

"பேரறிஞர் அம்பேத்கார் வெட்டிப் பேச்சு பேசிவரும் வெறுந் தலைவர் அல்ல; இந்த ஊரறியும்: உலகறியும்; அறியும் உள்ளம்!" அவர்,

"ஒடுக்கப்பட்ட எண்கோடி மக்கள் உள்ளத் தொளிர்கின்ற திரு விளக்கு! பேதத்தாலே தடுக்கப் பட்ட சாதி இந்துக் கோட்டை தன்னைத் தகர்த்தெறியும் அணுக் குண்டு"

கரப்பான் பூச்சி ஓட்டப் போட்டி

கல்கத்தாவில் விசித்திர விளையாட்டு

சென்ற ஞாயிற்றுக்கிழமை எட்டு கரப்பான் பூச்சிகள் ஓட்டப் போட்டி ஒன்று இங்கு நடைபெற்றது.

கல்கத்தாவைச் சேர்ந்த விளையாட்டு ஸ்தாபனமான அபர்டானி சங்க ஸ்தாபன காரியாலயத்தில் இந்த புதிய பந்தயம் நடைபெற்றது.

10 வயது பள்ளிச் சிறுவன் திரு சிதாஸ்ஜு நாராயணனுக்குச் சொந்தமான 'பூசாகட்லா' என்ற கரப்பான் பூச்சி 15 அடி தூரத்தை 11 நிமிடம் 3 வினாடிகளில் கடந்து அபார்தானி கேடயத்தைப் பெற்றது. 'பொக்கு' என்ற கரப்பான்பூச்சி இதே தூரத்தை 12 நிமிடம் 4 வினாடிகளில் கடந்து இரண்டாவதாக வந்தது.

'சூட்டார்' என்ற கரப்பான் பூச்சி இந்த தூரத்தை 14 நிமிடம் 13 வினாடிகளில் கடந்து மூன்றாவதாக வந்தது.

கண்ணாடியால் மூடப்பட்ட ஒரு மரப்பலகையில் ஒவ்வொரு கரப்பான் பூச்சியும் ஓட வாய்க்கால் வெட்டப்பட்டிருந்தது.

கரப்பான் பூச்சிக்களுக்கு முன்பு வைக்கப்பட்டிருந்த உலோகக் குச்சிகளை நீக்கியதே ஓட்டப் போட்டியின் ஆரம்ப சமிக்ஞையாக அறிவிக்கப் பட்டது. விளையாட்டு விதிகளின்படி பெட்டிங் அனுமதிக்கப் படாமலிருந்ததால் புக்கிகள் வரவில்லை.

இதே மாதிரியான போட்டி மீண்டும் ஜூனில் நடைபெறுமென்று அபர்தானி சங்கக் காரியதரிசி அறிவித்தார். இதில் எல்லா ஜாதி கரப்பான் பூச்சிகளும் கலந்துகொள்ளும்.

இந்தச் சிறப்புக்குரிய தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவரான அம்பேத்காரின் திரு உருவந் தாங்கி வந்த "அரண்" வரப்பெற்றோம். இந்த அரண் காகித அரணாக இராமல், அணுக்குண்டாலும் தகர்க்கப்பட முடியாத அரணாகத் தாழ்த்தப்பட்டோருக்கு இருக்கவேண்டுமென வாழ்த்துகிறோம்.

"அரண்"
14, திருவள்ளூர் ஹைரோடு,
வில்லிவாக்கம்
சென்னை.

* * *

சிறந்த எழுத்தாளரும், தமிழ் உணர்ச்சி மிக்கவருமான டர்பன். ச. மு. (பிள்ளை) அவர்களை ஆசிரியராகக் கொண்டு, டர்பனிலிருந்து (தெ. ஆப்பிரிக்கா) வெளியாகும் "தமிழ் மணி" வரப்பெற்றோம்.

"இருண்ட அந்த நாட்டிலே" வாழும் தமிழ் மக்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டும் இசைமணியாக; ஒளிதரும் மணியாக இன்பத் தமிழ் மணியாக, **தமிழ் மணி** தொண்டாற்ற வேண்டுமென்பது எம் மனங்கனிந்த பேரவா.

தமிழ் மணிக்கு வாழ்த்தோடு ஒரு வேண்டுகோள். பத்திரிகை முழுதும் பரந்து கிடக்கும் ஆங்கில விளம்பரங்களைக் குறைத்து நல்ல தமிழ் விளம்பரங்களையும், உயரிய கருத்துக்களையும் நிரப்பித் "தமிழோசை" செய்ய விரும்புகிறோம்.

தமிழ் ஒலிக்க!
தமிழ் மணி ஒலிக்க!

—"கலப்பை"

உலக அரங்கம்

புற்றுநோய்க்கு அணுசக்தி மருந்து

பர்க்ளி, கலிபோர்னியா, ஏப்: 29—

மார்பில் புற்றுநோய் ஏற்பட்டிருக்கும் நோயாளிகள் பிழைக்க அணுக்கதிரியக்கமுள்ள பாஸ்பரஸ் நன்கு பயன்படும் என கலிபோர்னிய சர்வகலாசாலையின் இரு விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். தாங்கள் 1951-ம் வருஷம் முதல் ரண சிகிச்சை, எக்ஸ்ரே இவற்றோடு கூட இச் சிகிச்சை முறையை உபயோகிப்பதாக அமெரிக்க நாடுகள் ரேடியாலஜி மகாநாட்டில் டாக்டர்கள் பெர்ட்ராம் வி. ஏ. லோபீர், எச். க்ளென்பெல் இருவரும் கூறினார்கள்.

சூரிய கிரஹணத்தைப் பற்றி ஆராய இலங்கைக்கு இந்திய கோஷ்டி செல்லும்

இந்திய வானிலை ஆராய்ச்சி இலாகாவை சேர்ந்த எழுவர் கொண்ட கோஷ்டி ஒன்று, ஜூன் மாதம் 20-ந் தேதியன்று ஏற்படும் பூரண சூரிய கிரஹணம் பற்றி ஆராய்வதற்காக இலங்கைக்குச் செல்லும். முழு கிரஹணம் பிடித்திருக்கும் நேரமாகிய 4 நிமிஷம் 45 வினாடிகளில் ஒளி, ரேடியோ—வான சாஸ்திரம், வாயு மண்டலம் மேற்பகுதியிலுள்ள அயன் மண்டலம், காந்தசக்தி சம்பந்தமான பரிசீலனைகளைச் செய்வார்கள்; இவற்றில் காணப்படும் மாறுபாடுகளை நுணுக்கமாகக் கவனிப்பார்கள்; முழுக் கிரஹணப் பாதை இலங்கை, பர்மா, தாய்லாந்து, வியட்னம், பிலிப்பைன் தீவுகள் வழியாகச் செல்லுகிறது. ஆனால் சூரிய கிரஹணத்தைப் பல அம்சங்களிலிருந்து பார்வையிட்டு பரிசீலனைகள் செய்வதற்குத் தோதுவான வானிலை வசதிகள் இலங்கையிலேயே இருக்குமாகையால் விஞ்ஞானத் துறையில் விசேஷமான பல விஷயங்களைக் கண்டறிவதற்காகப் பல நாடுகளிலிருந்து பல கோஷ்டிகள் இலங்கைக்குச் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வரப்போகும் கிரஹணம் பிடித்திருக்கும் நேரம் கிட்டத்தட்ட 1952-ம் வருஷத்திலேற்பட்ட கிரஹண காலத்தைப் போல் இரு மடங்கு இருக்கும்.

கழகச் செய்திகள்

நன்றி

17-4-55 அன்று நடைபெற்ற எனது தம்பி வி. எம். நாராயணன், திருமதி தேவசுந்தரி ஆகியோரின் திருமணத்திற்கு நேரில் வந்து, தம்பதிகளை வாழ்த்திய உயர்திரு சபாநாயகர், ஜே. சிவசண்முகம், கனம் மந்திரி பரமேஸ்வரன், திருவாளர்கள் வேலாயுதபாணி, கெங்காதர உபாசகர், ஏ. பர்னன்டோ, வேணுகோபால பாகவதர், செங்கல்வராயர், இராமலிங்கம், அண்ணமலை இன்னும் அன்று நேரில் வந்திருந்தவர்களுக்கும், வாழ்த்துச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எனது மனம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,
வி. எம். எஸ். மணி.

பெங்களூர் டாஸ்கர்டவுன் கார்ப்பரேஷன் ஹைஸ்கூல் (பிளாக் பள்ளி) மைதானத்தில் மே மாதம் **14, 15** தேதிகளில் திருக்குறள் மாநாடு நடைபெறும். மைசூர் மாநிலத்தில் திருக்குறளைப் பரப்ப வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் அரசியல் கலப்பற்ற இந்தத் திருக்குறள் மாநாடு நடைபெற இருக்கின்றது. மா நாட்டில் திருக்குறள் பற்றிய ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் நடைபெறும். இசை, நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகளும் உண்டு.

நகைச்சுவை மன்னர் என். எஸ். கிருஷ்ணன் கோஷ்டியார் "வள்ளுவர் காந்தியார் வில்லுப்பாட்டு" என்ற கலை நிகழ்ச்சியைக் கொடுக்க இசைந்துள்ளார்கள்.

25க்கு மேற்பட்ட தலை சிறந்த தமிழ்ப் பேறறிஞர்களுக்கு சொற்பொழி வாற்ற அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது.

கீழ்க்கண்டோர் வருவதாகக் கடிதம் எழுதியுள்ளனர். வரலாற்றுப் பேராசிரியர் திரு. தி. வை. சொக்கப்பா எம். ஏ., சென்னை வழக்கறிஞர் திரு. அனந்தநாயகி பீ. ஏ. பீ. எல்., திரு. கே. ஏ. பி. விஸ்வநாதம், திரு. புலவர் குழந்தை, திரு. தி. பொ. வேதாசலம் பீ. ஏ. பீ. எல்., பேராசிரியர் திரு. க. அன்பழகன் எம். ஏ., புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், திரு. இலக்குவனர் எம். ஏ., பன்மொழிப் புலவர். தெ. பொ. மீனட்சி சுந்தரனர் எம். ஏ., பீ.எல்., எம். ஓ. எல். என்போர்.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர், திரு. ரா. பி. சேதுப்பிள்ளை பீ. ஏ. பீ. எல். டாக்டர் சோமசுந்தர பாரதியார் எம். ஏ. பீ. எல்., நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை, திரு. நெடுஞ்செழியன் எம். ஏ., செட்டிநாட்டு அரசர் முத்தையச் செட்டியார், டாக்டர் அழகப்பச் செட்டியார், திரு குன்றங்குடி அடிகளார் முதலியோர் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிருர்கள்.

மாநாட்டுச் சார்பில் திருக்குறள் கண்காட்சி நடத்த முடிவு செய்துள்ளோம், குறளன்பர்கள் குறள்

பற்றிய ஓவியங்களோ, ஏட்டுச் சுவடிகளோ அனுப்பிவைத்தால் அதற்காகும் தபாற் செலவுகளை ஏற்றுக் கொண்டு பாதுகாப்பாகத திருப்பி அனுப்பப்பெறும். 15000 மக்கள் பந்தலில் அமர்ந்து மாநாட்டு நிகழ்ச்சிகளை கவனிக்க வேண்டிய ஏற்பாடுகள் நடந்து வருகின்றது. திருக்குறளை யானை மீதேற்றி ஊர் வலம்வர ஏற்பாடாகி யுள்ளது. மாணவர்களுக்கு மாநாட்டுச் சார்பில் திருக்குறள் சம்மந்தமான கட்டுரைப் போட்டிகளும், சொற்பொழிவுப் போட்டிகளும் நடைபெறும். தேதி பின்னர் அறிவிக்கப்பெறும்.

மாநாட்டுக் கட்டணம் புரவலர் ரூ. 25ம் மேலும் வரவேற்பாளர் ரூ. 5, பிரதி நிதிகள் ரூ. 2 பார்வையாளர் ஆண்கள் ரூ. 1. பெண்கள் அணா 8.

கடிதம் எழுதுவோர் செயலாளர் திருக்குறள் மாநாடு, கார்ப்பரேஷன் ஹைஸ்கூல், டாஸ்கர்டவுன், பெங்களூர்-1 என்ற விலாசத்திற்கு எழுதி விபரம் அறியவும்.

க. சுப்ரமணியம்
இணைச்செயலாளர்
31-3-55

கலை வளர்ச்சி நாடக மன்றம்

தில்லை. ஆ. பாரி அவர்களும், காஞ்சி எஸ். கலையரசு அவர்களும் சேர்ந்து "கலைவளர்ச்சி நாடக மன்றம்" ஒன்றை 9—3—55 அன்று ஆரம்பித்து இருக்கிறார்கள். இவர்களுடைய முதல் நாடகம் "மக்கள் குரல்". கதை காட்சிகள் கலையரசு பொறுப்பு எடுத்துக் கொண்டுள்ளார். வசனம், இசையமைப்பு பாரி அவர்கள் பொறுப்பு எடுத்துக் கொண்டுள்ளார். ஆதரவாளராக கலைவாணர், நகைச்சுவை அரசு என். எஸ். கிருஷ்ணன், தங்கவேலு, முதலியவர்களை நியமிக்க போகிறார்கள். கலையரசு பாரி இவர்கள் ஏழை சிறுவர்களுக்கு இலவசமாக கலை, கல்வி கற்றுக்கொடுக்க தக்க வசதிகளுக்கு முயற்சி எடுத்து வருகிறார்கள்.

புதுவை ஆ. பாரி அவர்களும், காஞ்சி, எஸ். கலையரசு அவர்களும் சேர்ந்து **கலை வளர்ச்சி நாடக மன்றம்** ஒன்றை 9-3-55 அன்று ஆரம்பித்து இருக்கிறார்கள். இவர்களுடைய முதல் நாடகம் **மக்கள்**

கோயில்களில் தமிழில் அர்சனை

சொன்னை ராஜய ஆலயங்களில் வடமொழிக்குப் பதில் தமிழில் அர்ச்சனை செய்வதை அமுல் நடத்த வேண்டுமானால் சட்ட மூலம்தான் அதைச் செய்ய வேண்டும் என்று கோயில் நிர்வாக இலாகா அதிகாரி ஒருவர் கூறினார்.

அநேக ஆண்டுகளாக இருந்து வருவதை மாற்ற வேண்டும் என்றால் சட்டத்தின் ஆதரவு இல்லாமல் அதைச் செய்ய முடியாது என்று அவர் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:--

அர்ச்சனை செய்ய எந்த மொழியை உபயோகித்தாலும் அது பக்தியைத் தூண்டக்கூடியதாக இருக்க வேண்டும். சொல்லும் மந்திரங்கள் சரியாக உச்சரிக்கப்பட வேண்டும், கேட்பவர்களுக்கு மயிர் கூச்செரிய வேண்டும்.

தேவாரம் இனிமையாகப் பாடப் பட்டால் பக்தியை கிளப்புகிறது. சரியாகப் பாடாவிட்டால் பக்தியைக் கிளப்புவதில்லை.

அர்ச்சகர்கள் மந்திரங்களை நன்றாக உச்சரிக்கவும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்

நூல். கதை, காட்சிகள், கலையரசு பொறுப்பு எடுத்துக் கொண்டுள்ளார். வசனம், இசையமைப்பு பாரி அவர்கள் பொறுப்பு எடுத்துக் கொண்டுள்ளார். மேலும் மன்றத்தின் ஆதரவாளராக கலைவாணர், நகைச்சுவை அரசு என். எஸ். கிருஷ்ணன், சகஸ்ரநாமம், தங்கவேலு முதலியவர்களை நியமிக்க இருக்கிறார்கள்.

கலையரசு, பாரி இவர்கள் ஏழைச் சிறுவர்களுக்கு இலவசமாகக் கலை, கல்வி கற்றுக் கொடுக்கத் தக்க வசதிகளுக்கு முயற்சி எடுத்து வருகிறார்கள்.

கடந்த 27-3-55-ம் தேதி காலை 10 மணிக்கு பெங்களூர் டாபீள் பேட்டை தி. மு. க. பொதுக்குழு தோழர் எல். அன்பழகன் அவர்கள் தலைமையில்கூடி கீழ்க்கண்ட தோழர்களை ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்-பழம் நீ. அரங்கண்ணல், தோழர் அடியான், மாவட்டப் பிரதிநிதிகள்-புத்தன், அன்பழகன், பொருளாளர்-பொறுப்பாளர்-தோழர் அ. ச. அழகிரிசாமி, சொ. தலைவர்-இரா. தே. செல்வம் மற்றும் ஒன்பதுபேர்கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

பெத்தம்பட்டி கிளைக் கழகத்தேர்தல் 27-3-55 ஞாயிறு இரவு 10 மணிக்கு செயற்குழு கூடிற்று. பெத்தம்பட்டி முன்னாள் செயலாளர் பை. கிருட்டிணன் தலைமையில் செயலாளர், மாவட்ட உறுப்பினராக மா. சக்கரையும், பொருளாளராக-சின்ன முனியனையும் மற்றும் 11 பேர் செயற்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நினைவு நாள்

10—3—55-மாலை 7-மணியளவில் மன்றச்சார்பாகப்பாண்டியனார் நினைவுநாள் விழா அன்பகத்தில் நடந்தது. விழாவிற்கு நாஞ்சில் ஜி. ராசாமணி அவர்கள் தலைமை தாங்கினார்கள். தலைவர் முன்னுரைக்குப்பின் தோழர்கள் பலர் சொற்பொழி வாற்றினார்கள். கூட்டத்தில் அரங்கநாதன், எம். எஸ். பெரியசாமி, கவிஞர் கண்ணதாசன் தந்தை சாத்தப்பன், பி. வி. நாராயணசாமி ஆகியோர்களுக்கு அனுதாபத் தீர்மானம்நிறைவேற்றப்பட்டது. தலைவர் முடிவுரைக்குப்பின், செயலாளர் மா. இரா. குறள்தாசன் நன்றி நவிலக் கூட்டம் இனிது கலைந்தது.

தெரிந்து கொள்ளுங்கள்

இந்தியத் துணைக்கண்டத்தில் 27 சதுர மைல் பிரதேசத்துக்கு ஒன்று வீதமும், 7,773 நபர்களுக்கு ஒன்று வீதமும் அஞ்சல் நிலையங்கள் உள்ளன.

வெளி நாடுகளிலிருந்து **இறக்குமதி செய்யப்பட்ட** பாகங்களைக் கொண்டு டிராக்டர் களைத் தயாரிக்கும் வேலையில் தற்போது இரண்டு கம்பெனிகள் ஈடுபட்டுள்ளன. மற்றும், டிராக்டர்கள் கொண்டு இழுக்கப் படும் யந்திர சாதனங்கள் நீங்கலாக, இதர விவசாய யந்திர சாதனங்களின் உற்பத்தியில் சுமார் 60 தொழிற்சாலைகள் ஈடுபட்டுள்ளன.

1954-ம் ஆண்டில், இந்தியத் துணைக் கண்டத்தில் தயாரான கைக்குத்தல் அரிசியின் மொத்த அளவு சுமார் 1,47,64,000 டன் என்று மதிப்பிடப்பட்டிருக் கிறது. 1953-ம் ஆண்டில் உற்பத்தியானது 1,29,14,000 டன்.

கேள்விகள்

கே: தவறி விழுந்த பெண்ணை விவாகம் செய்து வாழ்க்கையில் நேர்மையுடன் வாழ்ந்தாலும், அவள் உலகத்தினரால் உத்தமி எனக் கருதப்படுவாளா?

—ஆர். இராமசாமி,
மைசூர்.

ப: நண்பரே! உலகத்தார் என்ன கருதுகின்றூர் என்று ஆராய்வதற்கல்ல நாம் வாழ்வது; வாழ்வு நமக்கு இனிக்கிறதா என்று பார்த்து இனிக்கும் வாழ்வாலுல் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதற்கெல்லாம் உலகின் கருத்தை அறிய வேண்டியதில்லே.

கே: ஒரே இதயத்தில் அன்பும் அக்கிரமும் கலந்திருக்க முடியுமா?

—த. மு. குருசாமி,
ஏழூர்.

ப: ஒரே கிண்ணத்தில் பாலும் விஷமும் கலந்திருப்பதில்லேயா?

கே: நீங்கள் எதில் பெரியவர்? அறிவிலா? குணத்திலா? நம்பிக்கையிலா?

—கே. ஏ. சுல்தான்,
இலங்கை.

ப: அறிவிலும், குணத்திலும், உண்மையிடம் நம்பிக்கை கொள்வதிலும் ஆவல் கொண்ட பெரியவர்களேத் தேடி அலேவதில் பெரியவன்.

கே: தன் நாட்டில் வாழ வழியின்றி அந்நிய நாடு சென்றுள்ள தன் கணவனே எண்ணி ஏங்கும் மனேவி ஒருவளுக்கு அக் காதலன் செய்யும் முதல் கடமை என்ன? காதலர் பிரியா வண்ணமிருக்க நம் திராவிடத் தாய் இனி மேலாவது ஏதாவது சிந்தனே செய்வாளா?

—கே. கே. எம். வி.,
பள்ளபட்டி.

கோயிலுக்குள் போக காகா கலேல்கருக்கு அனுமதியில்லே

இன்று மகாவீர ஜயந்தி கூட்டத்தில் பேசிய காகா கலேல்கர் (எம். பி.) கூறியதாவது:-

ஆஜ்மீரில் என்னே ஜெயின மதத்தைச் சேராதவன், என்ற காரணத்தால் ஒரு கோயிலுக்குள் நுழைய அனுமதி மறுத்து விட்டனர். இந்த அனுபவத்திற்காக வருந்துகிறேன். ஹரிஜனங்கள் உள்ளிட்ட எல்லா ஜெயினரல்லாதவர்களுக்கும் ஜெயினக் கோவில்களேத் திறந்துவிட வேண்டுமென்றூர் டாக்டர் ஹீராலால். மகாத்மாவின் தத்துவத்தை விளக்கும் 'சர்வோதயம்' என்ற பதம் புராதன ஜெயின கிரந்தங்களில் காணப்படுகிறதென்றும் கூறினூர்.

ப: அவளை உடனே தானிருக்கும் இடத்திற்கு அழைத்துக் கொள்வதுதான் முதல் கடமை.

திராவிடத் தாய் சிந்தனை செய்யாமல் இல்லை. ஆனால் அவளே சிறை பட்டிருக்கிறாள். அவள் விடுதலை அடைந்ததும் காதலர்களை நிச்சயமாக விடுதலை செய்வாள்.

கே: பார்ப்பதற்கு அழகில்லாத பெண்பிள்ளையும் ஆணையும் எதற்கு ஒப்பிடலாம்?

—கதிர்வாணன்,
பீர்மேடு.

ப: கூரையில்லாத வீட்டிற்கும் கிளையில்லாத மரத்திற்கும் ஒப்பிடலாம்.

கே: மங்கை ஒருவள் ஆடவன் ஒருவனைக் காதலிக்கிறாள்; அவனும் அவளை உள்ளும் புறமும் நேசிக்கிறான். கல்யாணமாகு முன்பே அவனாலேயே அவள் கற்பை இழக்கிறாள். சின்னாட்கள் கழித்து இருவரும் திருமணம் செய்து கொள்ளுகிறார்கள். கல்யாணமாகு முன் கற்பை இழந்த அவள் விபச்சாரியே "தான்" என என் நண்பர் வாதாடுகிறார். நான் இல்லையென்று கூறுகிறேன். உமது அபிப்பிராயம் என்ன?

ப: ஒருவரை ஒருத்தி நன்கு புரிந்துகொண்டு அவனையே கணவனாகத் தன் மனதில் என்று தீர்மானித்து விடுகிறாளோ அன்று முதல் அவளுடைய உரிமையுள்ள கணவனாகிறான். அது தவறல்ல! கல்யாணம் என்பது புறச் சடங்கு. உறவினர்களுக்கு இவர்கள் தம்பதிகள் என்று காட்டும் ஒரு திருவிழாவே அன்றி வேறில்லை. எனவே ஒரு பெண் ஒருவனையே நம்பி இருப்பது தவறில்லை. கற்பிழந்தால் என்றால் கணவனுக்குத் துரோகம் செய்து அடுத்தவனை நாடுதல் போன்ற இழிவானது. ஒருவனுடனே இருப்பது கற்பிழத்தலாகாது.

கே: கடமை எனக்கட்சிப்பேரைச் சொல்லிக் காசு பறிக்கும் கயவர்கள், பொதுநலம் எனப் பேசி சுயநலம் காக்கப் பாடுபடும் சோம்பேறிகள், பொதுவுடமையைத் தன்னுடையதாக்கிக் கொண்டு காலம் கடத்தும் கபோதிகள், மனிதன் என்ற பதத்திற்கு விளக்கம் தெரியாத வீணர்கள் என்று ஒழிவார்கள்? கிளம்புமா விடி வெள்ளி?

—தி. சு. ம,
தில்லை.

ப: இந்த நாட்டு மக்கள் அனைவரும் கல்வி, கேள்வி, ஆராய்ச்சிகளில் சிறந்தவாராய், எதையும் பகுத்து உணரும் பண்புள்ளவர்களாய் என்று மாறுகிறார்களோ அன்றே நீர் குறிப்பிட்ட சமுதாய விரோதிகள் ஒழிவர். உண்மை விடி வெள்ளி நிச்சயமாகச் சுடர் விட்டுப் பிரகாசிக்கும்.

திராவிட நாட்டு மாணவன் தீரம்

தென்னாட்டிலிருந்து இலண்டனுக்குச் சென்றுள்ள கோபால் என்னும் பத்து வயது மாணவன் பிரிட்டிஷ் இளைஞன் ஒருவனை தேம்ஸ் நதியில் மூழ்காமல் காப்பாற்றினான்.

Printed and Published by S. Francis, at Srimagal Press, 122, Varadamuthiappan St., Madras-1 Editor: Palvannan.

புதிய தொடர்கதை
ஆசைத்தம்பி எழுதும்
காதலும்
கண்ணீரும்
கலைமன்றம்
21.5.55 இதழில் ஆரம்பமாகிறது